விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகளில் இருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 16 வெள்ளிக்கிழமை (30.03.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101

## எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை
### மாணவி உயிர்மாய்ப்பு

(முல்லைத்தீவு)

வெளியாகியுள்ள 2017 ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை முடிவுகளில் தனக்கு எதிர்பார்த்த சித்தி கிடைக்க வில்லை என்பதற்காக புதுக்குடியிருப்பு கைவேலி மருதமடு வீதியைச் சேர்ந்த 23

## உயிரிழந்த மாணவனுக்கு

9A சித்தி



11

## எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர்
# உங்கள் தந்தையோடு இணைந்து கொள்வீர்கள்

### ஆனந்தசுதாகரனின் குழந்தைகளுக்கு ஜனாதிபதி மைத்திரி வாக்குறுதி

(கொழும்பு)

எதிர்வரும் சித்திரை புத்தாண்டுக்கு முன்னர் உங்கள் தந்தையை சிறையிலிருந்து விடுவித்து உங்களிடம் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என, அரசியல் கைதியான ஆனந்தசுதாகரனின் குழந்தைகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி அளித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## வடக்கில் இராணுவத்தினர் வசமுள்ள பொதுமக்கள் காணிகள் விடுவிக்கப்படும்
### முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் இராணுவத் தளபதி உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருக்கின்ற பொது மக்களுக்குச் சொந்தமான காணிகள் அனைத்தும் மிக விரைவில் விடுவிக்கப்படுமென இராணுவத் தளபதி மகேஸ் சேனாநாயக்க உறுதியளித்துள்ள 23



### நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில்
## ஜனாதிபதி, பிரதமர் ரணிலுடன் சுமந்திரன் எம்.பி. பேச்சு

(கொழும்பு)

கூட்டு அரசைப் பதவியில் வைத்திருக்கவேண்டிய தேவை எமக்கில்லை.

எங்களின் கோரிக்கைகளுக்கு எதிர்வரும் 2ஆம் திகதிக்கிடையில் இணக்கம் தெரிவித்தாலே 23



## பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை
### தோற்கடிக்க ஐ.தே.க. தீர்மானம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை தோற்கடிப்பதற்கு, ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுசெயலாளர் அமைச்சர் அகில விராஜ் காரியவசம் இந்த தகவலை வழங்கினார். 23

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை
## பங்காளியான புளொட்டிடம் மண் கௌவிய தமிழரசுக் கட்சி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு சுன்னாகம் பிரதேச சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழரசுக் கட்சியும் புளொட் அமைப்பும் பிரிந்து நின்றும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளுக்கிடையில் பல முனைகளில் கடும் போட்டி நிலவியிருந்த நிலையில் இறுதியாக கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி 23

## வேலணை பிரதேசபை ஈ.பி.டி.பி வசமானது

(யாழ்ப்பாணம்)

தீவகத்தின் வேலணைப் பிரதேசசபையை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி மீண்டும் கைப்பற்றியுள்ளது.

தமிழர் விடுதலை கூட்டணி, பொதுஜன பெரமுன ஆகியவற்றின் ஆதரவுடனேயே ஈ.பி.டி.பி சபையைக் கைப்பற்றியுள்ளது. இச்சபையின் தவிசாளராக 23

### ஜனாதிபதி மைத்திரியின்
## அதிகாரத்தில் பாதிப்பு இல்லை
### சுதந்திரக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)


பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணை காரணமாக 23

## 2017ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண பரீட்சை யாழ்.மாணவி மிருதி தேசியரீதியில் முதலிடம்
### வேம்படி, யாழ் இந்து முன்னிலையில்

(யாழ்ப்பாணம்)

2017 ஆம் ஆண்டுக்கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலம் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

2017 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர 23



### கொழும்பு ரயில் விபத்தில்
## யாழ் இளைஞன் உயிரிழப்பு

(கொழும்பு)

கொழும்பு வெள்ளவத்தையில் தொடருந்துடன் மோதுண்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் உயிரிழந்தார். 23

## ஆளுநர் கூரே தமிழ் மக்களுக்கு சிறந்த சேவையாற்றிய நிர்வாகியாம்
### இடமாற்றத்தினை இரத்துச்செய்யக்கோரி ஜனாதிபதி மைத்திரிக்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தமிழ் மக்களுக்கு சிறந்த சேவையாற்றிய நிர்வாகியாம்.

அவரின் இடமாற்றத்தினை இரத்துச் செய்யக்கோரி ஜனாதிபதிக்கு அவசர கடிதம் 23

## ஈழப் போரை நன்கறிந்த டிகார்லோ ஐ.நா.உதவிச் செயலராக நியமனம்

(ஜெனிவா)

இலங்கையில் இறுதிப் போரில் சிக்குண்டுள்ள தமிழ் மக்களை மீட்க போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வாதிட்டவரும் போர் முடிவுக்கு வந்த பின் இலங்கை மீது போர்க்குற்ற விசாரணையைக் கொண்டு வரவேண்டும் என்பதில் உறுதியாகவிருந்தவருமான ஐ.நாவுக்கான அமெரிக்காவின் முன்னாள் பிரதித் தூதுவர் றோஸ்மேரி டிகார்லோ, ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான 23

### க.பொ.த சா/த பரீட்சையில்
## சித்தியடையாதோர் உயர்தரம் பயில வாய்ப்பு

(கொழும்பு)

2017ஆம் ஆண்டின் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றியவர்களில் சித்தியடையாதோரில் சுமார் 1½ இலட்சம் பேர், தொழில்முறைக் கல்வியின் ஊடாக உயர் தரத்தைத் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும்
பாராளுமன்ற உறுப்பினருமான
கௌரவ **வாசுதேவ நாணயக்கார** அவர்களின்

**யாழ்.விஜயம் 30.03.2018 வெள்ளிக்கிழமை**

இன்று வெள்ளிக்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ **வாசுதேவ நாணயக்கார** அவர்கள் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகிறார். அவருடைய விஜயத்தை முன்னிட்டு இன்று காலை 8.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்வார். ஆகவே தோழர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**கலாநிதி சி.மோகன்**
ஜனநாயக இடதுசாரி முன்னணியின் சிரேஷ்ட தலைவர்

# 3766 ஆசிரியர்களுக்கு இடமாற்றக் கடிதம்

(கொழும்பு)

நாடு முழுவதுமுள்ள தேசிய பாடசாலைகளில் சேவை புரியும் 3766 ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கான கடிதங்கள் நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு பாடசாலையில் 10 வருட சேவைக் காலத்தை நிறைவு செய்த ஆசிரியர்களுக்கே இவ்வாறு இடமாற்றம் குறித்த கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இடமாற்றம் செய்வதற்கு அண்மையில் பாடசாலையொன்று காணப்படாமை, புரிந்துணர்வின் அடிப்படையில் உடன் மாற்றம் செய்துகொள்வதற்கும் உரிய ஆசிரியர்கள் காணப்படாமை ஆகிய காரணங்களின் போது, 10 வருடங்கள் நிறைவடைந்திருந்த போதிலும் இடமாற்றம் வழங்கப்பட மாட்டாது எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம)

## ஒப்பந்த சேவை

கட்டிடங்கள் திருத்தம், புதிய கட்டிட அமைப்பு வேலைகள் துரிதமாகவும் தரமாகவும் செய்து வழங்கப்படும். (C-2053)

**077 958 5921**

## துயர் பகிர்கின்றோம்



**கண்ணம்மா தர்மலிங்கம்**

**(அதிபர், 1986 - 1987)**

எமது முன்னாள் அதிபர் திருமதி கண்ணம்மா தர்மலிங்கம் அவர்கள் காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை**

(3451)

## ஆடம்பர வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு

யாழ்.நகரில் அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு. திருமண நிகழ்வுகள், சுபகாரியங்கள் வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு சகல வசதிகளும் உண்டு. A/C, Non A/C தளபாட வசதிகள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் சமையல் பாத்திரங்கள் என அனைத்து வசதிகளும் உண்டு.

குறிப்பு:
சுபநிகழ்வுகளுக்குரிய அனைத்து வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு:- **077 311 0015** (3444)

## விற்பனைக்கு

அவுட்போட் என்ஜின் யமகா, ஜப்பான் தயாரிப்பு பெற்றோல் என்ஜின் 25 H.P, 30 HP உடன் விற்பனைக்கு உண்டு. (C-2053)

**077 436 6704**

## பயிற்சிநெறியுடன் கூடிய தொழில்வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கிவரும் எமது **Everest** நிறுவனமானது எதிர்வரும் 6 மாத குறுகிய காலத் திட்டத்தின்படி வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் புதிய கிளைகளை நிறுவவுள்ளதால் அதற்கான பதவி வெற்றிடங்கள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| விற்பனையாளர் | O/L, தரம் 10 | அலுவலகர் | A/L Pass |
| மேற்பார்வையாளர் | O/L, A/L | களஞ்சிய காப்பாளர் | O/L Pass, A/L |

- சென்ற வருடம் (2017) O/L பரீட்சைக்கு தோற்றியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- பயிற்சியின்போது 12000 - 35000 வரையும் பின்னர் 45000 + மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும். (C-2047)

தொடர்புகளுக்கு:- **0779856671, 0771717278**

## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

வழங்கும்

## A/L 2020 மாணவர்களுக்கான ரூபா 140,000/= பெறுமதியான புலமைப்பரிசில்

**க.பொ.த (சா/த) - 2017இல் 9A சித்திகளைப் பெற்ற மாணவர்களே!**

நீங்கள் யாழ்.மத்திய கல்லூரியில் **A/L 2020** பிரிவுக்கு இணைந்து கொள்ளும் பட்சத்தில் ரூபா **140,000/=** (மாதந்தோறும் ரூபா **5,000/=**ப்படி 28 மாதங்களுக்கு) பெறுமதியான புலமைப்பரிசில்கள் உங்களுக்கு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் வருமானம் குறைந்த மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்.

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்துக்கும் மற்றும் உள்ளக புலமைப்பரிசில் திட்டத்துக்கும் உதவி புரிய விரும்பும் பழைய மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பழைய மாணவர் சங்கத் தலைவர் R.L சொலமன் (0772334215), உதவி செயலாளர் S.சுபேதர் பெர்னான்டோ (0772528824), பொருளாளர் A.கபில்நேசன் (0771457159) மற்றும் என்னுடன் (0777642379) தொடர்பு கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்ளப் படுகின்றீர்கள்.

"Central Flag must never be lowered"

**திரு.ம.வித்தியானந்தநேசன் M.Phil**
செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.
mvithiyananthanesan@gmail.com (C-2048)

## வேலையாள் தேவை

பிரபலமான ஹோட்டல் ஒன்றுக்கு

- சமையல் கோக்கி
- ரொட்டி மேக்கர்
- சாப்பாடு பரிமாறுபவர்

(3449)

T.P **0774368218, 0771926181**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் முதல்முறையாக 2017ஆம் ஆண்டின் க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் A தரச் சித்தியைப் பெற்ற (9A)

**செல்வி திருவரசு கம்ஷாயினி**



அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மேலும் செல்வன் க.ருஷாந்தன் 7ABS, செல்வி யோ. தரணிகா 6A3B, செல்வி பு.கீர்த்திகா 6A3B, செல்வி பி. பெஸ்கி 6A2BS, செல்வன் ம.சரண்யன் 5A3BS, செல்வி கு.துவாரகா 4A2B3C, செல்வன் ஜெ.நிலக்ஷன் 4A3BCS, செல்வன் செ.ஜெனோதன் 4AB3C, செல்வி செ.விதுஷா 3A5C, செல்வி யோ. கோகுலப்பிரியா 3A3B2CS, செல்வி வி.திலக்சியா 2A3BC3S ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், பணியாளர்கள், கிளி/கனகபுரம் ம.வி**

(3443)

## RAVEENS EMC

Singathin Veedu, Karaveddy East, Karaveddy

☎: 021 226 3321 ✉: info@raveensemc.com Web: www.raveensemc.com

***Mr.P.Easwaranathan** B.Sc (Hons) Ag.Dip.In.Edu*
***Justice of the Peace***
***Director***

### G.C.E O/L EXAMINATION RESULT - 2017 DEC

| No | Name | Mat (Eng) | Eng | Sci (Eng) | Hist | Tami | Reli | Com (Tam) | ICT (Eng) | Eng.Lit | Results |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | Y.Mathushanan | A | A | A | A | A | A | A | A | A | 9A |
| 02. | S.Hamshaijini | A | A | A | A | A | A | A | A | A | 9A |
| 03. | S.Aranan | A | A | A | A | A | A | A | A | B | 8A B |
| 04. | M.Thushanth | A | A | A | A | A | A | A | A | B | 8A B |
| 05. | R.Akshiya | A | A | A | A | A | A | A | A | B | 8A B |
| 06. | T.Pukaliny | A | A | A | A | A | A | A | A | B | 8A B |
| 07. | P.Ketharagan | A | A | A | A | A | A | A | A | C | 8A C |
| 08. | R.Viveka | A | A | A | A | A | A | A | A | C | 8A C |
| 09. | J.Shampavi | A | A | A | A | A | A | A | A | C | 8A C |
| 10. | U.Kishanthika | A | A | A | A | A | A | A | A | C | 8A C |
| 11. | S.Viththiya | A | A | A | A | A | A | A | A | C | 8A C |
| 12. | A.Abishegah | A | A | A | A | A | A | A | A | C | 8A C |
| 13. | L.Nirukshiya | A | A | A | A | A | A | A | A | C | 8A C |
| 14. | M.Sankeerthan | A | A | A | A | A | A | B | A | B | 7A 2B |
| 15. | J.Piraveen | A | A | A | A | A | A | B | A | C | 7A B C |
| 16. | T.Dishalini | A | A | B | A | A | A | A | A | C | 7A B C |
| 17. | S.Thanojan | B | A | A | A | A | A | B | A | C | 6A 2B C |
| 18. | J.Kajeevan | A | A | B | A | A | B | A | A | C | 6A 2B C |
| 19. | S.Mathusha | A | A | B | A | A | A | C | A | C | 6A B 2C |
| 20. | R.Abiram | B | A | C | C | A | C | B | A | B | 3A 3B 3C |

(C-2045)

# வெளிநாட்டு நீதிபதிகளை அழைத்துவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது

## சரத் அமுனுகம தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்த காலப் பகுதியில் இடம்பெற்றதாக கூறப்படும் குற்றச்செயல்களை விசாரணை செய்ய, வெளிநாட்டு நீதிபதிகளை இலங்கைக்கு அழைத்துவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்காதென, விசேட வேலைத்திட்டங்கள் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

நாட்டில் நீதிமன்றம் சுயாதீனமாக செயற்பட்டு வரும் நிலையில் வெளிநாட்டு நீதிபதிகளை அழைத்து வந்து வழக்கு விசாரணைகளை நடத்துவதற்கு எந்தத் தேவையும் இல்லை என, அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து ஜெனிவா மனித உரிமைகள் பேரவையிலும் கருத்து தெரிவித்துள்ளதாக, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# எந்தவொரு சைபர் தாக்குதலையும் எதிர்கொள்ளும் வகையில் இராணுவம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் எந்த வொரு சைபர் தாக்குதலையும் எதிர்கொள்ளும் வகையில் இராணுவம் பலப்படுத்தப்பட்டு வருவதாக இராணுவத் தளபதி லெப்டினனட் ஜெனரல் மஹேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய லெப்டினன்ட் ஜெனரல் மஹேஷ் சேனநாயக்க, இராணுவத்தில் சைபர் பாதுகாப்புப் படைப் பிரிவும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இராணுவத்தின் சமிக்ஞைப் படையணிக்கு 75 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. இதனை முன்னிட்டு கருத்தரங்கும், கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவை பற்றியும் இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

இணைய வழி சைபர் தாக்குதல்களை எதிர்கொள்ளும் ஆற்றல் இராணுவத்திற்கு உள்ளது. இந்த ஆற்றலைவலுப்படுத்தும் வேலைத்திட்டம் அமுலாகிறது. 2025 ஆம் ஆண்டு வரையிலான வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பிரதமருக்கு எதிரான பிரேரணை குறித்து சு.க.இன்னும் முடிவு எடுக்கவில்லை

## அமைச்சர் துமிந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பிர்தமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை சம்பந்தமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இதுவரை உத்தியோகபூர்வமான முடிவுகளை எடுக்கவில்லை என அமைச்சரும் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு வாக்களித்த 17 இலட்சம் மக்களை மறக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் தெரிவான உள்ளூராட்சி சபை உறுப்பினர் கள் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளும் நிகழ்வில் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க இதனை கூறியுள்ளார்.

ஒரு சிலர் ஆங்காங்கே வெளியிடும் கருத்துக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கருத்துக்கள் அல்ல எனவும் எடுக்கப்பட வேண்டிய தீர்மானம் குறித்து கட்சியின் மத்திய செயற்குழுவில் பேசப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# தேசிய நல்லிணக்க அமைச்சுக்கு ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் நாரேஹேன்பிட்டியிலுள்ள தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சுக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார். இத்துறைக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அமைச்சுக்கு சென்ற ஜனாதிபதி அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளைக் கண்காணித்ததுடன் அமைச்சின் கடந்த கால செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார்.

கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்வரும் காலங்களுக்கான திட்டங்கள் குறித்த ஆவணங்களை ஜனாதிபதி இதன்போது பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து அமைச்சு வளாகத்தை சுற்றிப் பார்வையிட்ட ஜனாதிபதி அமைச்சின் பணிக் குழாமுடன் சுமுகமாக கலந்துரையாடி விடயங்களைக் கேட்டறிந்தார். (இ-7)

# காவலரண் தீக்கிரை!



(யாழ்ப்பாணம்)

மணியந்தோட்டம் கடற்கரை வீதியில், பொலிஸார் கடமைக்குச் செல்லாதிருந்த பொலிஸ் காவலரண் ஒன்று இனந்தெரியாத நபர்களால் நேற்று அதிகாலை தீயிட்டு எரிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மணியந் தோட்டம் கடற்கரை வீதியில் கடந்த ஒருவருடத்துக்கு முன்னராக பொலிஸ் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது." அங்கு கடந்த சில மாதங்களாக பொலிஸார் கடமைக்குச் செல்லவில்லை. பொலிஸார் கடமையில் இல்லாத காரணத்தினால் அந்த பொலிஸ் காவலரணுக்குள் சமூக சீர்கேடான பல் விடயங்கள் அடிக்கடி இடம்பெறுவதாக அப்பகுதியால் சென்று வரும் பொதுமக்கள் பொலிஸாரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இருப்பினும் குறித்த காவலரணுக்கு பொலிஸார் கடமைக்குச் செல்லாத காரணத்தினால் சமூக சீர்கேடு நடவடிக்கைகள் அதிகரித்து காணப்பட்டதாகவும் அதனால் அப்பகுதியால் சென்று வரும் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்கியிருந்தனர். இந்த நிலையில் நேற்று அதிகாலை குறித்த பொலிஸ் காவலரண் தீக்கிரையாக்கப்பட்டது. இது தொடர்பாக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ-9)

சுதந்திரக்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்குமாயின் அது 2015 ஜனவரி 8 ஆம் திகதி மக்கள் வழங்கிய ஆணைக்கு புறம்பானதாக இருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் "ஜனாதிபதியை ஆட்சிக்கு கொண்டு வர உதவிய மற்றும் தியாகம் செய்து வந்தவன் என்ற முறையில்ஜனாதிபதியின் எதிர்காலம், கட்சியின் எதிர் காலம் ஆகியன குறித்த பொறுப்பு இருப்பதாகவும் எந்த விடயமாக இருந்தாலும்


## குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

**Special Treatment for Gastric Ulcer**

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலங்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966 Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


## இராசி பலன்

**மீனம்:** நீண்ட நாளைய ஆசை ஒன்று நிறைவேறும் நாள், உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மேடம்:** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் திகைப்படைவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**இடபம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்,சுப செலவுகள் கூடும் நாள்.

**கும்பம்:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நிதானத்துடன் செயற்பட்டு நின்மதி காணவேண்டிய நாள், வேலைச்சுமை அதிகரிக்கும்.

**கடகம்:** ஆதரவுக் கரம் நீட்டுபவர்களின் எண்ணிக்கை கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | சுக் | | |
| | இராசி பலன் | | ராகு. |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அவிட்டம் பகல் 12.45 மணிக்கு<br>கன்னி-சந் | | |
| சனி, செவ் | குரு | | சந் |

**30.03.2018**

பங்குனி 16, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.16 மணிக்கு

சதுர்த்தசி முன்னிரவு 7.35 மணிவரை

பூரம் முற்பகல் 7.09 மணிவரை

சுபநேரம் 6.13-7.43 மணிவரை

இராகுகாலம் 10.43-12.13 மணிவரை

பங்குனி உத்தரம், பெரிய வெள்ளி

வளவன்

**மகரம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்.


**தனுசு:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், அலைச்சல்கள் சற்று கூடும்.

**கன்னி:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புதிய அனுபவங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு.

# மெழுகு சிலையாகிறார் இந்திய அணியின் தலைவர்




டில்லியில் உள்ள மேடம் துசாட்ஸ் அருங்காட்சியகத்தில் விளையாட்டு, கலைத்துறை, அரசியல், பொதுச் சேவை போன்றவற்றில் ஈடுபட்டு வரும் பிரபலங்களுக்கு மெழுகினால் ஆன ஆள் உயர சிலை வைக்கப்பட்டுள்ளன.

இந்த வரிசையில் கிரிக்கெட் வீரர் விராட் கோலிக்கும் மெழுகு சிலை வைக்கப்பட உள்ளது. விராட் இந்திய கிரிக்கெட் அணியின் மிகச் சிறந்த வீரராக திகழ்ந்து வருகிறார். கோலி தலைமையிலான இந்திய அணி பல வெற்றிகளை கண்டுள்ளது. அவர் ஐபிஎல் தொடரில் 2013 ஆம் ஆண்டு முதல் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் தலைவராக விளையாடி வருகிறார். அவரின் வெற்றிகளை பாராட்டும் வகையில் இந்த சிலை அமைக்கப்பட உள்ளதாக கூறப்பட்டுள்ளது. சிலை அமைப்பதற்காக விராட கோலியின் உடல் அளவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து பேசிய விராட் கோலி, "மேடம் துசாட்ஸ் அருங்காட்சியகத்தில் மெழுகுச் சிலை வைக்க உள்ளது எனக்கு கிடைக்கும் மிகப்பெரிய கௌரவம். இத்தகைய வாழ்நாள் நினைவுச்சின்னம் வழங்கிய மேடம் துசாட்ஸ் குழுவிற்கு நன்றி" எனக் குறிப்பிட்டிருந்தார்.

மேடம் துசாட்ஸ் அருங்காட்சியகத்தில் கிரிக்கெட் வீரர் சச்சின், கபில் தேவ், கால்பந்து வீரர் ரொனால்டோ ஆகியோரின் மெழுகுச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# டிராவிட் என்றால் 'நேர்மை' புகழ்ந்து தள்ளிய ஹசி



கிரிக்கெட் விளையாட்டில், நேர்மைக்கு எடுத்துக்காட்டாக என்றும் என் நினைவில் வருபவர் ராகுல் டிராவிட் தான் என அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் மைக் ஹசி புகழ்ந்துள்ளார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளராகப் பொறுப்பேற்றுள்ள மைக் ஹசி, இந்திய ஜுனியர அணியின் பயிற்சியாளரும், முன்னாள் வீரருமான ராகுல டிராவிட்டை புகழ்ந்து பேசியுள்ளார். அவர் கூறுகையில், 'ராகுல் டிராவிட் என்றாலே, என் மனதிற்குள் வருவது அவர் அடித்த 28 சதங்கள் தான். இது எனக்கு என்றும் ஆச்சரியத்தையே அளிக்கும். அதேபோல், டிராவிட் என்றால் அவர் ஒரு சுவர், துடுப்பாட்ட உத்திகளைச் சிறப்பாக கையாளுபவர் என்பதெல்லாம் என நினைவில் வராது. கிரிக்கெட்டை அவர் மிக நேர்மையாக ஆடினார் என்பதுதான் என் நினைவில் நிற்கும்' என தெரிவித்துள்ளார்.

மேலும், அவுஸ்திரேலிய வீரர்கள் பந்தை சேதப்படுத்திய விவகாரம் தொடர்பாக அவர் கூறுகையில், 'அவுஸ்திரேலிய அணி இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவது கடினம்.

பந்தைச் சேதப்படுத்திய காரணத்தினால் மட்டும் அவுஸ்திரேலிய அணி தலைப்புச் செய்தியாவது முதல் முறை அல்ல. இனி வரும் நாட்கள் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு மிகக் கடினமானதாகவே இருக்கும். (க)


உ
சிவமயம்

**நாயன்மார் குருபூசை மடம்**

நாயன்மார்கட்டு - நல்லூர்

**பங்குனி முழுநிலா நாள்**
**அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்**

| | |
|---|---|
| **இடம்** | : நாயன்மார் குருபூசை மடம் |
| **காலம்** | : 31.03.2018 சனிக்கிழமை காலை 6.00 மணி |

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

இங்ஙனம்
நாயன்மார் குருபூசை மட பரிபாலன சபை

(3448)


# தண்டனை சரியானதே சச்சின் டெண்டுல்கர் தெரிவிப்பு



பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கிய அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்ரீவ் ஸ்மித் மற்றும் துணைத் தலைவர் டேவிட் வோர்னர் ஆகியோருக்கு ஓர் ஆண்டுத் தடை விதித்தமை சரியான முடிவு என்று இந்திய அணி யின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுலகர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு அணிவீரர்களும் நேர்மையுடன் விளையாட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அவுஸ்திரேலிய அணி வீரர்களுக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை.

ஆனால் கிரிக்கெட் விளையாட்டில் நேர்மையை நிலைநாட்ட சரியான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வெற்றி முக்கியம். ஆனால அதற்கான வழி உங்களுக்கு அதை விட முக்கியம்" என குறிப்பிட்டுள்ளார்.


# மரண அறிவித்தல்

## இளையதம்பி ஐயாத்துரை

**(ஓய்வுநிலை அரசாங்க அதிபர், கிளிநொச்சி)**

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12.02.1934 | 29.03.2018 |



அந்தணந்திடலை பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி ஐயாத்துரை (ஓய்வுநிலை அரசாங்க அதிபர், கிளிநொச்சி) நேற்று (29.03.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி குஞ்சுப்பிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சபாபதி - பசுபதி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான இலட்சுமி, வைத்திலிங்கம், பொன்னம்மா, நடேசு, கந்தசாமி ஆகியோரினதும் கரணவாய் தெற்கைச் சேர்ந்த கந்தையா அவர்களதும் சகோதரரும் இரஞ்சினி (ஓய்வுநிலை பிரதி அதிபர் - யா/நெல்லியடி மத்திய கல்லூரி ), பாமினி(ஆசிரியை-யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்-கரவெட்டி), சாந்தினி (ஆசிரியை-கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, கொழும்பு) சிவனேந்திரன் (Director - Universal High School,Vavuniya), தவேந்திரன்-(உதவி இயக்குநர் - தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவராசா (ஓய்வுநிலை இலிகிதர் - ப.நோ.கூ.ச, நெல்லியடி), தனபாலசிங்கம் (ஓய்வுநிலை நிலஅளவை அதிகாரி), செல்வதாஸ் (கொழும்பு), நர்மதா (Principal - Universal High School, Vavuniya), சிவானந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் துவாரகன் (Software Engineer -Warranty Soft), ஜீவந்தி (AN College, Colombo), அபிஷேகா (மாணவி - மருத்துவபீடம்), அபிலாஸ் (நெல்லியடி மத்திய கல்லூரி), சாருஜன் (மாணவன் - Universal High School), அபிஷான் (ஹாட்லிக் கல்லூரி), சகானா (ஆசிரியை - நாகர்கோவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆரவின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2018) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரணவாய் தெற்கு பூவரசந்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'இறஞ்சிதா'
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்
077 162 9972, 077 332 6008

(C-2052)



## உடுப்பிட்டி வடக்கு- நெற்கொழு

## அருள்மிகு சாமுண்டீஸ்வரி சமேத பாதாள வைரவப் பெருமான் தேவஸ்தானம்

## நவகுண்ட பக்ஷ சம்புரோட்ஷண அஷ்டபந்தன

# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்- 2018



### நெற்கொழு வைரவர் அருள் அடியார்களுக்கு கிடைக்கட்டும்!

சிவபூமியாகிய ஈழவளநாட்டில் வைரவர் ஆலயங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் மத சுதந்திரம் அற்ற போது வைரவரையே எல்லோரும் வழிபட்டு வந்தனர். அத்தகு சிறப்பு உடுப்பிட்டி வடக்கு பயிர் விளையும் புண்ணியபூமியின் மத்தியில் நெற்கொழு வைரவர் ஆலயம் அமைந்திருப்பது மகிமையானது. சிவாலயம் போன்று பெரிய ஆலயத்தை அமைத்து இன்று மஹா கும்பாபிஷேகம் காணும் பேறை பரிபாலன சபையினரும் அடியார்களும் உபயகாரர்களும் பெற்றுள்ளார்கள்.

காக்கும் எம் காவலனாக விளங்கும் வைரவர் சிவபெருமானின் ஒரு மூர்த்தமேயாவார். இன்று அனுபவமிக்க சிவாச்சாரியார்கள் இணைந்து மஹா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தி அடியார்கள் வாழ்வில் ஆனந்தம் பெறச் செய்துள்ளனர். திருப்பணியாளர்கள், உபயகாரர்கள், ஆலயபரிபாலன சபையினர் எல்லோருக்கும் வைரவசுவாமியின் அருள் கிடைக்கப்பெற்று இன்புற்று வாழ வைரவரின் பாதங்களைப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.



### ஆலய தலைவரின் சிறப்பு செய்தி

வடமாகாணம் யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு வைரவப்பெருமான் தேவஸ்தானம் பலவருடப் பழம்பெரும் சைவ ஆலய மாகும். இவ்வாலயமானது ஆறு கிராமங்களை உள்ளடக்கி நடுமத்தியில் அமைந்து இக்கிராமங்களின் மக்களுக்கு அருள் பாலித்து வருகின்றது. இங்குள்ள மக்களில் அநேகர் விவசாயத்தையே பிரதான தொழிலாக மேற்கொள்வதோடு கல்வி, அறிவு பெற்று அரச நிறுவனங்களிலும் பணி புரிகின்றனர். இவர்கள் அனைவரினதும் விருப்பமான குலதெய்வ மாகவும் ஆதிதெய்வமாகவும், பாதாள வைரவர் அருள் பாலிக்கின்றார்.

இக்கிராம மக்களின் பேருதவியோடு எம்பெருமானின் திருப்பணி வேலைகள் மிகவும் சிறப்புடன் நடைபெற்று பூர்த்தியுற்ற நிலையில் இன்று மஹா கும்பாபிஷேக பெருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வாலயத்தின் நீண்டகால தொண்டனாக செயற்பட்டுவருகின்றோம். எங்கள் ஆலயம் மிகவும் சீருடனும் சிறப்புடனும் மேன்மைபெற இவ்வாலய அடியார்களின் பேருதவியே எமக்கு ஊன்றுகோலாக அமைகிறது. வைரவ அடியார்களுக்கு நன்றி கூறுவதோடு எம் பெருமானின் மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று வைரவப் பெருமானின் அருள் ஆசிகள் அனைவருக்கும் கிடைக்க நெற்கொழு வைரவப்பெருமானின் பாதாரவிந்தங்களை தொழுது வணங்குவோம்.

திரு. பொ. சந்திரலிங்கம், தலைவர்
திரு. ம. கிருஷ்ணகுமார், செயலாளர்
திரு. சு. பத்மசுந்தரம், பொருளாளர்




### எங்கள் தேவஸ்தான பிரதமகுரு சிவ ஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர்

கெருடாவில் தொண்டைமானாற்றை பிறப்பிடமாகக் கொண்டவர் குருநாதர் கோத்திரத்தை சேர்ந்தவர் தொண்டைமானாறு வீரமாகாளி அம்மன் ஆலய பரம்பரைக் குரு. ஆதீன கர்த்தா வம்சாவழி உரித்தாளர். யா/கம்பர் மலை அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் வைத்திய கலாநிதி கதிர்வேற்பிள்ளை போன்ற பெரியோர்கள் முன்னிலையில் 2008ஆம் ஆண்டு தொடர்ச்சியாகவும் இடைவெளி எடுக்காமலும் 9 மணித்தியாலங்கள் "எனது பார்வையில் கல்விபற்றி நேற்று இன்று நாளை" எனும் தலைப்பில் சொற்பொழி வாற்றிய சாதனையாளர்.

ஆலய சேவையையும் ஆசிரியர் சேவையையும் இணைத்து பணியுரியும் சிறந்த அன்பு, பண்புள்ள நல்லதொரு குருநாதர் வாய்த்தது யாம் செய்த புண்ணியமேயாம்.

அடியார்கள்



வைரவப் பெருமான் மெய்யடியார்களே!

சிவபூமி எனத் திருமூலரால் சிறப்பிக்கப்பட்டதும் பல சித்தர்கள், அருளாளர்கள், சைவசமய வித்தகர்கள் வாழ்ந்ததும் புண்ணிய ஷேத்திரங்கள் பலவற்றை கொண்டிருப்பதுமான இலங்கை திருநாட்டின் வடபால் அமைந்த பல்வகை சிறப்புக்களும் நிறைந்த யாழ்பாடியின் யாழ்ப்பாணத்தின் வடபால் அமைந்த வளமிகு வடமராட்சியில் நீர்வளமும் நிலவளமும் நிறைந்த உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு புண்ணிய பூமியில் தான் விரும்பி எழுந்தருளி அடியவர்களுக்கு பேரருள் பாலிக்கும் சாமுண்டீஸ்வரி சமேத நெற்கொழு வைரவப் பெருமானுக்கு நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் உத்தராயண கால பூர்வபக்க பங்குனித் திங்கள் 16ஆம் நாள் (30.03.2018) இன்று வெள்ளிக்கிழமை இடப லக்கினமும் சதுர்த்தசி திதியும் சித்தயோகமும் உத்தர நட்சத்திரமும் கூடிய காலை 8.40 மணிமுதல் 9.30 மணிவரையுள்ள மகா புண்ணிய சுபமுகூர்த்தத்தில் பெரும்சாந்தி குடமுழுக்கு விழா நிகழ திருவருள் கைகூடியுள்ளது. அவ்வேளை வைரவப் பெருமான் அடியவர்கள் ஆசாரசீலராக ஆலயத்திற்கு வருகை தந்து கிரியைகளில் கலந்து எம்பெருமானின் அனுக்கிரகத்தை பெற்றுய்வீர்களாக.

### ஆலய வரலாறு

வடமராட்சிப் பிரதேசத்தின் புராதன ஆலயங்களில் உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு வைரவப் பெருமான் ஆலயமும் ஒன்றாகும். வயலும் வயல் சார்ந்த இடமாகிய உடுப்பிட்டி வடக்கில் "நெற்கொழு பதி" ஆகிய நெற்கொழு பிரதேசத்தில் தலைமை ஆலயமாகவும் தொன்மையான ஆலயமாகவும் விளங்குகிறது. "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார் தாம்வருவார்" என்னும் வாக்கிற்கு இணங்க வைரவரே பெரியதெய்வமாகவும், குலதெய்வமாகவும் இன்றும் போற்றப்படுகிறார். வைரவப் பெருமான் நெற்கொழு பிரதேசத்திற்கு வந்த வரலாறு இன்றும் ஆவணப்படுத்தப்படாத கர்ணபரம்பரை கதையாகவே வழக்கில் உள்ளது.

பளைப்பிரதேசத்தில் இருந்து விவசாயத்தின் பொருட்டு இலை குழை கள் ஏற்றி வந்த வண்டில் ஒன்று நெற்கொழு குளப்பிரதேசத்தின் ஊடாக வந்த பொழுது குளத்தின் சேற்றில் புதைந்து விட்டது. புதைந்த சில்லினை எவ்வளவு முயன்றும் சேற்றிலிருந்து நகர்த்த முடியவில்லை. அப்பொழுது திடீரென்று தோன்றிய தெய்வீக உருவம் ஒன்று தான் வைரவர் என்றும் வண்டில் தட்டில் தானும் ஏறி வந்ததாகவும் தான் இப்பிரதேசத்தில் இருக்கப்போவதாகவும் கூறி மறைந்தார்.

உடனே வண்டில் தட்டைப் பார்த்தபோது குழைகளுக்கிடையில் வைரவர் சூலம் ஒன்று காணப்பட்டது. உடனே அதனை பயபக்தியோடு எடுத்து கொட்டில் ஒன்று அமைத்து வணங்கினார்கள். அதன்பின்பே வண்டில் சில்லு நகர்ந்தது. விடயம் அறிந்து வந்து வணங்கிய அடியார்கள் அன்று முதல் வைரவப் பெருமானின் பெருந் தொண்டர்கள் ஆனார்கள். அவர்களின் குலதெய்வமாக வைரவரே விளங்கினார். கால மாற்றத்தினால் இன்று ஆலயம் அமைந்துள்ள குளத்தின் அருகில் உள்ள பல மரங்களால் சூழப்பட்ட பரந்த பிரதேசத்தில் கல்லாலான சூலம் ஒன்றை அமைத்து வழிபட்டு வந்தார்கள். தற்பொழுது கடமையில் உள்ள பொ.சந்திரலிங்கம் தலைமையில் உள்ள பரிபாலனசபை ஆலயத்தை இன்னும் மெருகுபடுத்தி கலைக் கோயிலாக்கி ஏவிளம்பி வருட பங்குனித் திங்கள் 16ஆம் நாள் (30.03.2018) வெள்ளிக்கிழமை உத்தர நட்சத்திரத்தில் கும்பாபிஷேகத்தை நிகழ்த்தும் பாக்கியம் கிடைத்துள்ளது.

லோகா சமஸ்தா சுகினோ பவந்து
சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர்.
பிரதமகுரு



### தெய்வீக சாந்நித்தியம் பெருகும் கும்பாபிஷேகம்

சிவபெருமான் உலகெங்கிலும் வியாபித்து நீக்கமற நிறைந்திருக்கின்றார். உருவமின்றி சொரூபமாக நிற்கும் சிவம் ஆன்மாக்களுக்கு அருள்புரியும் உயர்ந்த கருணையினால் தன்னை ஒரு படி கீழே இறக்கி உருவம், நாமங்களோடு ஆலய விக்கிரகத்தில் இருந்து அருள்பாலிக்கின்றார். நாம் பக்தி செலுத்த அபிஷேகம், அலங்காரம், ஆராதனைகள், அர்ச்சனைகள் செய்து வழிபட இவ் உருவவழிபாடு இன்றியமையாதது. "அர்ச்சகர்ச்ச பிரபாவேன சிவாபவதி சங்கர" எனும் வாக்கிற்கமைய பஞ்சபூதங்களிலுமுள்ள தெய்வீக சக்தியை திருவுருவத்தில் எழுந்தருளச் செய்யும் கிரியைகளே மஹாகும்பாபிஷேகக் கிரியைகளாகும். சிவாசாரியார்கள் மந்திரத்தினாலும் கிரியைகளினாலும் பாவனையினாலும் விக்கிரகத்தில் தெய்வீக சாந்நித்தியத்தை பெருகச் செய்கின்றனர். நெற்கொழுவைரவரே பல அற்புத வரலாறுகளைக் கொண்ட மகா சக்தி வாய்ந்த வைரவராவார். சிவாச்சாரியார்களுடைய பக்திப் பூசை அடியார்களுக்கு வைரவப் பெருமான் அருள் கிடைக்க வழிசமைக்கின்றது. வைரவ அடியார்கள், திருப்பணியாளர்கள், பரிபாலன சபையினர், உபயகாரர்கள் எல்லோருக்கும் சாமுண்டீஸ்வரி சமேத வைரவ சுவாமியின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

பிரசங்கபூஷணம் சைவப்புலவர்
செ. கந்தசத்தியதாசன் (M.A)

(சி-2042)



### ஆசிச் செய்தி

"உடுப்பிட்டிவடக்குநெற்கொழுப் பதியினிலே
வானுயரும் சோலைநிறை வளம்நிறைந்த பூமிதனில்
தானுதித்துக்கோயில் கொண்ட பாதாள வைரவரின்
கும்பாபிஷேகக் குடமுழுக்குக்கண்டிடுவோம் வாரீர்"

சைவமும் தமிழும் தனித்தோங்கும் வடமராட்சி நெற் கொழுப் பதியில் இரண்டு நூற்றாண்டுகள் பழைமை யும், புதுமையும், அருட்பொலிவும்கொண்டு இன்னருள் பாலிக் கும் பாதாள வைரவப் பெருமானின் கும்பாபிஷேக குட முழுக்கு நிகழ்வு பங்குனி உத்தர நன்நாளில் நடைபெறு வது போற்றுதற்குரியது. சிவாகம முறைக்கமைந்த அழகிய ஆலயத்தின் மணிமண்டமும் தீர்த்தக்கேணி மும், பூங்காவன மண்டபங்களும், அழகிய சிற்பசித்திர வேலைப்பாடுகளோடு விளங்க நவகுண்ட மஹா யாக வழிபாடுகளோடு கும்பாபிஷேகம் சிறப்புற அமைவது இம் மக்கள் செய்த புண்ணிய தவப்பயனேயாம்.

நன்செய்யும் புன்செய்யும் நன்தோங்கி நெற் குலை கள் நிறைந்து விளங்கியமையால் நெற்கொழு எனச்சிறப் புப்பெற்ற இப் புண்ணிய பூமியில் கோவில் கொண்ட வைர வப் பெருமானிற்கு 2002ஆம் ஆண்டு அஷ்ட பந்தன சம் பிரோட்சண கும்பாபிஷேகம் அடியேனால் நடத்தும் பேறு கிடைத்தது. மீண்டும் தற்போது பிரதமகுருவாக இருந்து நவகுண்ட பட்ச மஹா கும்பாபிஷேகத்தை நிகழ்த்தும் பாக்கியம் கிட்டியமை வைரவப் பெருமானின் பேரருட் பேறேயாம். இக் கும்பாபிஷேகத்தை சிறப்பிக்கின்ற குருமார்கள் அடியவர்கள் எல்லா வளங்களும் நலன்க ளும் பெற்று பெருவாழ்வு வாழ்வார்களாக.

சிவப்பணி போற்றி செழுமையாய் வாழ்வோம்

பிரதிஷ்டா பிரதமகுரு,
சைவ சித்தாந்த முதுகலைமாணி,
சிவஸ்ரீ சோ. நடராசாக்குருக்கள்



### ஆசிச்செய்தி

மாதொரு பாகனாக விளங்கும் சிவபெருமானின் 64 மூர்த்தி வடிவங்களில் 25 வடிவங்கள் சிறப்பு பெறுகின்றது. அவற்றுள் ஷேத்திரபாலகர் என சிறப்பிக்கப்படும் வைரவமூர்த்தமும் ஒன்றாகும். வைரவ வடிவத்திற்கு உள்ள மிக முக்கியமான சிறப்பு அம்சம் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் சுதேச மக்களின் சமய வழிபாடுகள் தடுக்கப்பட்ட போது சைவர்களை காத்தது வைரவர் வழிபாடாகும். வைரவர் சூலம் சோதனை நிகழும் போது சிலுவையாக்கப்படுவதும் அதன் பின் சூலமாக்கப்படுவதும் நடைமுறையில் இருந்தது.

வைரவர் மூர்த்தங்களில் பிரசித்தமானவை பாதாள ஞானவைரவர், காலவைரவர், நரசிம்ம வைரவர் எனப் பல உண்டு. இவற்றுள் பாதாள ஞான வைரவர் பக்தர்களுக்கு ஞானத்தையும், கல்வியையும் அருள்பவராகவும், கால வைரவர் காசியில் எழுந்தருளி மோட்சத்தை கொடுப்பவராகவும் நரசிம்மவைரவர் மஹாவிஷ்ணுவின் நரசிம்ம அவதாரத்தில் அவரை வழிப்படுத்தியவராகவும் சிறப்பு பெறுகின்றார்கள். உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு பிரதேச மக்கள் அவ்வூரில் எழுந்தருளி அருள் பாலிக்கும் நெற்கொழு வைரவரின் தீவிர பக்தர்களாவர். வைரவப்பெருமானைத் தவிர வேறு தெய்வங்களை வணங்காத தீவிர பக்தி உள்ளவர்களும் இங்கு காணப்படுகின்றனர். சில வருடங்கள் வருடாந்த உற்சவத்தினை நடத்திய போது இந்த உண்மையை அறிந்தேன்.

உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு என்னும் பரந்த பிரதேசத்தில் புராதன ஆலயமாகவும் தலைமை ஆலயமாகவும் போற்றப்படுகின்ற பெருமைக்குரிய இவ்வாலயம் எமது பிரதேச வைரவர் ஆலயங்களில் மிகப் பிரமாண்டமானது. "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" என்னும் சிவஞான சித்தியார் உண்மைக்கிணங்க வைரவர் வழிபாடு இப்பிரதேசத்தில் சிறப்பாகக் காணப்படுகிறது.

இவ்வாலய உற்சவகாலக் குருத்துவத்தில் ஈடுபட்ட காலங்களில் வைரவப்பெருமானின் பெருங்கருணை எனக்கும் கிட்டியுள்ளது. "படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனச் சர்வமும் இவரால் நிகழ்த்தப்படுகின்றது" என்னும் பெரும் உண்மையை அறிந்தவன் என்னும் வகையில் இவ்வருடம் நிகழும் மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி உற்சவத்தில் எனது பங்களிப்பையும் நல்கியதுடன் அவருடைய பெருங்கருணை அடியவர்கள் அனைவருக்கும் கிட்டவேண்டும் என வேண்டி நிற்கின்றேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.
கும்பாபிஷேக நெறியாளர்
சாதக இளம் சுடர்
சிவஸ்ரீ வி. பாலகுமாரக்குருக்கள்.
சாவகச்சேரி.

**உடுப்பிட்டி வடக்கு, நெற்கொழு.**

**இங்ஙனம்**
**ஆலய பரிபாலன சபையும்**
**வைரவப்பெருமான் அடியார்களும்**
**உபயகாரர்களும்**

# க.பொ.த.சா/த பரீட்சைப் பெறுபேறுகள்-யாழ்.மாவட்டம்

**யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை**

தமிழ்மொழிமூலம்(9ஏ)

கே. அனற்சூரி, வி. டிலோஜனா, பி.பைத் நவோமி, பி. ஜனுசிகா கியூவன், கே. கஜலக்சி, ஜி. கஜானி, ஆர். கஸ்தூரி, எஸ்.கிருஷிகா, எஸ். மாதங்கி, என்.சௌமியா, பி.சாளினி, எஸ்.சிநேகா, ரி.வருண்யா, எஸ். தாரணி, ஆர். டிலக்சிகா, ஆர்.கம்சாயினி, எம். கயல்விழி, எஸ். மனோஜிகா, கியூ. நிருஜா, வி. வைஷ்ணா, கே. வைஷ்ணவி, வி.விதுஷா, எஸ். விருஷினி, எம். மனோஜா, சி. சரணியா, பி.தாருகா, வி. அனித்தா, எஸ். கார்த்திகா, எஸ். கீர்த்திகா, ரி.யதுசினி, ஜி. கஜானி, என். கேசினி, எஸ். நாகபூஷணி, ஏ.பவிதுரா, யு. ராகவி, எஸ். சிவனுஜா, என். தர்சினி, கே.துவாரகா

ஆங்கிலமொழி மூலம்

ரி. சங்கவி, ஜே. சன்னுதாங்கி, ரி.ஜெயடான்சி, ஏ.மயூரி, யு. சிறித்தனா, ஆர். சிஜா ஜினி, ஆர். மாதங்கி, எஸ். மாதுமை, எம். சிவசாயினி, ஏ.தமிழ்ப்பிரியா, எம். தர்சிகா, ஜெ. திவியனி, டபிள்யூ. விஜயந்தி

தமிழ்மொழிமூலம்

(8ஏபி)

ஏ.ஆரபி, கே. தர்சிகா, கே. ஜெயகௌரி, கே. கஜேந்திகா, ஏ.மேரிஏஞ்சல், பிநிரோஷா, எஸ்.சிவானுஜா, கே.தர்சனா, எம்.விதுசா, வி. அவனிகா, ஆர்.சியாமின் துஷானா, கியூ. மரீன் நிகிலா, எஸ்.சுபோதினி, கே. தரண்யா, டி.வைஷ்ணவி, ஆர். அபிநயா, ஜே.மிதுசனா, பி.பிருந்துதி, கே. சிநேகா, பி.சோபியா, கே.யதுசிகா, ஏ.கம்சவர்த்தனி, எஸ்.றிசானா, ஜே.சங்கீர்த்தனா, ஆர். தாட்சாயினி, ஜே.துஷிகா, எஸ். வரன்யா.

ஆங்கிலமொழிமூலம்

ஆர்.அபிநயா, வி.ஆர்த்திகா, எஸ். மிருதி, கே. சங்கவி, எஸ். அனுபமா, ஆர். ராகப்பிரியா, பி. சாம்பவி, எஸ். சௌமியா, என். தனுராங்கி, எஸ்.துஷிகரனி

தமிழ்மொழிமூலம் (8ஏசி)

ஐ. கலைநிலா, ரி.தேனுசா, என். சிவஜனனி, பி.வைஷ்ணவி

ஆங்கிலமொழிமூலம்

பி.லக்சிகா, பி.விஷ்ணுகா, ஏ. அக்ஷனா, எஸ். நிதீபா, ஆர். நிதூஷிகா

தமிழ்மொழிமூலம் (7ஏ2பி)

எம். தரங்கினி, என்.வியன்சிகா, எஸ்.விஷ்ணுகா, ஆர்.யனுசா, எல். ஜீன்பியுனா, பி.கிஷாயினி, ஆர். தீபிகா, ஆர்.அனுஷா, எஸ்.பிரவீனா, பி.பிரித்திகா, ரி. பிரவீனா, கே. தமிழினி, பி.துளசிகா, ஆர். காருண்யா, ஜே. தாட்சாயினி, எம்.தர்மிகா

ஆங்கிலமொழிமூலம்

எஸ். அபிராமி, என்.லக்சிகா, எஸ். அசரிகா

தமிழ்மொழிமூலம் (7ஏபிசி)

ஏ.பிரியநிலா, பி.அஸ்வினி, ஐ. றொபின்சனா, ரி.காயத்திரி, எஸ்.யதுவி, ஆர்.சோபனா, எஸ். துவாரகா, ரி.விதுஷிகா

ஆங்கிலமொழிமூலம்

பி.ஹபிலினி, கே.சௌமியா, கே. விதுஷா

ஆங்கிலமொழிமூலம்

(7ஏபிஎஸ்)

யு.சுருதி

ஆங்கிலமொழிமூலம்

(7ஏ2சி)

சி.சங்கவிதா, சி.கஜானி

**யாழ். இந்துக் கல்லூரி**

ஆங்கிலமொழி மூலம்

(9ஏ)

பி.அர்ஜுன், ஏ.டினுஜன், எஸ்.கோபிகிஷான், ரி.யதுர்சன், எஸ்.லோகஜன், எஸ்.லக்ஸன், ஜே.மாதவன், வி.வேணுகரன், பி.பிரவீனசர்மா, கே. சரன், எஸ்.துவாரகன்

தமிழ்மொழிமூலம்

ஜே.அகிலன், ஜி.ஆரோகணன், எஸ்.சகீர்த்தன், எஸ். சாருஜன், பி.அபிராம், எஸ்.பிருந்தாவன், ஏ.யதுர்ஷன், ரி.சாருஜன், ஆர்.அபர்ணன், கே. கருசன், வை.கௌரிசங்கர், எஸ்.நிவேதன், கே. பதுசனன், ரி.சங்கீதன், கே.அனுசன், கே. ஆரூரன், ஜே.சாள்ஸ், என். ஹரிகிருஷ்ணா, ரி.கஜலக்ஷினன், பி.நிலக்சன், எம்.பிரகஜன், எஸ்.சஞ்சீவன், ஜே.ஸ்ரீப் நிவேதன், எஸ்.தனலக்சன், கே. உமாகாந்தன்

ஆங்கிலமொழிமூலம்

(8ஏ)

எஸ்.கீர்த்திகன், எஸ். மானாமிர்தன், எஸ்.மதுர்சன், பி.மிரோதன், எஸ்.பரணீதரன், பி.பவதாரகன், ஆர்.திசோக், ஜி. விதுசன், எல். டிலோசன்

தமிழ்மொழிமூலம்

பி.அனோல்ட், எம்.ரேகன், ஆர்.சாரங்கன், எஸ்.சிவதீபன், எல்.கஜீபன், ஜி.நந்தபாலன், எஸ்.சங்கவன், பி.அஜித், ரி.இனியவன், எஸ்.கஜதீபன், சி.கலாதரன், பி.கவியரசன், எஸ்.பிரவீன், ஜே.பிரின்ஸ், ஆர். பிரியங்கன், ரி.சமரழகன், எஸ்.சத்யன், எல்.துவாரகன், ஜே. அர்ச்சுனன், ரி.ஜீவசாந், எம்.ஹரிகரன், வியவகர், என். கஜேந்திரன், ஜே.கிஷோரன், கே.கோமைந்தன், பி.கோபிராம், வை.நிரோஜன், எஸ்.பிரணவன், யு.சங்கீத், எஸ்.ஸ்ரீ குருபிரசாத், எஸ்.தீவிச்சணன், வி.துவாரகன், கே.உமாகஜன், ஜி.வாகீசன், எஸ்.வினோசன்

ஆங்கிலமொழிமூலம்

(7ஏ)

எஸ்.அர்பின்டா, ஆர்.நிமல், எஸ். சிவம்சன், யு.சுதர்சன், வி.தனிகஜன், வி.திலக்சன், எம்.திவியாகரன், எஸ்.வித்யாபவன், தே.ஆர்த்திகன், எஸ்.யதுகுலன், வி.ஜெயகுலன், வி.கபிலன், எஸ். கிஷோர், எஸ்.குகப்பிரியன், ரி.லகிதர், எஸ்.சாருஜன், ரி.சிவவருணன், என். தருனேஸ், எம்.திசான், எம்.துவாரகன்

தமிழ்மொழிமூலம்

எஸ்.கோபீசன், என்.லக்சன், ரி.மேனுஜன், ஆர்.பிரணவன், கே. சசிகரன், ஜே.சாதுரியன், ஏ.சங்கீத், எஸ்.யவிஷேக், எம். லவதர்சன், வி.விதுசன், ஜே. அனோஜ், என். யதுர்சனன், எஸ்.விதுர்ஷன், எஸ். ஜெயராம், எஸ்.கஜானன், வி.கிருஷ்ணவர்ணன்

**யா/ பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை**

ஆங்கில மொழி மூலம்

(9ஏ)

பி.நிதுசிகா, ஐ.சாகித்தியா, வி.துசாரகா

தமிழ் மொழி மூலம்

ரி.ஜிறோசினி, பி.நிருஷா, ஆர்.நிதுஜா, எம்.திலக்சியா

ஆங்கில மொழி மூலம்

(8ஏபி)

ரி.புகழினி

தமிழ் மொழி மூலம்

வி.வைஸ்ணவி, ஈ.நிருத்திகா, ஆர்.திசானி, எஸ்.திவியா, ஆர்.மேனயா, எஸ்.பிரணவி

ஆங்கில மொழி மூலம்

(8ஏசி)

ஏ.அபிசேகா, பி.அர்ச்சயா, பி.ஜோதினி, யு.கிஷாந்திகா, எல்.நிருக்ஷியா, எஸ்.சரண்யா, ஆர்.துலக்சிகா, எஸ். வித்தியா

தமிழ் மொழி மூலம்

எஸ்.சிவபிரியா, சி.அனோஜா, ஏ.பிரியதர்ஷா

தமிழ்மொழி மூலம்

(7ஏ2பி)

எஸ்.மைத்ரூஜி, எஸ்.தாருகா

ஆங்கில மொழி மூலம்

(7ஏபிசி)

ஜே.அனோசா, ரி.டிஷாலினி

தமிழ் மொழி மூலம்

பி.ஜனார்த்தனி, ஜே.தக்சின்ஜா, ஏ.அனிற்றா, என்.குகவதனி, ஆர்.சானுஜா, ஜி.சோதிகா

தமிழ்மொழி மூலம்

(7ஏ2சி)

எஸ்.தக்சனா, ஜே.தனுசா

பருத்தித்துறை

**ஹாட்லிக் கல்லூரி**

**ஆங்கிலமொழி மூலம்**

(9ஏ)

ஜி.கிருஷாந், வை.மதுசனன், கே.சிவரூபன்

தமிழ்மொழி மூலம்

ரி.அபிஷாந், கே.கிருசிகன், ஆர்.துஷாரகன், என்.விந்துஷன், வி.கோகுலமாதவன், எஸ்.பிரணவன், ஜி.துவாரகன், ஜே.ஹரிஸ்மேனன், வி.சுஞ்சித், எஸ்.பிரியவர்ணன், ஜே.தாருஷன்

ஆங்கிலமொழி மூலம்

எஸ்.ஆரணன்- 8ஏபி, எஸ்.திருஜன்-8ஏபி, பி.கேதாரகன்-8ஏசி, ஆர்.சுகந்தன்-8ஏசி, கே.வித்யாசாகர்-8ஏசி

தமிழ்மொழி மூலம்

ஆர்.தனுசன்- 8ஏபி, எம்.ருக்சன்- 8ஏபி, எஸ்.சயந்தன்- 8ஏபி, என்.யதுர்சன்-8ஏபி, எஸ். நிதுர்சன்- 8ஏபி, எஸ். ராவகன்- 8ஏபி, எஸ்.கஜேந்தன்- 8ஏசி, எஸ்.கதுர்சன்-8ஏசி, கே. கனோஜன்-8ஏசி, ஜே.பிருந்தாவன்-8ஏசி

ஆங்கிலமொழிமூலம்

ஜே.யதுர்சன்-7ஏ2பி, எம்.சங்கீர்த்தன்-7ஏ2பி, எஸ்.துவாரகன்-7ஏ2பி, ஜே.பிரவீன்-7ஏபிசி

தமிழ்மொழிமூலம்

கே.கஜரஜிதன்-7ஏ2பி, ரி.நவசாந்தன்-7ஏ2பி, வி.சியாம்-7ஏ2பி, ஜே.ஜிதுர்சன்-7ஏ2பி, ஜே.டிரோஜன்-7ஏ2பி, கே.துவாரகன்-7ஏ2பி, சி.அலக்ஸன்-7ஏபிசி, எஸ்.சரவணன்-7ஏபிசி, வி.கஜநிதன்-7ஏபிசி, எஸ்.பிரவீன்-7ஏபிசி, வி.யதுசன்-7ஏபிசி, ரி.அனுஜன்-7ஏபிஎஸ், கே.சாருஜனன்-7ஏபிஎஸ், ஏ.நிந்துஜன்-7ஏபிஎஸ், பி.துஷிகரன்- 7ஏ2சி

**யா/கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலயம்**

ஆர்.ஹரிகரன்-8ஏபி, வி.றொஷான்-7ஏ2சி, பி.கோபிநாத்-7ஏ2சி, கே.கஜானன்-7ஏசி, வி.திவ்வியன்-6ஏ2பிசி, எஸ்.சுதர்ஷன்-5ஏ2பிசி, சி.குபேஸ்-5ஏ2பி, ஆர்.அகிலஜா-5ஏபி2சிஎஸ், வை. தர்ஷன்யா-4ஏ3பி2சி, ஆர். ஹேமன்-4ஏ2பி2சிஎஸ், வி.யதுஷன்-3ஏ4பிசிஎஸ், ரி.ஜிந்துஜா-3ஏபி3சிஎஸ்.

**யா/வடமு இந்துக் கல்லூரி**

சி.கெரிஸ்திகா-8ஏபி, நநிரோசனா-8ஏஎஸ், யோ.துவாரகன்-7ஏ2சி, இ.மிதிலா-7ஏபிஎஸ், க.யேனுஷா-5ஏ3பிசி, சு.டிலக்சன்-5ஏ3பி, ஈ.கீர்த்தனா-5ஏ3எஸ், த.தர்மிலா-4ஏபி3சிஎஸ்.

**யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

தமிழ்மொழி மூலம்

பா.ஜிந்துசா-9ஏ, தி.யௌதமி-8ஏபி, செ.கம்சலா-8ஏபி, சு.நிகாசினி-8ஏசி, ந.திவாஜினி-7ஏ2பி, ம.திவேகா-7ஏ2பி, சு. அபிராமி-7ஏ2பி, யோ.லக்சினி-7ஏ2பி, அ.ஆர்த்திகா-7ஏபிசி, ம.லக்ஷனா-7ஏபிஎஸ், சூ.அஞ்சனா-7ஏபிஎஸ், பு.துளசிகா-6ஏ2பிசி, ர.அனோசிகா-6ஏபி2சி, நா.கோதுசா-5ஏ3பிசி, நா.சுஜாந்தினி-5ஏ3பிசி, பு.சந்தியா-5ஏ2பி2சி.

ஆங்கில மொழி மூலம்

ம.சங்கவி-9ஏ, வே.யுவஸ்திகா-9ஏ, கி.நஜிதா -9ஏ, செ. கம்சாயினி -8ஏபி, அ.டிலக்சஷனா -6ஏபி2சி,

**யா/ வரணி மத்திய கல்லூரி**

எஸ்.சிந்துஜன்- 9ஏ, ஜே.சப்தமுகி- 9ஏ, கே. பிரசன்னா-8ஏபி, என்.குகதீஸ்- 8ஏசி, எம்.டிலக்சா- 8ஏசி, யு. அஸ்வினி-7ஏ2பி, எஸ்.மிதுசாளினி-7ஏபிசி, ஆர்.மதுசனா-7ஏபிஎஸ், எஸ்.யாழரசன்- 5ஏபி2சிஎஸ், வைகார்த்திக்-4ஏ3பிசிஎஸ்.

**யாழ்.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி**

தமிழ்மொழிமூலம்

எஸ்.சாகித்தியா- 9ஏ, கே. அபிநயா- 9ஏ, எம். லலிதாம்பிகை- 9ஏ, எஸ். சாகித்தராஜ்-8ஏபி, ஏ.லோகிதா-8ஏசி, ஆர். மனுசா- 8ஏபி, என். நிரோஜினி- 8ஏபி, எஸ். கிருஷா-7ஏ2பி, எஸ்.துரிகா- 7ஏபிசி, கே. கஜானி- 7ஏபிசி, எம். சுபநிதா-7ஏபிசி, எஸ். தர்சிகா-7ஏபிஎஸ், வி. திலக்ஷனா-7ஏபிஎஸ், ஆர். இலக்கியா-6ஏபிசிஎஸ், கே. திவ்வியா-6ஏ3சி, ஜே.குவேந்தினி-6ஏபி2சி, ஆர்.ஜதுர்சா- 6ஏபிசி

ஆங்கில மொழிமூலம்

எஸ். சர்மினி-8ஏபி.

**யா/ஸ்கந்த வரோதயாக் கல்லூரி**

கே.நிதர்சன்-9ஏ, ஆர். சுஜீபன்- 9ஏ, பி.சானுஜா- 9ஏ, ஜே.டினுஜா- 8ஏபி, கே. இசையருவி-8ஏசி, ரி. கோபிராஜா-7ஏபிசி, ஜி.மருதிஹா- 7ஏபிசி, ஏ.ராகுலன்-6ஏ3பி, ஜே.அனுஜன்-6ஏ2பிசி, வி. யசோதரன் -6ஏ2பிசி, பி.குருசாந்-6ஏ2பிசி, கே. சங்கர்ஷன்-5ஏ3பிசி, கே. எஸ்தர்பேபி-5ஏ3பிசி, பு. பிரியங்கா-5ஏ2பி2சி, ரி.விணோஜா-5ஏபி2சிஎஸ்.

**யா/நெல்லியடி மத்திய கல்லூரி**

தமிழ்மொழி மூலம்

கி.அர்ச்சனா-9ஏ, ஜெ. கஜிதா-9ஏ, சி.கோபிகா-9ஏ, யோ.வேணுகன்-8ஏபி, யோ.நிருசிகன்-8ஏபி, சி.சிவதர்சினி-8ஏபி, ர.அபிராம்-8ஏசி, இ.மதீசன்-8ஏசி, செ.அனுராஜ்-7ஏ2பி, செ.சாருஜன்-7ஏ2பி, ந.குகவரதன்-7ஏ2பி, இ.மிதுனன்-7ஏபிசி, செ.நிதர்சன்-7ஏபிசி, கு.சதுஜா-7ஏபிசி, கு.பிரகலாதன்-7ஏ2சி, ஆ.அபிதன்-7ஏ2சி, சி.மதுசன்-7ஏ2சி, சு. சிறிசுஜன்-6ஏ2பிஎஸ், ஞா.பிரியந்தினி-6ஏபி2சி, ரா.தர்சன்-6ஏபிசிஎஸ், ர.பிரசகி-5ஏ3பிசி, வி.டீப்சிகா-5ஏ2பி2சி, பி. இந்து-5ஏபி3சி, ர.டிலக்ஷன்-5ஏ2பிஎஸ், க.ஜதுவாணன்-5ஏ2சிஎஸ்.

ஆங்கில மொழிமூலம்

சு.கம்சாஜினி-9ஏ, ம.துசாந்த்-8ஏபி, ர.அக்ஷியா-8ஏபி, இ.விவேகா-8ஏசி, யே.சாம்பவி-8ஏசி, ப.சதுர்ஜா-8ஏசி, சி.சாமிலிக்கா-8ஏசி, ம.கோபிகா-6ஏபிசிஎஸ்,

**அருணோதயக் கல்லூரி,அளவெட்டி**

க.டிசாந்தன்-9ஏ, ச.பிரவீன்ராஜ்-9ஏ, கே.குந்தவி-9ஏ, கி.அனிஸ்ரனா-9 ஏ, இ.மிதுலா-8ஏசி, தி.அட்சயன்-7ஏ2பி, உ.தனுஜன்-7ஏ2பி, டே.வரிக்கா-7ஏ2பி, செ.பிந்துஜன்-7ஏபிசி, சி.கீர்த்தனன்-7ஏபிஎஸ், சி.துளசிகா-7ஏ2சி, சி.அபினயா-7ஏசிஎஸ், இ.சென்தூரன்-6ஏ3பி, சி.பிரியா-6ஏ2பிசி, கு.விஷ்னியா-6ஏசி2எஸ், கா.டேனுசா-5ஏ2பி2சி, ஐ.லக்சனா-5ஏபி2சிஎஸ், யோ.டிதுசா-5ஏபி2சிஎஸ், இ.கேதுசன்-4ஏ4பிசி, ர.சிவகஜன்-4ஏ4பிஎஸ், சி.அபிஷனா-4ஏ3பி2சி, மு.பூசிதன்-4ஏ3பிசிஎஸ், சி.ஜதுசனா-4ஏ2பி2சிஎஸ், ச.பிரியங்கா-4ஏ4சிஎஸ், நா.திசாந்-3ஏ4பிசிஎஸ், பு.சாகித்தியா-3ஏ3பி2சிஎஸ், க.மனோஜன்-3ஏபி4சிஎஸ், ம.சாரங்கன்-3ஏபி2சி3எஸ், ஜே.ஜெருசிகா-3ஏ2பி2சி2எஸ், ச.தர்சிகா-3ஏ3பி2சி.

**யா/வதிரி திரு இருதயக் கல்லூரி**

அ.கரண்ராஜ்-6ஏ2சி, ஜெ.நிதுர்சன்-5ஏ3சி, ச.சிந்துஜன்-4ஏ2பிசிஎஸ், த.சோபியா-4ஏ2சி2எஸ், செ.பிரியா-3ஏ3பி2சிஎஸ், ம.லோஜினி-3ஏபி3சி2எஸ், ப.கிஷானி-3ஏ4சி2எஸ், ஜெ.அபிரா-2ஏ2பி3சி, கு.டிலக்ஷனா-ஏ3பி2சி2 எஸ், உ.நிதுஷா-ஏபி4சிஎஸ், ஆ.நிதர்சனா-ஏபி2சி4எஸ், சி.பிரதீனா-2பி3சி3எஸ், ஜெ.வசுந்தரா-2பிசி4எஸ், க.வின்சன்-பி3சி4எஸ், ர.ராஜ்மன்-3சி4எஸ், தே.சஜிதா-3சி3எஸ், ப.துவாரகா-பிசி4எஸ், சி.ரஞ்சித்-ஏ2பி3சி.


**யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலை**

யோ.அஜந்தன்-3ஏ2பி3சி, க.சுலக்ஷனா-3ஏ2பி3சி, விதனுசியா-3ஏ3சி3எஸ், சி.நிதுஷன்-2ஏ3பி3எஸ், க.சஜீபன்-ஏ2பி4சிஎஸ், த.தயானந்தன்-ஏ2பி5சி, யோ.அபிநயன்-ஏ4பி3சிஎஸ், சி.கோபிசன்-ஏபி2சி4எஸ், அ.அஜிதா- ஏ2பி2சி3எஸ், வி.பிரசாளினி-ஏ5சி3எஸ், பு.சுதர்சிகா-4பி4சி எஸ், கு.விஜயசாளினி-பி4சி3எஸ். (இ-9-60)



அரசியல், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் செயற்பாட்டு இயக்கமாகத் தொழிற்பட்டுவரும் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைமைப் பணிமனை யாழ்ப்பாணத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது. அரசடி வீதி கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்தப் பணிமனையை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார். தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், ம.தியாகராஜா ஆகியோரும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# பிரதமருக்கு எதிராக பிரேரணை
# இரகசிய பேச்சுவார்த்தை நடத்திய சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள்



(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று முன்தினம் ஒன்றுகூடி இரகசிய பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தியுள்ளனர்.

கொழும்பில் உள்ள அமைச்சர் மகிந்த அமரவீரவின் இல்லத்தில் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக அதாவது பிரதமரை தோற்கடிக்கும் வகையில் வாக்களிப்பது என இங்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் இந்த யோசனையை அழுத்தமாக வலியுறுத்தியுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் மகிந்த அமரவீரவின் இல்லத்தில் நடைபெற்ற இந்த பேச்சுவார்த்தையில், அமைச்சர்கள் ஜோன் செனவிரட்ன, ஏ.எச்.எம். பௌசி, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, லக்ஷ்மன் வசந்த பெரேரா, நிஷாந்த முத்துஹெட்டிகம, காதர் மஸ்தான் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

அமைச்சர் துமிந்த திஸாநாயக்க இந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள விருந்தபோதிலும் அவர் அதில் கலந்துகொள்ளவில்லை என கூறப்படுகிறது.

இதனிடையே கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, எதிர்வரும் ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு பின்னர் புதிய அரசாங்கம் ஒன்று ஆட்சிக்கு வரும் வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவும் பிரதமராக வேறு ஒருவர் நியமிக்கப்படலாம் எனவும் தெரிவித்தார். (இ-7)

# மஹேந்திரனை கைது செய்ய மீண்டும் பிடியாணை பிறப்பிப்பு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மஹேந்திரனை கைது செய்வதற்கான பிடியாணை உத்தரவு கடந்த 15ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டிருந்த போதும் நேற்று மீண்டும் பிடியாணை ஒன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## இந்திய பிரபல ஜோதிடர் வருகை

இலங்கை சக்தி ரிவி, நேத்ரா ரிவி புகழ் பிரபல இந்திய ஜோதிடர் கலைமாமணி தாசரி கே.எஸ்.குமாரசுவாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். குறுகிய கால விஜயமாக யாழ்.வந்துள்ள அவர் இன்று முதல் எதிர்வரும் 01.04.2018 ஞாயிறு வரை யாழ்.நல்லூர் யாழ்பாடி விடுதியில் தங்கியிருந்து ஜோதிட ஆலோசனைகள் வழங்குவார்.

திருமணத்தடை, வாழ்வில் முன்னேற்றமின்மை, மணவாழ்க்கையில் முரண்பாடுகள் போன்ற சகல பிரச்சினைகளுக்கும் ஜோதிட ரீதியாகத் தீர்வு வழங்கப்படும்.

076 610 2615 என்ற இலக்கத்தில் தொடர்பு கொண்டு முற்பதிவு செய்து ஜோதிடரைச் சந்திக்க முடியும்.

யாழ்பாடி, இல. 49-51, அம்மன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (சி/2008)



## அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும்

## கம்பன் விழா-2018



**2018 மார்ச் 29, 30, 31, ஏப்ரல் 1ஆம் திகதிகளில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் தினமும் காலை 9.30, மாலை 5.30.**

## இன்றைய நிகழ்வுகள்

**சிறப்பு விருந்தினர்கள்**

புலவர் இரெ.சண்முகவடிவேல்
தமிழ்நாடு

பேராசிரியர் மு.இராமச்சந்திரன்
தமிழ்நாடு

புலவர் மா.இராமலிங்கம்
தமிழ்நாடு

திரு. பாரதி கிருஷ்ணகுமார்
திரைப்பட இயக்குநர், தமிழ்நாடு

டாக்டர் பிரியா இராமச்சந்திரன்
குழந்தைகள் சத்திர சிகிச்சை நிபுணர், தமிழ்நாடு

### 30.03.2018 வெள்ளி காலை 9.30 மணி

- மாங்கல விளக்கேற்றல்
  திரு.சு.திருஞானசம்பந்தர் தம்பதியர் (முன்னாள் வதிவிடப் பிரதிநிதி, ஐ.நா.சபை)
- கடவுள் வாழ்த்து
  திருமதி.ஹம்சானந்தி தர்மபாலன்
- தலைமையுரை
  திரு.எஸ்.சுப்பிரமணியம் செட்டியார் (அறங்காவலர், புதிய கதிரேசன் ஆலயம்)
- தொடக்கவுரை
  கௌரவ கே.சிவாஜிலிங்கம் (வடக்கு மாகாணசபை உறுப்பினர்)
- எழிலுரை
  பேராசிரியர் மு.இராமச்சந்திரன்
  பொருள்: "கம்பனில் விழுமியம்"

சுழலும் சொற்போர்
நடுவர்: புலவர் மா.இராமலிங்கம்

பொருள்:
'ஆற்றல் சால் அனுமன் எனும் அடைமொழிக்கு பெரிதும் காரணமாவது....'
சீதையைக் கவர்ந்த சொல்வன்மையே! – சி.கேசவன்
இலங்கையை எரியூட்டிய வீரமே! – த.நாகேஸ்வரன்
மருத்துமலை கொணர்ந்த மாண்பே! – ச.லலீசன்
இராமனை உணர்ந்த ஞானமே! – ரி.ரெங்கராஜா
இராவணனிடம் உரைத்த தூதே! – பால.இரமணி
பொறிகளை அடக்கிய திரமே! – இரெ.சண்முகவடிவேல்

### மாலை 5.30 மணி

- மாங்கல விளக்கேற்றல்
  திரு.எஸ்.ஆர்.விக்னேஸ்வரன் (பட்டயக் கணக்காளர், துபாய்)
- கடவுள் வாழ்த்து
  திரு.பி.நித்தியானந்தன்
- தலைமையுரை
  மாண்புமிகு மனோ கணேசன்
  (தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர், இலங்கை)
- தொடக்கவுரை
  திரு.வீ.ஆனந்தசங்கரி (செயலாளர், தமிழர் விடுதலைக் கூட்டணி)

அஞ்சலி அரங்கம்

- அஞ்சலியுரை: வித்துவான் வசந்தா வைத்தியநாதன்

பட்டிமண்டபம்

நடுவர்: 'கம்பவாரிதி' இ.ஜெயராஜ்
பொருள்: 'கற்றோரைப் பெரிதும் கவரும் இலக்குவனின் சீற்றம்...'
கைகேயி மீதான சீற்றமே! – மு.இராமச்சந்திரன், இரா.செல்வவடிவேல்
பரதன் மீதான சீற்றமே! – மா.இராமலிங்கம், ந.விஜயசுந்தரம்
சூர்ப்பனகை மீதான சீற்றமே! – இரெ.சண்முகவடிவேல், ஸ்ரீ.பிரசாந்தன்
நோக்கர்கள்: திரு.எஸ்.ரி.குருசாமி (தலைவர்)
திரு.ச.இரகுபதிபாலஸ்ரீதரன், திரு.ப.பரமேஸ்வரன், திரு.ஜி. இராஜகுலேந்திரா, திரு.ஆர். வைத்தமாநிதி, திருமதி வசந்தி தயாபரன், கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



## கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:O/Lபிரான்ஸ்
NOT PR
தொ.இ: B/7407

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம்
தகைமை/தொழில்: O/L/தனியார் தொழில்
தொ.இ: B/7408

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 31 செவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BA/சொந்ததொழில்
தொ.இ: B/7409

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 62
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்
தொ.இ: B/7410

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 44
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3233

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 40
உயரம்: 5'
தகைமை/தொழில்: DIPLOMA/ஆசிரியர்
தொ.இ: G/3235

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 36 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L/அரசதொழில்
தொ.இ: G/3305

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 35
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3357

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# சிறுவயதில் ஊஞ்சல் கட்டி விளையாடிய காணிகளைத்தான் நாங்கள் கேட்கிறோம்

## கேப்பாபிலவு மக்கள் தெரிவிப்பு

(கண்டாவளை)

நாங்கள் சிறுவயதில் ஊஞ்சல் க்ட்டி விளையாடிய மாமரத்தையும் எங்கள் காணிகளையும்தான் நாங்கள் கேட்கின்றோம். இராணுவத்தின் காணிகளையோ அல்லது அவர்களின் சொத்துக்களையோ கேட்கவில்லை என தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கேப்பாபிலவு மக்கள் தெரிவித்துள்ளனர்.



முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்கள் தமது பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி இரவு-பகலாக முன்னெடுத்து வரும் தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் 400ஆவது நாளை எட்டவுள்ள நிலையில் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பெண்மணியான பிரசன்னா கருத்துத் தெரிவிக்கையில்,

எங்கள் காணிகளை இன்னமும் இராணுவம் விடுவிக்கவில்லை. அதற்குள் நாங்கள் காலடி வைக்க முடியவில்லை. வீதியில் நின்றவாறே எமது காணிகளைப் பார்க்கின்றோம்.

நாங்கள் சிறுவயதில் எங்கள் காணியில் இருக்கும் போது பலாப்பழம், தேங்காய், இளநீர் எதுவேண்டும் என்றாலும் அனைத்தையும் எங்கள் காணிகளில் இருந்து பெற்றுக்கொண்டோம். இப்போது இவற்றையெல்லாம் இராணுவம் எடுக்கின்றது. நாங்கள் பணத்திற்கு வாங்கியுண்ணும் சூழல் காணப்படுகின்றது.

எங்கள் காணிகளில் எங்களுக்கு சாப்பாடு இல்லையென்றால் தாகத்திற்கு இளநீரைக்கூட குடிப்போம். ஆனால் இப்போது அதுவெல்லாம் இராணுவத்திடம். எங்கள் விவசாய நிலத்தில் இராணுவம் விவசாயம் செய்கின்றது. இப்போது தேங்காய் ஒன்று 100 ரூபாய்க்கு வாங்கி வருகின்றோம். எங்கள் காணிகளில் எவ்வளவு வருமானங்கள் இருந்தும் நாங்கள் தெருவோரம் அநாதைகளாகக் கிடக்கின்றோம்.

நாங்கள் இராணுவத்தின் சொத்தையோ அல்லது இராணுவத்தின் நிலத்தையோ கேட்கவில்லை. எங்கள் அப்பா, அம்மா வாழ்ந்த காணியையும் நாங்கள் ஊஞ்சல் கட்டி ஆடிய மாமரத்தையும் தான் கேட்கின்றோம்.

நாட்டில் பூர்வீக மக்கள் அகதி வாழ்வா? நல்லாட்சி அரசே! எங்கள் பூர்வீக நிலம் வேண்டும் உள்ளிட்ட கோசங்களைத் தாங்கியவாறு தியான முறையிலான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். (2-315)

# திடீரென ஏற்பட்ட தீயினால் மேல்மாடி பாரிய சேதம்

## கிளிநொச்சியில் சம்பவம்



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநகர் கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட கரடிப்போக்கு சந்திக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் திடீர் என ஏற்பட்ட தீப்பரவலினால் வீட்டின் மேல் மாடி பாரிய சேதம் அடைந்துள்ளதுடன் பெறுமதி வாய்ந்த பொருட்களும் எரிந்து நாசமாகியுள்ளன.

சுமார் ஒரு மணிநேரத்தின் பின்னரே இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் யாழ்.மாநகர சபை தீயணைப்புப் படையினரின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இவ் விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

நேற்று முன்தினம் இரவு பத்து மணியளவில் குடும்ப அங்கத்தவர்கள் நித்திரைக்குச் சென்ற பின்னர் அயலவர் ஒருவர் வீட்டின் மேல்மாடியில் தீபற்றி எரிகிறது என வீட்டாருக்குக் கூறியதனை தொடர்ந்து வீட்டார் அனைவரும் பாதுகாப்பாக வெளியேறி பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். அதன் பின்னர் ஒரு மணிநேரத்தின் பின்னரே இராணுவத்தினரின் நீர்த்தாங்கி வாகனம் மற்றும் யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் வருகை தந்து தீயினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

கிளிநொச்சியை பொறுத்தவரை பாரிய பல தீ விபத்துக்கள் இடம்பெற்ற பொழுதும் கிளிநொச்சிக்கு என ஒரு தீயணைப்புப் படை வழங்கப்படவில்லை. இந்த தீவிபத்தில் குறித்த வீட்டாருக்கு சுமார் ஐம்பது இலட்சம் ரூபாவுக்கு மேல் நட்டமாகியுள்ளது. கிளிநொச்சிக்கு என ஒரு தீயணைப்புப் படை இருக்குமாயின் இவ்வாறான நட்டங்களைக் குறைத்துக் கொள்ளலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர். (2-312)





## கலைந்தது தேன்கூடு

# மாணவர்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டு பரீட்சை பிறிதொரு தினத்திற்கு மாற்றம்

(குருமன்காடு)

வவுனியா ஈரப்பெரியகுளம் பரக்கும் மகாவித்தியாலயத்தில் நேற்று காலை பாடசாலை வளவிலிருந்த தேன்கூடு காற்று வீசி தேனீக்கள் கலைந்ததில் பாடசாலை மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.



நேற்றைய தினம் இடம்பெறவிருந்த பரீட்சை பிறிதொரு தினத்தில் நடத்தப்படும் என்று வவுனியா தெற்கு கல்விப்பணிப்பாளர் வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது.

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியிலுள்ள பரக்கும் மகாவித்தியாலயத்தில் காலை பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தில் பாடசாலை வளவிலிருந்த தேன்கூடு ஒன்று காற்றினால் கலைந்துள்ளது

இதன் காரணமாக பாடசாலைக்கு மாணவர்கள் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை. பாடசாலையின் அதிபர் இவ்விடயம் தொடர்பாக தெற்கு வலய கல்விப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து வவுனியா தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணனுடன் தொடர்பு கொண்ட போது.

பாடசாலையிலிருந்த தேன்கூடு காற்றினால் கலைந்துள்ளது. இதையடுத்து மாணவர்களுக்கு எவ்விதப் பாதிப்புக்களும் ஏற்படாவண்ணம் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது

நடைபெறவிருந்த முதலாம் தவணை பரீட்சையின் பாடத்தினை வேறு ஒரு தினத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தேன்கூடு கலைந்ததில் மாணவர்களுக்கு எவ்விதப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை. தேன்கூட்டை அகற்றுவதற்கு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவினருக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

எமது பணிமனையின் அதிகாரிகளும் சம்பவ இடத்திற்குச் சென்றுள்ளனர். நானும் நேரில் சம்பவ இடத்திற்குச் சென்றுள்ளேன் என்று மேலும் தெரிவித்துள்ளார். (2-250)

# பல்கலை.மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில்-வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாந்தம் சிறிய அளவிலான உதவுத் தொகை ஒன்றை புலம்பெயர் தேசத்தில் வாழும் உறவான பாமினி தெபோராள் தர்மகுலராசா வழங்கி வருகின்றார்.

குறித்த உதவுத்தொகையானது வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் மேலும் அறியத் தருவதாவது.

ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் விண்ணப்பித்த மாணவர்களில், தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாதாந்தம் குறித்த உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் மாவட்ட அடிப்படையில் இவ்வாண்டு 20 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு மாதமும் அவர்களுக்கு தலா 2000 ரூபாய் வழங்கப்படுகின்றது.

இவ்வாண்டில் தை, மாசி மற்றும் பங்குனி என மூன்று மாதங்களுக்குமான உதவுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பங்குனி மாத உதவுத்தொகையானது கடந்த 24ஆம் திகதி ரவிகரனது மக்கள் தொடர்பகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# காட்டு யானைகளின் அட்டகாசத்தால் வாழ்வாதாரப் பயிர்களுக்கு அழிவு

## யானை வெடிகள் வழங்குவதாகக் கூறியும் கிடைக்கவில்லை

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள முக்கொம்பன் பகுதியில் உள்ள யட்டன், சுரமுனை குடியிருப்புக்களில் தொடர்ச்சியான காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து பெருந்தொகையான தென்னை மரங்களும், கத்தரித் தோட்டங்களும் அழிவடைந்துள்ளதாக கிராம சேவை அலுவலரிடமும் பூநகரி பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அப் பகுதி தோட்டச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களுக்கு யானைக்குரிய பட்டாசுகள்(வெடிகள்) பெற்றுத் தருவதாகக் கூறப்பட்ட போதிலும் 10 நாட்களுக்கு மேலாகியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமையால் சுமார் 100 இற்கு மேற்பட்ட தென்னைகள் குருத்தோடு பிடுங்கி அழிக்கப்பட்டதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (2-84)

# திறன் வகுப்பறைகளைக் கொண்ட ஒரேயொரு ஆரம்பப் பாடசாலை





(முல்லைத்தீவு)

சகல வகுப்புக்களும் திறன் வகுப்பறைகளாக (Smart Classroom) மாற்றும் திட்டத்திற்கமைய மு/ முல்லைத்தீவு உடையார்கட்டு அ.த.க பாடசாலையில் முதற்தடவையாக 8 வகுப்பறைகள் திறன் வகுப்பறைகளாக(Smart Classroom) வடிவமைக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலையின் அதிபர் என்.அமிர்தநாதன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில், முதன்மை விருந்தினரான ரவிகரன் பானுகோபன் மற்றும் சிறப்பு விருந்தினரான வைத்தியர்.அனுயா யோகநாதன் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

நலன் விரும்பிகளின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்ட இந்த செயற்றிட்டத்தில் பழைய கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் முற்றுமுழுதாக மாற்றி அமைக்கப்பட்டு புதிய செயற்பாடுகளான Interactive Learning முறையில் கற்பிக்கப்படுகின்றது. (2-9)

# க.பொ.த.சா/த பரீட்சை பெறுபேறுகள்-2017

**கிளி/விவேகானந்த வித்தியாலயம்**

ஸ்ரீ.அறிஞன்-7ஏ2பிசி, ஜெ.நிரோஜி-6ஏ2பிசி,கி. இசையமுதன்-5ஏபி2சி, செ.கலைவேந்தன்-3ஏ3பி2சிஎஸ், பு.தமிழ்வாணன்-4ஏ2பி2எஸ், ர.பார்த்தீபன்-3ஏபி3சி2எஸ் , ந.டென்சிகா-3ஏபி4சி.

**கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி**

த.டிலக்சன்-9ஏ, ர்.சௌந்தர்யா-9ஏ , சி.பகீரதன்-8ஏசி , கே.சரண்யா-8ஏஎஸ், க.சகானா-7ஏ2பி, தி.வேனுஜன்-7ஏ2பி, ஏ.ரிலைக்சன் -7ஏபிசி, கே.கயல்விழி-6ஏபி2சி, மோ.பிரசாந் -5ஏ4பி , ச.விதுர்சன்-5ஏ4பி , செ.ஆரணி-4ஏ3பி2சி, சி.கலையரசி-4ஏ2பி2சிஎஸ், ச.டிலான்சியா-4ஏ4சிஎஸ்.

**கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்**

தி.ஹம்சாயினி-9ஏ, க.ருசாந்தன்-7ஏபிஎஸ், லோ.தரணிகா- 6 ஏ3பி , பு.கீர்த்திகா-6ஏ3பி, பி.பெஸ்கி- 6ஏ2பிஎஸ், ம.சரணியன்-5ஏ3பிஎஸ் , ஜெ. நிலக்ஷன்-4ஏ3பிசி, கு.துவாரகா-4ஏ3பிசி, யோ.கோகுலப்பிரியா-3ஏ3பி2சிஎஸ், செ.ஜொனோதன் -4ஏபி3சி , செ.விதுஷா-3ஏ5சி, செ.வேணுசாருஜன்-ஏ3பி3சிஎஸ் , அ.கனுஜன்-ஏ3பி3சி2எஸ், வை.நிலா -ஏ2பி3சி3எஸ் , த.கயலினி-ஏ2பி3சி3எஸ், அ.நிதர்ஷன் -ஏ5சிஎஸ் , செ.தனுப்பிரியா -பி4சி2எஸ் , ப.சஜிகா-ஏ4சி2எஸ், தே.றூபிகா-ஏபி4சி, வி.திலக்சியா -2ஏ3பிசிஎஸ்.

**கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்**

செ.ஜென்சிலி-8ஏபி, ப.சாதுரியா- 7ஏ2சி, க.யாழினி -7ஏ2சி , அ.அஜித்-7ஏபிஎஸ், செ.கோபிகா-7ஏசி எஸ்.

**கிளி/கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்**

பி.இந்துஷா-7ஏபிசி, லோ. துஷ்மிஜாபௌசினா-5ஏ2பி2சி, தி. நிரோபிகா--4ஏ3சிஎஸ்.

**கிளி/ சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயம்**

சி.ஜீவன்-4ஏ4பி.க.றொஷானி-3ஏ3பி3சி.

**கிளி/கிளிநொச்சி ம.வி**

ஜெ.லியான்சியா-9ஏ, ச.வைஷ்ணவி-9ஏ, பா.தரணிகா-9ஏ, ச.நகுலசேகரி- 9ஏ , சி.குணாளினி-8ஏபி, ல.பிரணியா-8ஏசி , க.சங்கீத்-8ஏசி, சி.சங்கவை-8ஏசி, ச.மதுஷா -8ஏபி, ட.நிஷா-8ஏசி,ந.கீர்த்திகா- 8ஏசி , ம.அஜிந்தா- 8ஏசி, தெ.சஜிந்தன்-8ஏபி, இ. நிலாந்தன்-8ஏபி, ஜெ.வோசிதன்-8ஏபி , மோ. உமாலோஜினி-7ஏ2பி, ஜெ.விதுஷாயினி-7ஏ2பி , ஜெ.கவியரசன்-7ஏ2பி , க.யனுசயா-7ஏ2சி, தி.சங்கீதா-7ஏ2பி, அ.கோபிகா- 7ஏபிஎஸ். (2-271)




## சிறப்பாக செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வும், விருது வழங்கலும்

(குருமன்காடு)

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்தில் குற்றம், குற்றவியல் சட்டங்கள் மற்றும் கஞ்சா கடத்தல்களை முறியடித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளில் கடந்த மூன்று மாதங்களில் சிறப்பாகச் செயற்பட்ட பொலிஸாரை கௌரவிக்கும் நிகழ்வு வவுனியா ஓவியா விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.



மூன்று மாதத்தில் வவுனியா மாவட்டத்தில் குற்றங்களை குறைக்கவும், குற்றவாளிகளைக் கைது செய்யவும், போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை மற்றும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர்களை கைது செய்தமை, விபத்துக்களை தடுப்பதற்கு சிறப்பாக பணியாற்றிய போக்குவரத்து பொலிஸ் பிரிவினருக்கும் வவுனியா பொலிஸ் பிரிவில் அகில இலங்கை ரீதியில் விளையாட்டுக்களில் கலந்து கொண்டு சிறப்பாகச் செயற்பட்ட 81 பொலிஸாருக்கு ஊக்குவிப்பு விருதுகளும் பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட பரிசுத்தொகையும் வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சோமரட்ன விதானபத்ரன, வன்னி பிராந்திய பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்னாண்டோ, வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் எம்.எஸ். ஜானக,வவுனியா, மன்னார் மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## ஆனந்த சுதாகரனின் விடுதலைக்காக
## கிராம அலுவலர்கள் கையெழுத்து சேகரித்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக கையளிப்பு

(பனிக்கன்குளம்)

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்ட ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனை பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி முல்லைத்தீவில் கிராம அலுவலர்கள் கையெழுத்து சேகரித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு அனுப்பி வைப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடம் மனுவைக் கையளித்துள்ளனர்.



சுதாகரனை நிபந்தனையற்ற பொதுமன்னிப்பில் ஜனாதிபதி விடுதலை செய்ய வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் நேற்று முன்தினம் மாலை கையெழுத்து சேகரித்து மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதற்காக ஏற்பாடுகளை மேற்கொண்டனர். (2-281)

## சுதாகரனை பொதுமன்னிப்பில் விடுவிக்குமாறு
## தமிழ் இளைஞர் சமூகத்தினரினால் முல்லையில் கையெழுத்து சேகரிப்பு

(பனிக்கன்குளம்)

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்த சுதாகரனின் பிள்ளைகளின் நிலையை கருத்தில் கொண்டு அவரை பொதுமன்னிப்பில் விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியை கோரி கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் மாலை முல்லைத்தீவு நகரில் நடைபெற்றது.



இவரை நிபந்தனையற்ற பொதுமன்னிப்பில் ஜனாதிபதி விடுதலை செய்யக்கோரி முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் இளைஞர் சமூகம் இந்த கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். (2-281)

## ஆத்மீக போராட்ட களத்திற்கு
## மதகுருமார் சென்று வழிபாடுகளை நடத்தினர்

(பனிக்கன்குளம்)

கேப்பாபிலவு மக்கள் தமக்கான நிலவிடுவிப்பு தீர்வினை அரசாங்கம் முன்வைக்காத நிலையில் கடந்த 25 ஆம் திகதி முதல் ஆத்மீக ரீதியாக சர்வமத பிரார்த்தனைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



இந்நிலையில் நேற்று முன்தினம் மக்களின் போராட்ட இடத்துக்குச் சென்ற கத்தோலிக்க மதகுருக்கள் வழிபாடுகளை நடத்தினர்.

கேப்பாபிலவு மக்களின் அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆறுமுகம்வேலாயுதபிள்ளை தெரிவித்துள்ளார். (2-281)

## திருவள்ளுவர் சிலை திறந்துவைப்பு

(பனிக்கன்குளம்)

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகனின் நிதியொதுக்கீட்டில் துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.



இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் சிலையை திறந்து வைத்தார். (2-281)

## கணனித் தொகுதி, தளபாடங்கள் வழங்கல்

(பனிக்கன்குளம்)

வன்னி பாராளுமன்ற உறுப்பினரும், வைத்திய கலாநிதியுமான சி.சிவமோகனின் நிதியொதுக்கீட்டின் கீழ் மல்லாவி வர்த்தக சங்கம் மற்றும் மல்லாவி பிரதேச வன்னி குறோஸ் கல்வி பேரவை ஆகியவற்றுக்கான தளபாடங்கள் மற்றும் கணனித் தொகுதி என்பன நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவ மோகனின் பங்குபற்றுதலுடன் வழங்கி வைக்கப்பட்டன.

புத்துவெட்டுவான் கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் பிரதான தொழிலாக விவசாயமே காணப்படுகிறது. அந்த வகையில் புத்துவெட்டுவான் வாழ் மக்களின் தேவைகருதி நெல் உலர விடும் தளம் அமைக்கப்பட்டதுடன், இதற்காக 1.5 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அதற்குரிய காசோலையும் நிகழ்வில் வழங்கி வைக்கப்பட்டது. இதுவரை காலமும் மக்கள் நெல் உலர விடுவதற்குரிய இடவசதிகள் இல்லாமல் சிரமப்பட்டு வந்த நிலையில், இந்த உதவிகள் மிகவும் தமக்கு பயன்மிக்கவொன்றாக அமைந்துள்ளதாக கிராம மக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# மரணம் மறைந்திருக்கும் வீதிகள்...

(சென்றவாரத்தொடர்ச்சி)

வாகனங்களை ஓடியபடியே கதைப்பவர்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோமல்லவா... கதையைத்தொடரலாம் வாருங்கள்.....

வாகனங்களை ஓடியபடியே கதைப்பவர்களே...சமிக்ஞை ஒளி காட்டி வண்டியை ஓரம் நிறுத்திப் பேசுங்கள். அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். வண்டியை நிறுத்தி அலைபேசியில் கதைக்கும் அந்த அரை விநாடிகள் உங்கள் பயணத்தை பாதித்து விடாது... மாறாக பல சிக்கல்களில் இருந்து




உங்களைப் பாதுகாக்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

## பேருந்துகளின் பேயோ (யா)ட்டம்

தனக்கெனத் தனி வாகனங்களைக் கொண்டிராதோர்... ஏன் நேரத்தை மீதப்படுத்த நினைப்போர்... எல்லாவற்றிற்கும் மேலாக சூழலின் அக்கறை கொண்டோர்... பெரும்பாலும் விரும்புவது பொது சன போக்குவரத்து வாகனங்களையே (Public transport). ஆனால் இன்று அவை கூட வியாபாரமாகி விட்ட நிலை.

"அக்கா... உள்ளுக்கு போங்கோ. பின்னுக்கு இடமிருக்கு... வாகனம் ஓடுற பக்கமாய்ப் பாத்து நில்லுங்கோ... இன்னும் இரண்டு பேர் நிற்கலாம்... நல்லாப் பின்னுக்கு போய் நில்லுங்கோ..."

இது நடத்துநர்கள் பேருந்து ஜன்னல் ஓரமாய் தாவித் தாவிச் சொல்லும் வசனங்கள். பேருந்து ஜன்னலூடு காற்று வருகிறதோ இல்லையோ.... இவர்களின் தலை மட்டும் நீண்டு அடிக்கடி வந்து விடும். இவ்வாறு ஹவுஸ்புல் (Housefull) ஆகச் செல்லும் பேருந்துகள் ஒன்றை ஒன்று துரத்தி விளையாடுவதும்... காலனின் கைகளில் நம்மக்களைக் கொண்டு சேர்த்துவிட காரணமாகின்றது. அரச பேருந்தை முந்துவதற்குத் தனியார் பேருந்துகளும்... தனியாரை முந்த அரச பேருந்துகளுமாக... முண்டியடிக்கையில் ஒன்றோடு ஒன்று உரசி முத்தமிட்டுக்கொள்ளும் நிலையில் சாளர வழி நிற்கும் பயணிகள் கதிகலங்கும் நிலையும் இங்குதான் உண்டு. இந்தவாறான ஓட்டப்பந்தயத்தில் வீதியால் பயணிக்கும் பேருந்துகள் காற்றில் பறந்து சாகசம் செய்வதும்... பாலத்தினடி தஞ்சம் புகுவதும் நாம் இன்று காணும் தினசரி பத்திரிக்கைச் செய்திகள்தான்...


ஏன் இந்த நிலை? அழகாக எழுதப்பட்ட சட்டத்தை மதித்து ஏற்று அந்தந்த வேகத்தில் வண்டிகளை செலுத்தினால் வாகனங்களுக்கான சேதத்தை மட்டுமல்ல பல உயிர்ச் சேதத்தையும் குறைத்து விடலாமல்லவா? எனவே பேருந்துச் சாரதிகளே... இது உங்களிடமிருந்து நாம் வேண்டுவது....

ஒன்றா இரண்டா எடுத்தியம்புவதற்கு? வீதிகளில் பயணிக்கையில் நடந்து செல்பவர்கூட என்ன நடக்குமோ என்ற ஏக்க நிலையுடன் தான் செல்கிறார் என்றால்.... எங்கே செல்கின்றன எங்கள் போக்குவரத்துச் சட்டங்களும் விதிகளும்?

பொலிஸார் அவ்வப்போது வீதிகளில் ஆஜராகத் தவறுவது இல்லை. இருப்பினும் பொலிஸார் எங்கே நிற்கிறதென்பதைத் தெரியப்படுத்த கடவை சமிக்ஞைகளை (passing light) காட்டிச் செல்லும் நல்லவர்களும் (?) நம்மிடையே இருக்கத்தான் செய்கிறார்கள். அதனால் அவர்கள் செய்வது சாகசம் செய்யும் இளவல்களை ஊக்குவிப்பது மட்டுமே...

இது விடுத்து வீதிகளின் நிலை பற்றியும் சற்றே திரும்பிப் பார்க்க வேண்டியது நமது தேவையாய் உள்ளது. ஆங்காங்கே பலபிரதான வீதிகள் அன்றைய அரசாங்கத்தின் அரவணைப்பில் அழகானதும் உண்டு... ஆயினும் ஆங்காங்கு அமைந்துள்ள குறுக்கு வீதிகளின் நிலை இன்னும் பரிதாபத்துக்கு உரியதே.

பள்ளங்களில் மழைக்கால வெள்ளங்கள் நிரம்பி நிற்க... அருகில் வீதியோரம் நம்மவர் வீசி எறிந்த குப்பைகள் பாதை நிரப்ப... மழைக்கால வீதிகளின் நிலையை நான் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை... இது மட்டுமா கார்பெட் (carpet) வீதிகளும் இன்று தன் மடியில் ஓரமாய் மழை நீரைச் சேமித்து (?) வைக்கத்தான் செய்கின்றன. இதனால் அதிவேகமாய் பயணிக்கும் வாகனங்கள் அருகிலே செல்வோரில் பன்னீர் தெளிக்கும் நிலையும் இங்கு உண்டு. இவைகூட இன்றைய வீதி விபத்துகளுக்கான காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.



## முச்சக்கர வண்டிகளின் முண்டியடிப்பு

இன்று எங்கு பார்த்தாலும் ஆட்டோக்கள்... வேலைக்கு இலகு என்று யாவராலும் விரும்பப்படும் போக்குவரத்துச் சாதனமும் அதுவே. "பிரசவத்திற்கு இலவசம்" என்று மட்டுமே தெரிந்த ஆட்டோக்காரர்கள்... இன்று "முட்டாதே முழுவதும் கடன்" என்று தம் வண்டியின் பின்னால் எழுதிவிட்டு முண்டியடித்து ஓடும் நிலையே அதிகம். அதனால் அவர்கள் மற்றைய வாகனங்களை முட்டி மோதுவதுதான் இன்றைய நிலவரம்... வண்டியின் சமிக்ஞைகளை சந்தியில் திரும்பிய பின்னரே போடுபவரும்... சமிக்ஞையே வேலை செய்யாதிருக்க கைகளை நீட்டி சைகை காட்டு



பவரும்... மூன்று பேரென்று சட்டம் சொல்ல வண்டி முழுவதும் மக்களை ஏற்றி... மன்னிக்கவும் "அடைந்து" செல்பவரும் என்று ஆட்டோக்கள் செய்யும் வித்தைகளும் அதிகம். இதனால்தான் பல வேளைகளில் சில்லுகள் மேலிருக்க தலைகீழாக நின்று சாகசமும் புரிகின்றனர் இந்த ஆட்டோக்கள்.

## வாகனங்களின் சமிக்ஞை விளக்குகளும் வீதி ஒழுங்குகளும்

இன்று எத்தனைபேர் சரியான சமிக்ஞைகளோடு தம் வாகனங்களில் பயணம் செய்கிறார்கள்? பக்க சமிக்ஞை விளக்குகள் உடைந்து தொங்குவதும் சமிக்ஞை விளக்குகள் சரியான தருணத்தில் போடப்படாததுமென விபத்துக்களுக்கான காரணங்கள் நீண்டுகொண்டு செல்கின்றன. வாகனங்களின் பக்கக் கண்ணாடிகளைச் சரியாகப் பார்க்காது பக்கவாதம் வந்தவர் போல் தலையைத் திருப்பும் இரு சக்கர வாகன ஓட்டுநர்களைப் பார்க்காதவர் இருக்கவே முடியாது.

இதுதவிர வலதுபுறம் திரும்புவதற்கு பக்கக்கண்ணாடியில் பார்த்து வீதியின் நடுப்பகுதிக்கு வருவதை விடுத்து வீதியின் இடதுபுற ஓரத்தில் சமிக்ஞை காட்டி நிற்கும் மிகச் சிறந்த ஓட்டுநர்களும் (?) நம்மிடத்தேயிருக்கத்தான் செய்கிறார்கள். இது விடுத்து இருபாதை (Two lanes) கொண்ட ஓர் பெருந்தெருவில் ஒரு வாகனத்தை முந்தும் போது எதிர்த்திசை வரும் வாகனம் பற்றிக் கவனியாது வாகனங்களை முந்துவதும் அதனால் விபத்துக்கள் ஏற்படுவதும்கூட இன்று வழமையாகிவிட்டது. அதுமட்டுமல்லாது சரியான சமிக்ஞை விளக்குகளை தேவையான பொழுதுகளில் ஒளிரவிடுவதும் இன்று அருகிவருவது தான் கவலைக்குரியதொரு விடயம்.

அடுத்து வீதியோரங்களில் வாகனங்களை நிறுத்துவோர் அவ்வீதியையே வாகனத் தரிப்பிடமாக்குவதும் போக்குவரத்திற்கு பெரும் இடையூறை விளைவிப்பதும் இன்று தவிர்க்க முடியாததொன்றாக உருவெடுத்து நிற்கும் தலையிடி. பாதசாரிகள் நடப்பதற்காய் ஒதுக்கப்பட்ட வீதியோரங்கள்கூட இன்று வாகனங்கள் இளைப்பாறும் இடங்களாகியுள்ளன.

இன்றைய பரிதாப நிலை... மாற்றிட நினைத்தாலும் மாற்ற முடியாத இந்த நிலை மாறினாலே பாதி விபத்துக்கள் குறைந்து விடும்... உண்மைதான் அகல வீதிகள் அடுக்கப்பட்ட வாகனங்களால் நலிவுற்றுச் செல்லும் இந்தநிலை என்று தான் மாறும்? மக்களே சிந்திக்க வேண்டியது நாம் ஒவ்வொருவருமே! விழித்தெழுங்கள்...

## நாய்களின் இருப்பிடம்

இதுவரை நான் சொன்ன விடயங்கள் தவிர்த்து வீதிகளில் வில்லனாக உருவகிப்பவை இந்த நாய்கள் தான். நாய்களை கொல்லக் கூடாது என்ற மகிந்தவின் சிந்தனை இன்று காணுமிடமெங்கும் நாய்கள் சுற்றித் திரியக் காரணமாகி விட்டது. எங்களின் வீதிகள் இன்று நாய்களின் வதிவிடம்.

இதில் முக்கிய விடயமென்னவெனில் வீட்டில் வளர்க்கும் நாய்களையும் நம்மவர் காலைக்கடன்களுக்காக வீதியோரம் விடுவது தான். இதனால் வீதிகள் அசுத்தமாவது மட்டுமல்ல வீதியால் போகிறவரை அந்நாய்கள் விட்டுத் துரத்துவதும் விபத்துகள் ஏற்படக் காரணமாகிறது.

இவ்வாறாக எழுதுவதற்கு இன்னும் பல விடயங்கள் உண்டு... என் எழுதுகோலும் எழுதிடத்தான் துடிக்கிறது. இருப்பினும் என் துடிப்படக்கி... மனக்குமுறலின் வெளிப்பாட்டை ஓரளவு தெரிவித்த திருப்தியில் தற்காலிகமாக இவ்விடம் விட்டு நகர்கிறேன். அதற்கு முன்னர் இன்றைய காலத்தில் அதிக உயிர்களை காவு கொள்ளும் வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையில் நாம் அனைவரும் ஈடுபட வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள்.

எனவே விழிப்படைவோம்! விபத்தை தடுப்போம்!!

கலாநிதி. (செல்வி)
ஷிவதர்சினி இராசலிங்கம்.
சிரேஷ்ட விரிவுரையாளர்
இரசாயனவியற்றுறை.
விஞ்ஞானபீடம்.
யாழ். பல்கலைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 207

இந்தியாவில் முதன்முதலாக 100 % சூரியசக்தி மையங்களைக் (PHCs) கொண்ட மாவட்டம் எது?

புதிர் 207இற்கான விடைகளை 9.04.2018 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி. (செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர்,
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்-பிரிவு A,
84, கல்லூரி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.

இப் பணப்பரிசினை யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் பிரிவு A ஆசிரியரிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 206 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

செ. உதயன்
140 புன்னைநீராவி.
விஸ்வமடு, முல்லைத்தீவு.

**புதிர் 206க்கான கேள்வியும் விடையும்:**

அண்டவியல் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டவரும் கருந்துளைகள் கதிர் வீச்சுக்களை வெளியிடுவதனால் காலப்போக்கில் இல்லாதழிகின்றன என்றும் ஆய்ந்தறிந்து அண்மையில் மறைந்த விஞ்ஞானி யார்? Stephen Hawking

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 207**

சரியான விடை:-......................................

முழுப்பெயர்:-......................................

முகவரி:-......................................

தொ.பே. இல:......................................

கையொப்பம்:......................................

# விபத்தில் உயிரிழந்த மாணவனுக்கு 9A சித்தி

விபத்துக்குள்ளாகி உயிரிழந்த மாணவன் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினை பெற்றுள்ளார். இதேவேளை மாணவனின் பிரிவு குடும்பத்தினரையும் நண்பர்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

வறணி இயற்றாலையைச் சேர்ந்த புவனேஸ்வரன் காருசன் (வயது 16) கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி பயணித்த போது மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டையிழந்து வேலிக்குப் போடப்பட்டுள்ள கம்பம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் படுகாயமடைந்து மாணவன் உயிரிழந்தார். உயிரிழந்த மாணவனுடைய தந்தையாரான (ஆசிரியர்) புவனேஸ்வரன் கடந்த நவம்பர் மாதம் கோப்பாய் பாலத்துக்கு அருகில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த மாணவன் க.பொ.த சாதாரண தர பரீட்சை எழுதியிருந்தார். தற்போது பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் குறித்த மாணவன் 9 பாடங்களிலும் ஏ தர சித்தியை பெற்றுள்ளார். (இ-9)


# சுட்டுக் கொல்லப்பட்ட மெய்ப்பாதுகாவலரின் மகள் க.பொ.த. சா/த பரீட்சையில் சிறந்த பெறுபேறு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் வீதியில் சுட்டுக் கொல்லப்பட்ட பொலிஸ் சார்ஜனின் மகள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு வெளியான பெறுகளில் சமாதி ஆமந்தா ஹேம சந்திர 6 "ஏ" தர சித்தியினையும், 2 "பி" சித்தியுனையும், 1 "சி" சித்தியுமாக ஒன்பது பாடங்களிலும் குறித்த மாணவி சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளார்.

கடந்த ஆண்டு ஜுலை மாதம் நல்லூர் பகுதியில் வைத்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் சார்ஜன் ஹேமசந்திர துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்தார்.

இதனையடுத்து குறித்த பொலிஸ் சார்ஜனது பிள்ளைகள் கல்வி கற்று முடிக்கும் வரை எல்லா கல்வி செலவுகளையும் தாம் பொறுப்பேற்பதாக நீதிபதி இளஞ்செழியன் உறுதியளித்திருந்தார்.

இந்நிலையிலேயே குறித்த மாணவி சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளார். (இ-7)

# தொண்டராசிரியர்களை கைவிடமாட்டோம்

## இராதாகிருஸ்ணன் உறுதி



(கொழும்பு)

வடக்கு மக்களின் அபிவிருத்திகளுக்கு வடக்கு மக்களே தடையாக இருக்க கூடாது என கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

வடமாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு இரண்டாம் கட்டமாக நியமனம் வழங்குவது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று நேற்று வியாழக்கிழமை கல்வியமைச்சில் நடைபெற்றது.

இதன் போது உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன், 30 வருடகாலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக வடக்கின் அனைத்து விதமான அபிவிருத்திகளும் ஸ்தம்பிதம் அடைந்து விட்டது. குறிப்பாக இலங்கையில் கல்வியின் முதல் மாவட்டமாக காணப்பட்ட யாழ்.மாவட்டம் தற்போது பின் தள்ளப்பட்டுள்ளது.

இதனை அபிவிருத்தி செய்ய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சிபாரிசுக்கு அமைய 10 ஆண்டு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதுமட்டுமல்லாது குறித்த காலத்தில் வடமாகாண கல்வி அபிவிருத்திக்கு கல்வி அமைச்சு பல்வேறு வேலை திட்டங்களை முன்னெடுத்து செயற்பட்டு வருவதாகவும் கூறினார்.

அதில் ஒன்று வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் நியமனம். இந்த நியமனம் தொடர்பாக சுமார் 2 வருடங்களாக பேசி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு முதற் கட்டமாக தொண்டர் ஆசிரியர்கள் 182 பேருக்கு நியமன கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் இவர்களுக்கு நியமனம் கொடுக்க வேண்டாம் அனைவருக்கும் ஒன்றாக கொடுங்கள் என்றும் தங்களுக்கும் வழங்க மாட்டீர்களா? 182 பேருக்கு மாத்திரம் கொடுத்து விட்டு எங்களை ஏமாற்றி விடுவீர்களா? என்றெல்லாம் கூறி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

உண்மையாக யுத்த காலத்திலும் அதற்கு பின்னரும் வடக்கில் ஆசிரியர் தட்டுப்பாடு இருந்தபொழுது கல்விக்கும் கல்வி அமைச்சுக்கும் உறுதுணையாக இருந்த இந்த தொண்டர் ஆசிரியர்களை நாங்கள் மறக்க மாட்டோம்.

தொண்டர் ஆசிரியர்களை சுற்றுநிருபத்திற்கு ஏற்ப உள்வாங்குவதில் ஏற்பட்ட சிக்கலும் உள்ளூராட்சி தேர்தலுமே தாமதத்திற்குகாரணம்.

இவ்வாறான நிலையில் 182 பேருக்கு முதற் கட்டமாக நியமனம் வழங்குவதை எதிர்ப்பது ஏற்றுக் கொள்ள முடியாது. மாறாக இச்செயற்பாடு வடக்கு மக்களின் அபிவிருத்திக்கு வடக்கு மக்களே தடையாக இருப்பதாக கருதுகின்றேன்.

தொடர்ந்து இரண்டாம் கட்டமாக 494 வட மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கான நேர்முக பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19, 20 ஆம் திகதிகளில் கல்வி அமைச்சில் நடைபெற்று இரண்டாம் கட்டமாக நியமனம் வழங்க நவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த நேர்முக பரீட்சை முடிந்ததும் உடனடியாக நியமனம் வழங்குவோம். மொத்தமாக 676 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவை கட்டாயம் வழங்கப்படும். அது வரை பொருத்திருந்து எந்த பிரச்சினையும் இன்றி நியமனங்களை வழங்க ஒத்துழைக்க வேண்டும் என்று கூறினார்.

அதேவேளை முதற் கட்டமாக 182 வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கும் ஒப்பந்த அடிப்படையிலான 142 ஆசியர்களுக்கும் மொத்தமாக 324 நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன் கிழமை அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன், வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி உட்பட கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராஜகோபுரத்திற்கு அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மேற்திசை வாயில் இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 5.30 மணிக்கு இடம்பெறும் என தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாக சபை அறிவித்துள்ளது. (இ-7)

# இனிமேல் பரீட்சை எழுதமுன் வினாத்தாளை வாசிப்பதற்கு 15 நிமிடம் வழங்கப்படும்

(கொழும்பு)

இனிமேல் மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் தோற்றும்போது பரீட்சை எழுத முன் வினாத்தாளை வாசிக்க 15 நிமிடங்கள் வழங்கப்படும். அதன் பிறகே பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர் என இலங்கைப் பரீட்சைகள் திணைக்கள உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பல புதிய யுக்திகளை, மாற்றங்களை பரீட்சைகள் திணைக்களம் இவ்வாண்டிலிருந்து முன்னெடுக்கவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், 2001ஆம் ஆண்டிற்குப் பின்னரான பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்த வலயக்கல்வி பணிப்பாளர்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுப்பரீட்சை நடைபெறும் மண்டபங்களுக்கு மேற்பார்வையாளர் மற்றும் நோக்குநர்களுக்கு மேலதிகமாக மேலதிக மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்கள் நோக்குநர்களை மேற்பார்வை செய்வார்கள்.

ஓகஸ்ட் புலமைப்பரீட்சை முற்பகுதியில் நடத்தப்படவுள்ளது. அதேபோல க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை டிசெம்பர் முதல் வாரத்திலே ஆரம்பிப்பதுடன் அந்த மாதத்திலேயே மதிப்பீட்டையும் நடத்தி முடிக்க ஏற்பாடு செய்ய ப்படும்.

இனிமேல் கபொ.த சா.த மற்றும் உயர்தர சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற விரும்பினால் ஒன்லைனில் விண்ணப்பிக்க முடியும். அதற்கான கட்டணத்தை அருகிலுள்ள வங்கியில் செலுத்தி அதன் இலக்கத்தை ஒன்லைனில் அறிவித்தால் பிரதிகளை கையில் கிடைக்குமாறு அல்லது தபாலில் அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தரம் 6-9 வரை ஒதுக்கப்படாத பாடவேளை என்று ஒன்றிருந்து வந்துள்ளது. இனிமேல் அப்பாடவேளைக்கு தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பாடத்தினை இடுமாறு கேட்கப்பட்டுள்ளது. அப்பாடத்திற்கு கல்வியியல் கல்லூரி பயிற்சி முடித்தவர்களை நியமிக்க வேண்டும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (இ-7)

# சர்வதேச தொற்றா நோய் மாநாடு இலங்கையில்

தொற்றா நோய் சம்பந்தமான முதலாவது சார்க் நாடுகளின் மாநாடு சுகாதாரம் போசணைகள் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரட்ன தலைமையில் நாளை மறுதினம் 31ம் திகதி மற்றும் ஏப்ரல் முதலாம் திகதி கொழும்பு கோல்ட் பேஸ் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

குறித்த மாநாட்டில் தொற்றா நோய் இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள், கொள்கைகள் நடைமுறைப்படுத்தல், சார்க் நாடுகளின் அனுபவ கலந்துரையாடல்கள் என்பன இடம்பெறவுள்ளன.

மரபணு, உடல் அமைப்பு மற்றும் சூழல் பழக்கம் போன்ற காரணங்களினால் உருவாகும் தொற்றா நோய்களை இல்லாதொழிப்பதற்காக உலக சுகாதார நிறுவனம் அனைத்து நாடுகளிலும் பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. காசநோய், புற்று நோய், சுவாசக் கோளாறு, சிறுநீரக நோய் போன்ற பிரதான தொற்றா நோய்களுக்கு கூடிய கவனம் செலுத்தப்பட்டு அவற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதற்கான பல வழிமுறைகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படவுள்ளன.

உலகளாவிய ரீதியில் வருடத்திற்கு 10 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் தொற்றா நோயினால் மரணிக்கின்றனர். புகையிலை பாவனை, குறைந்த ஓய்வு, போஷாக்கான உணவு உட்கொள்ளாமை போன்றன தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களாகும்.


தொற்றா நோயானது உலகின் நிலையான அபிவிருத்திக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் அடையாளப்படுத்தியுள்ளது. எனவே 2030ம் ஆண்டில் தொற்றா நோயினை இல்லாதொழிப்பதினூடாக உலகத்தில் நிலையான அபிவிருத்தியை வெற்றி கொள்வதற்கான பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கையில் ஆரம்பிக்கப் பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு உலக சுகாதார மையம் தமது வாழ்த்தினை தெரிவித்துள்ளதுடன் இலங்கையின் செயற்பாடுகளை ஏனைய நாடுகளும் முன்மாதிரியாக கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும் மாரடைப்பு, அதிக இரத்த அழுத்தம் போன்ற நோய்களினால் ஏற்படுகின்ற மரண வீதத்தினை 2025ம் ஆண்டு ஆகின்ற பொழுது 25 வீதத்தாலும், போதைப் பொருள் பாவனையை 10 வீதத்தாலும் புகைத்தல் பாவனையை 30 வீதத்தாலும் குறைப்பதற்கும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் சில திட்டங்கள் நடைமுறையில் இடம்பெற்று வருவதாகவும் சுகாதாரம் போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். (இ-7)

பாரதம்

# பூமியைப் போலவுள்ள கே 2 - 229 பி கிரகம்



(டில்லி)

பூமியில் இருந்து சுமார் 260 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவுக்கு அப்பால் பூமியைப் போன்ற ஒரு புதிய கிரகத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பூமியில் இருந்து சுமார் 260 மில்லியன் ஒளியாண்டுகள் தொலைவுக்கு அப்பால் பூமியைப் போன்ற ஒரு புதிய கிரகத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பிரான்ஸ் நாட்டில் உள்ள ஏக்ஸ் - மார்செய்லே பல்கலைக்கழகம், லண்டனில் உள்ள வார்விக் பல்கலைக் கழகமும் இணைந்து நடத்திய ஆராய்ச்சியில், பூமியைப் போன்று நிறையுள்ள புதிய கிரகத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கே 2-229பி (K2-229b) என்று பெயரிடப்பட்டுள்ள இந்த கிரகமானது பூமியை விட 20 சதவீதம் பெரிதாகவும், 2000 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும் கொண்டதாக இருக்கிறது.

இந்த கிரகம் தனது நட்சத்திரத்துக்கு மிகவும் அருகில் அமைந்திருப்பதால் அங்கு அதிகளவிலான வெப்பம் நிலவி வருவதாக கூறப்படுகிறது.

அந்த கிரகமானது தனது நட்சத்திரத்தை 14 மணி நேரத்துக்கு ஒருமுறை சுற்றி வருகிறது. இந்த புதிய கிரகத்தை கே2 (K2) என்ற தொலைநோக்கியின் மூலமாக கண்டுபிடித்ததால், இந்த கிரகத்துக்கு கே2-229பி (K2-229B) என்று பெயரிட்டுள்ளனர். (10)

# மேலாண்மைவாரியம் அமைக்காவிட்டால் அமைச்சர்கள் தற்கொலை செய்வோம்

## நவநீத கிருஷ்ணன் எச்சரிக்கை



(சென்னை)

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காவிட்டால் அ.தி.மு.க.அமைச்சர்கள் தற்கொலை செய்வோம் என அக்கட்சியை சேர்ந்த அமைச்சர் நவநீத கிருஷ்ணன் எச்சரிக்கை விடுத்துள்ளார். நேற்று முன்தினம் இடம் பெற்ற நாடாளுமன்ற மக்களவையில் கருத்து தெரிவித்த அவர்,

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காவிட்டால் அ.தி.மு.க அமைச்சர்கள் தற்கொலை செய்வோம்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அமுல்படுத்தப்படவில்லை என்றால் அரசியல் சாசனம் எதற்கு? காவிரி மேலாண்மை வாரியம் அமைக்காவிட்டால் ராஜினாமா செய்யுங்கள் என தமிழகத்தில் கோரிக்கை விடுக்கிறார்கள் என அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பாக உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

ஆனால் கர்நாடக தேர்தலை காரணம் காட்டி காவிரி மேலாண்மை வாரியத்தை அமைப்பதில் தாமதப்படுத்தலாம் என செய்தி வெளியாகியுள்ள நிலையில் தேர்தலுக்கும் நீதிமன்ற தீர்ப்பை அமுல்படுத்துவதற்கும் தொடர்பு இல்லை என தலைமை தேர்தல் ஆணையர் கடந்த புதன்கிழமை தெளிவுபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (10)

# மேலாண்மை வாரியம் அமைத்தால் கர்நாடக மாநில உரிமை பறிபோகும்

## சித்தராமையா தெரிவிப்பு



(பெங்களூர்)

காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தால் அது மாநில அரசின் உரிமையை பறிப்பது போன்று ஆகிவிடும் என்று கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா நேற்று பெங்களூரில் காவிரி மேலாண்மை வாரியம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

காவிரி நதிநீரை பகிர்ந்து கொள்வதற்கு மேலாண்மை வாரியத்தை அமைக்கக்கூடாது.

காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தால் அது மாநில அரசின் உரிமையை பறிப்பது போன்று ஆகிவிடும்.

அத்தகைய நிலை ஏற்பட்டால் அதற்கான முழு பொறுப்பையும் மத்தியில் ஆளும் பா.ஜனதா அரசு தான் ஏற்க வேண்டும்.

எனவே காவிரி மேலாண்மை வாரி யத்திற்கு பதில் கண்காணிப்பு குழு ஒன்றை மத்திய அரசு அமைக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (10)

# 'கலவர களமானது வெ...

# தப்பியோட எண்ணிய கை...

# சிறைச்சாலைக்கு தீ...


## 68 பேர் பலி

(வாலன்சியா)

வெனிசுலா நாட்டில் சிறையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 68 கைதிகள் உயிரிழந்தனர். சிறையை உடைத்து தப்பிக்கும் முயற்சியாக தீ வைத்ததில் 68 பேர் உயிரிழந்துள்ளனர்.


வெனிசுலா நாட்டின் வாலன்சியா நகரத்தில் உள்ள சிறையில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது. சிறை முழுவதும் தீ பரவியதில் 68 பேர் உடல் கருகி பலியாகியுள்ளனர். இதனை தொடர்ந்து தீயணைப்பு வீரர்கள் அங்கு சென்று தீயை அணைத்தனர்.

கைதிகள் சிலர் சிறையை உடைத்து தப்பிக்கும் முயற்சியாக தீ வைத்தனர்.



# பிரதமர் இல்லத்தை முற்று...

# தமிழக விவசாயிகள்...



(டில்லி)

டில்லியில் பிரதமர் இல்லத்தை முற்றுகையிட சென்ற பி.ஆர். பாண்டியன் உள்ளிட்ட தமிழக விவசாயிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க உச்ச நீதிமன்றம் விதித்த ஆறு வாரக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது.

ஆனால், இதுவரை மத்திய அரசு அதற்கான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை.

இதுதொடர்பாக தமிழக விவசாயிகள் கடந்த 26ம் திகதியில் இருந்து டில்லியில் போராடி வருகிறார்கள்.

இது குறித்து தமிழக அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் பி.ஆர்.பாண்டியன் ஊடகவியலாளர்களை சந்தித்தார்.

அப்போது, இதுவரை காவிரி விவகாரத்தில் எந்தவித நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ளவில்லை. அதனை எப்படியாவது முடக்கும் முயற்சியில் தான் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

ஆனால் தமிழக பாஜக தலைவர்கள் காவிரி மேலாண்மை வாரியம் அமையும் என்று சொல்லி மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருகிறார்கள்.

மேலும், காவிரி வாரியத்திற்காக ராஜினாமா செய்யத் தயார்.ஆனால், அதனால் எதுவும் நடக்காது என்று பொன். ராதாகிருஷ்ணன் பேசி இருக்கிறார். முதலில் அவர் ராஜினாமா

# செவ்வாய்க்கிரகத்தில் மந்தை...

# நாசா மிரளவைக்கும் பு...

(நாசா)

செவ்வாய்க்கிரக மேற்பரப்பில் ஆயிரக்கணக்கான உயிரினங்கள் மொத்தமாக மேய்வது போன்ற ஒரு காட்சி இடம் பெற்றுள்ளது.

செவ்வாய்க்கிரகத்தில் தண்ணீர் இருக்கிறதா? அங்கு உயிரினங்கள் வாழ முடியுமா? என்ற ஆராய்ச்சி நீண்ட காலமாக நடந்து வருகிறது.

இந்த ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக, அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாசா', 2 ஆண்டுகளுக்கு முன்பு, 'கியூரியாசிட்டி ரோவர்' என்ற விண்கலத்தை செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பி வைத்தது.

செவ்வாய்க்கிரகத்தில் உள்ள காட்சிகளை படம் பிடித்து அனுப்புவதற்காக, அந்த விண்கலத்தில், 'மாஸ்ட் கேம்' என்ற கமராவும் பொருத்தப்பட்டுள்ளது. இந்நிலை



# வெளிநாடு

## ...வனிசுலா'

## ... கைதிகள்

## ...தீவைப்பு



தீப்பிடித்த தகவல் பரவியதை யடுத்து கைதிகளின் உறவினர்கள் சிறை முன்பு திரண்டனர். அவர்களை கலவர தடுப்பு பிரிவு பொலிஸார் தடுத்து நிறுத்தியபோது தள்ளுமுள்ளு ஏற்பட்டது. சிலர் கற்களை வீசி தாக்கினர்.

இதையடுத்து கண்ணீர் புகை குண்டுகளை வீசி பொதுமக்களை பொலிஸார் விரட்டியடித்தனர். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வெனிசுலாவில் உள்ள சிறைகளில் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக அளவில் கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களும் பயன்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (10)

## ...றுகையிட்ட ...ள் கைது

செய்து மத்திய அரசுக்கு அழுத்தம் தரட்டும். அதைவிடுத்து மத்திய அரசைக் காப்பாற்றுவதற்காக தமிழக மக்களுக்கு துரோகம் செய்ய வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வலியுறுத்தி, டில்லியில் தமிழக விவசாயிகள் பாராளுமன்ற வீதியில் மறியல் போராட்டம் நடத்தினர். மத்திய அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர்.

பொலிஸார் அவர்களை கலைந்து செல்லுமாறு கூறினர். ஆனால் கேட்கவில்லை. இதை தொடர்ந்து பொலிஸார் விவசாயிகளை கைது செய்தனர்.

டில்லியில் பிரதமர் இல்லத்தை முற்றுகையிட சென்ற பி.ஆர்.பாண்டியன் உள்ளிட்ட தமிழக விவசாயிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (10)

## ...தைக் கூட்டம் ...புகைப்படம்



யில், 'ரோவர் விண்கலம் செவ்வாய்க்கிரக நிலப்பரப்பில் உள்ள காட்சிகளை படம் பிடித்து பூமிக்கு அனுப்பி வருகிறது. ஒரு படத்தில், விலங்குகளின் தொடை எலும்புகள் கீழேகிடப்பது போன்று தோன்றுகிறது. 'இந்த நிலையில் அண்மையில் அனுப்பி உள்ள புகைப்படத்தில் செவ்வாய்க்கிரக மேற்பரப்பில் ஆயிரக்கணக்கான உயிரினங்கள் மொத்தமாக மேய்வது போன்ற ஒரு காட்சி இடம் பெற்றுள்ளது. (10)

# மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் மியன்மாரின் ஜனாதிபதியானார் வின்மியின்ட்

(நய்பிடா)

மியன்மார் நாட்டின் புதிய ஜனாதிபதி தேர்வு செய்ய பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் அதிக வாக்குகளை பெற்ற வின்மியின்ட் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மியன்மார் நாட்டில் கடந்த 2016ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஆங் சான் சூகி தலைமையிலான ஜனநாயகத்திற்கான தேசிய லீக் கட்சி அமோக வெற்றி பெற்றது. இதன்மூலம் பல ஆண்டுகளாக நீடித்த இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது. ஜனாதிபதியாக ஹிதின் கியா பதவியேற்றார்.

71 வயதாகும் பிரதமர் ஹிதின் கியா உடல் நலக்குறைவால் தனது பதவியை ராஜினாமா செய்ததாக கடந்த வாரம் அறிவிக்கப்பட்டது.



இந்நிலையில், புதிய ஜனாதிபதியை தேர்வு செய்ய பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் அதிக வாக்குகளை பெற்ற வின்மியின்ட் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மொத்தம் பதிவான வாக்குகளில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை பெற்ற வின்மியின்ட் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவிப்பை பாராளுமன்ற சபாநாயகர் மான் வின் கைங் தான் வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் அதிகமான எம்.பிக்களின் ஆதரவுடன் ஆங் சான் சூகியின் ஆதரவு பெற்ற ஹிதின் கியாவ் மியன்மார் நாட்டின் ஜனாதிபதியாக பதவி ஏற்றார்.

அரசின் தலைமை ஆலோசகராக ஆங் சான் சூகி இருந்து வருகிறார்.

அரசின் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் இவரது அறிவுறுத்தலின் பேரில் தான் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (10)

# ரஷ்ய வணிகவளாகத் தீ விபத்தில் உயிரிழந்த 41 குழந்தைகளின் உடல்கள் நல்லடக்கம்

(மொஸ்கோ)

ரஷ்யா வணிக வளாக தீ விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் உடல்கள் தேசிய துக்கத்துக்கு இடையில் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டது.

ரஷ்யாவின் சைபீரியா மாகாணத்தில் கெம்ரோவோ நகரத்திலுள்ள வின்ட்டர் செர்ரி மால் வணிக வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திடீரென மாலில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 64 பேர் உயிரிழந்தனர்.

இறந்தவர்களில் 41 பேர் குழந்தைகள் என நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தீ விபத்து நிகழ்ந்த வணிக வளாகத்தை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர்




புடின் நேரில் சென்று ஆய்வு செய்தார்.

வணிக வளாக நிர்வாகத்தினரின் மிக மோசமான குற்றவியல் சார்ந்த மெத்தனப் போக்கால் (criminal negligence) இந்த கோர விபத்து நிகழ்ந்ததாக புடின் வருத்தம் தெரிவித்தார்.

இந்த சம்பவத்துக்கு காரணமானவர்கள் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என குறிப்பிட்டுள்ள அவர், 64 உயிர்கள் உயிரிழந்ததற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நாடு முழுவதும் 'நேற்று முன்தினம் தேசிய் துக்கதினம் அனுசரிக்குமாறு ஜனாதிபதி புடின் கேட்டுக் கொண்டார்.

இதையொட்டி, அரசு அலுவலகங்களில் தேசிய கொடிகள் நேற்று முன்தினம் அரை கம்பத்தில் பறக்க விடப்பட்டன. வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் கேளிக்கை சார்ந்த நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்பட்டன.

இதற்கிடையில், தீ விபத்தில் உயிரிழந்த குழந்தைகளின் உடல்கள் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டது.

பெற்றோர்கள், உறவினர்களின் கண்ணீர் மற்றும் பிரார்த்தனை பாடல்களுக்கு இடையில் பல்வேறு இடங்களில் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. (10)

## புழுதி மண்டலமாய் மாறிய சீனா



(பீஜிங்)

சீனாவை தாக்கிய மணல் புயலால் உருவான காற்று மாசால் தலைநகர் பீஜிங் கடும் பாதிப்புக்குள்ளானது.

இரண்டு நாட்களாக தொடர்ந்து வீசும் மணல் புயலால் பீஜிங்கின் கட்டடங்கள் புழுதி மற்றும் தூசியால் சூழப்பட்டுள்ளன.

மணல் துகள்கள் படிந்து வீதிகளும் மோசமான புழுதி மண்டலமாக காணப்படுகிறது. Tianjin, Hebei, Shanxi, Jilin, Liaoning உள்ளிட்ட 6 மாகாணங்களுக்கு உட்பட்ட 15 இலட்சம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவிற்கு காற்று மாசுபட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் முகமூடி அணிந்து வெளியே செல்கின்றனர்.

அந்நாட்டு மக்கள் சுவாசம் மற்றும் உடல் நலத்தில் பாதிப்பு ஏற்படாமல் இருக்க முகமூடி அணிந்து செல்கின்றனர்.

மங்கோலிய எல்லையில் உள்ள பாலைவன பிரதேசத்திலிருந்து சீனாவை மணல் புயல் தாக்கும் என அந்நாட்டு வானிலை மையம் ஆரஞ்ச் மாசுபாடு எச்சரிக்கை விடுத்தது.

இதனால் வீடு மற்றும் கடைகளின் கதவுகள், ஜன்னல்களை மூடி வைக்க ஏற்கனவே அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (10)

# உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மீண்டும் பாக்.சென்றார் மலாலா

(இஸ்லாமாபாத்)

தலிபான் தீவிரவாதிகளால் தாக்கப்பட்ட பிறகு முதல் முதலாக மலாலா யூசுப் பாகிஸ்தான் சென்றுள்ளார்.

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் பெண் கல்விக்கு எதிராக உள்ளனர். பாடசாலைகளைத் தாக்கி அழிப்பது, பாடசாலைக்குச் செல்லும் பெண்களை தாக்குவது போன்றவற்றிலும் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

பாகிஸ்தான் ஸ்வாட் பகுதியை சேர்ந்த 15 வயது மலாலா பெண் கல்வியை ஆதரித்து குரல் கொடுத்து வந்தார். பத்திரிகைகளிலும் கட்டுரை எழுதினார்.

இதனால்கோபம்அடைந்த தலிபான் தீவிரவாதிகள் 2012-ம் ஆண்டு அவரை துப்பாக்கியால் சுட்டனர். பாடசாலைப் பேருந்தில் பயணம் செய்த போது இந்த தாக்குதல் நடந்தது.

இதில், மலாலா பலத்த காயம் அடைந்தார். அவ



ருடைய தலையில் குண்டு பாய்ந்து சேதம் ஏற்பட்டு இருந்தது.

ஆபத்தான நிலையில் லண்டனுக்கு அழைத்து செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளித்தனர். அவரது மண்டை ஓட்டின் ஒரு பகுதி அகற்றப்பட்டு சத்திரசிகிச்சையின் பிறகு முழுமையாக குணமடைந்தார்.

அதை தொடர்ந்து அவர் தனது பெற்றோருடன் லண்டனிலேயே வசித்து வருகிறார். 2014ஆம் ஆண்டு அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இதன் பிறகு பெண் கல்வி உரிமைக்காகவும், குழந்தைகள் கல்விக்காகவும் தொடர்ந்து ஆதரவாக பிரசாரம் செய்து வருகிறார். ஐ.நா.வின் இளைஞர் தூதராகவும் பணியாற்றுகிறார்.

இந்த நிலையில்தான் தாக்கப்பட்ட பிறகு முதல் முதலாக அவர் இப்போது பாகிஸ்தான் சென்றுள்ளார்.

அவருடன்அவரதுபெற்றோரும் வந்துள்ளனர். 4 நாள் பயணமாக அவர் பாகிஸ்தான் சென்றிருப்பதாகவும் அவரை தலிபான் தீவிரவாதிகள் குறிவைத்து தாக்கலாம் என கருதுவதால் அவரது சுற்றுப்பயணம் முழுவதும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

மலாலா பிரதமர் அப்பாசி மற்றும் முக்கிய தலைவர்களை சந்திக்க இருப்பதாகவும் அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (10)

# 9960 மாணவர்களுக்கு 9A

## பரீட்சைகள் ஆணையாளர் பெருமிதம்

(கொழும்பு)

இம்முறை கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையில் சித்தியடைவு வீதம் அதிகரித்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளில் 9960 மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் A(9A) சித்திகளைப் பெற்றுள்ளதாகவும் கணித பாடத்தில் சித்தியடைந்த வீதம் இம்முறை அதிகரித்துள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டு சாதாரண தர பெறுபேற்றின்படி உயர்கல்வியைத் தொடர்வதற்கான மாணவர்களின் வீதம் அதிகரித்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் உயர் கல்வியைத் தொடர்வதற்கு 69.94% மாணவர்கள் தகுதி பெற்றிருந்ததுடன் 2017ஆம் ஆண்டின் பெறுபேறுகளின்படி 73.05% மாணவர்கள் உயர்கல்வியைத் தொடரக் கூடிய வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

அதன்படி இம்முறை உயர் கல்வியைத் தொடரக் கூடியவர்களின் எண்ணிக்கை 3.11% இனால் அதிகரித்துள்ளது.

இதேவேளை 2016ஆம் ஆண்டு பெறுபேறுகளுடன் ஒப்பிடுகையில் கணித பாட சித்தி 4.43% இனால் அதிகரித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்தார்.

2016 ஆம்ஆண்டில்கணித பாடத்தில் சித்தியடைந்த மாணவர் வீதம் 62.81% ஆக இருந்ததுடன் 2017ஆம் ஆண்டில் 67.24% ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை அனைத்து பாடங்களிலும் A சித்திகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையும் இம்முறை அதிகரித்துள்ளது. கடந்த வருடம் 8224 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் A சித்திகளைப் பெற்றிருந்ததுடன் இம்முறை 9960 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் A சித்திகளை பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித மேலும் தெரிவித்தார். (7)

# பிரதமர் ரணிலைக் கவிழ்ப்பதற்கு மும்முனைகளில் தீவிர முயற்சியாம்

## வாசுதேவ எம்.பி கூறுகிறார்



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி கவிழ்ப்பதற்கு மூன்று முனைகளில் தீவிர முனைப்புக் காட்டப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவு திரட்டும் முனைப்புக்கள் மூன்று முனைகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கூட்டு எதிர்க்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனையை தோற்கடிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினர் பெருந்தொகை பணத்தை வாரி இறைத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பணத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் சில தரப்பினர் பிரதமருக்கு ஆதரவளிக்க இணங்கியுள்ளனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதாக போலியாக பாசாங்கு செய்து ரணிலுக்கு ஆதரவளிக்கவும் சிலர் இணங்கியுள்ளதாக வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார். (7)

# தொழிலாளர் தினத்தை ஒத்திவைத்த அரசாங்கத்திற்கு எதிராக கண்டனம்

## முற்போக்கு சோசலிசக் கட்சி



(கொழும்பு)

உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் சர்வதேச தொழிலாளர் தினத்தை ஒத்திவைக்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை வன்மையாகக் கண்டிப்பதாக முற்போக்கு சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொடி தெரிவித்துள்ளார்.

உழைக்கும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம், இடதுசாரிக் கட்சிகள் என்பவற்றுடன் இணைந்து இந்த தீர்மானத்தை தோல்வியடைச் செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையிலுள்ள முற்போக்கு சோசலிசக்கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெசாக் வாரத்தில் மே தினம் நடைபெறுவதனால் நான்கு மகாநாயக்கர்களும் சேர்ந்து எழுத்து மூலம் விடுத்த வேண்டுகோளின் பேரில் அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# திகன சம்பவம்; மகிந்த ஆதரவாளர் கைது

(கொழும்பு)

தெல்தெனிய மற்றும் திகன பகுதிகளில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இனங்களுக்கிடையில் வெறுப்பு மற்றும் வன்முறைகளை தோற்றுவிக்கும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பவர்கள் குறித்து தீவிரவாத விசாரணை பிரிவினர் முன்னெடுக்கும் விசாரணைகளுக்கு அமைய குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் குண்டசாலை பிரதேச சபைக்காக போட்டியிட்டு தெரிவான உறுப்பினரான சமந்த பெரேரா என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (7)

## இன்று ஒரு தகவல்

### கோபக் கணக்கு

முன் பின் தெரியாதவர்கள் கோபித்துக் கொண்டால் அந்தக் கோபத்தின் பின்னால் பழங்கணக்கு என்று எதுவும் இருக்க முடியாது.

நம்மோடு எப்போதும் அடிக்கடி பழகுகிறவர்கள் ஒரு விடயத்திற்காக நம்மைக் கோபித்துக் கொண்டார்கள் என்றால் அந்தக் கோபத்தின் பின்னே ஏதோ ஒரு கணக்கு இருக்கிறது என்று பொருள்.

ஒருவர் கோபப்பட நியாயமான காரணம் இருந்தும் அவர் ஒன்றும் சொல்லவில்லை என்றால், அதற்கு இரண்டு காரணங்கள் தாம் இருக்க முடியும். முதலாவது, அவர் சந்தோசமான மனநிலையுடன் இருக்கிறார் என்று பொருள். அல்லது நம்மிடம் அவருக்குப் பிரியம் அதிகம் என்று பொருள்.

ஒருவர் ஒரு அற்பக் காரணத்துக்காக ஏகமாகக் குதிக்கிறார் என்றால், இதன் பின்னணியிலம் இரண்டு காரணங்கள் உண்டு.

முதலாவது அவருக்கு அந்தநேரம் மனசு சரியில்லை என்று பொருள். இரண்டாவது நம்மீது அவருக்கு ஏதோ பழைய வருத்தங்கள் அல்லது கோபங்கள் சேர்ந்து போய் இருக்கின்றன என்று பொருள். அவையெல்லாம் ஒட்டுமொத்தமாகிவிட்டதால், இந்த அற்பக் காரணத்தைச் சாக்காகக் கொண்டு வெடித்திருக்கிறார் என்று பொருள்.

என்னுடைய குடும்ப நண்பர் ஒருவரின் மகளுக்குப் பாடசாலை இறுதித் தேர்வின் போது நல்ல காய்ச்சல், தேர்வு எழுத முடியவில்லை. நண்பர் கவலைப்பட்டுச் சொன்னார் இப்படி ஆகிவிட்டதே என்று. கவலைப்படாதீர்கள். சின்ன வகுப்புத் தான். பாடசாலையில் சித்தியடைய விடாமல் இருப்பதில் அவ்வளவு குறிப்பாக இருக்க மாட்டார்கள். உங்கள் மகள் கெட்டிக்காரப் பெண். முதலாம் தரப் பரீட்சையையும் தாண்டி இரண்டாம் தரப் பரீட்சை வரை நல்ல மார்க் எடுத்திருக்கின்றாள். எனவே பழைய மார்க்குகளைப் பார்த்துவிட்டு பாஸாக்கி விடுவார்கள். பாடசாலை அதிபரைப் பார்த்து நிலைமையை விளக்குங்கள் என்று சொன்னேன்.

அதுதான் நடந்தது. பெண் பாஸ். வாழ்க்கையிலும் இப்படித்தான். நாம் அன்புக்குரிய செயல்களைச் செய்து நிறைய மதிப்பெண்களை ஒருவர் மனத்தில் பெற்றுவிட்டால் ஒருசில தவறுகளைச் செய்தாலும் அவர்களுக்குக் கோபம் வராது. அத் தவறுகளைப் பெரிது படுத்திப் பார்க்கவும் மாட்டார்கள்.

இதை உணராமல் எதற்கெடுத்தாலும் இந்த மனிதர் கத்துகிறார் என்று புலம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை!

**லேனா தமிழ்வாணன்**

# பிரதமர் பதவியை ஏற்பதற்கு இன்னும் காலம் இருக்கிறது

## அமைச்சர் ராஜித கூறுகிறார்



(கொழும்பு)

பிரதமர் பதவியைத் தாம் பொறுப்பேற்க வேண்டும் என்றால், அதற்கு இன்னும் காலம் இருக்கிறது என, அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர், "பிரதமர் பதவியை உங்களுக்கு வழங்கப்போவதாக, அரசியல் தரப்பில் கூறப்படுகிறதே? பிரதமராகப் பதவி வகிக்க நீங்கள் விரும்புகிறீர்களா? அது தொடர்பான உங்களின் நிலைப்பாடு என்ன?" என வினவினார்.

இதற்குச் சிரித்துக் கொண்டே பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, "அதற்கு இன்னும் காலம் இருக்கிறது. தற்போது அவ்வாறான எந்த அபிப்பிராயமும் எனக்கு இல்லை" எனப் பதிலளித்தார். (இ-7)




# நீதிமன்ற வளாகத்திலிருந்து தப்பித்த கொலைக் குற்றவாளி

(கொழும்பு)

லக்கல - மாஓய பிரதேசத்தில் தனது சிறு பிள்ளையை கொலை செய்ததாகக் கூறப்படும் குற்றவாளியொருவர் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் நாவுல நீதிமன்ற வளாகத்திலிருந்து தப்பித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைக்காவலில் வைக்கப்பட்டிருந்த குறித்த கொலைக் குற்றவாளி நாவுல நீதவான் நீதிமன்ற வளாகத்திற்கு அழைக்கப்பட்டு, மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல சிறைச்சாலை அதிகாரிகளால் வண்டிக்குள் ஏற்றும் போது கைவிலங்கை கழற்றி விட்டு தப்பித்துச் சென்றுள்ளார்.

தப்பித்துச் சென்ற குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்காக விசேட பொலிஸ் சுற்றிவளைப்பொன்று ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ஆதரவாளர்களுக்கிடையில் மோதல் நால்வர் வைத்தியசாலையில் அனுமதி





(நோர்வூட்)

நோர்வூட் நகரப் பகுதிக்கு அருகாமையில் இருகட்சிகளின் ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் நான்கு பேர் காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவாளர்களுக்கும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஆதரவாளர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை இந்த மோதல் இடம்பெற்றது.

மஸ்கெலியா பிரதேசசபை தவிசாளர் தெரிவில் ஏற்பட்ட முறுகல் நிலையே மோதல் ஏற்படுவதற்கு காரணமென பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும், குறித்த மோதலில் இரு அணிகளைச் சேர்ந்தவர்களும் கல்வீச்சு தாக்குதலில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த கல்வீச்சினால் மத்திய மாகாண சபை உறுப்பினர் கணபதி கனகராஜின் வாகனமும், இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நோர்வூட் பிரதேச சபைக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தின் சார்பில் தெரிவான பா.சிவநேசனின் வாகனமும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையெனவும், குறித்த பகுதியில் பொலிஸ் மற்றும் அதிரடிப்படையினரின், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதெனவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் நோர்வூட் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-7)

# அரசாங்கத்தின் பெரும்பான்மை நீக்கப்பட வேண்டும் -வீரவன்ச



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு நாடாளுமன்றில் காணப்படும் பெரும்பான்மை பலத்தை நீக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கடுவலை நகர சபையின் பிதா தனது கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# பிரபாகரனுக்கு நெருக்கமான ஐவருக்கு சுவிஸில் புகலிடம்

## சிங்கள ஊடகம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் நெருங்கிய உறவினர்கள் ஐந்து பேருக்கு சுவிட்சர்லாந்தில் புகலிடம் வழங்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்களில் ரமணன் என்றழைக்கப்படும் புலிகளின் முக்கியஸ்தர் ஒருவரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரமணன் வன்னி இறுதிக் கட்டப் போரின் போது ஜெனிவாவிற்கு தப்பிச் சென்றுள்ளார்.

இவர் ஜெனிவாவில் நடமாடுவதனை காண முடிந்தது என சிங்கள பத்திரிகை தெரிவித்துள்ளது.

சுமார் 100இற்கும் மேற்பட்ட புலி உறுப்பினர்களுக்கு சுவிட்சர்லாந்து அரசாங்கம் புகலிடம் வழங்கியுள்ளது.

ரமணன் உள்ளிட்ட பலர் காணாமல் போனதாகவே கருதப்படுகின்றனர்.

எனினும், இவ்வாறு புகலிடம் வழங்கப்பட்டவர்களின் பெயர் விபரங்களை சுவிட்சர்லாந்து அரசாங்கம் வழங்க மறுத்து வருவதாக அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# ரஷ்யாவின் துயரத்தை பகிர்ந்த இலங்கை



(மொஸ்கோ)

இக்கட்டான சூழ்நிலைகளில் ரஷ்ய அரசாங்கத்துடனும், மக்களுடனும் அவர்களது துயரைப் பகிர்ந்துகொள்வதற்கு இலங்கை அரசாங்கமும் மக்களும் துணை நிற்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் கெமரோவா நகரிலுள்ள வர்த்தக வளாகத்தில் இடம்பெற்ற தீ விபத்து குறித்து ஜனாதிபதி வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ரஷ்ய தூதரகத்திற்கு நேற்று முன்தினம் புதன்கிழமை விஜயம் செய்த ஜனாதிபதி, அங்குள்ள நினைவுக் குறிப்பேட்டில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு விசேட குறிப்பொன்றின் ஊடாக அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

விசேட குறிப்பினூடாக தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களை வெளிப்படுத்திய ஜனாதிபதி, விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் இயல்புக்கு திரும்ப பிரார்த்திப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து ஜனாதிபதிக்கும், ரஷ்ய தூதுவர் யூரி மரேறிக்கும் இடையே சிநேகபூர்வமான கலந்துரையாடலொன்று இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெலிக்கடையில் கைதிகள் படுகொலை! சிறைச்சாலைகள் ஆணையாளர் கைது

(கொழும்பு)

2012 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலை கைதிகள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவா கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் எமில் ரஞ்சன் லமாஹேவாவை குற்றவியல் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளே கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இல. 142, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9 இல் அமைந்துள்ள சிறைச்சாலை ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்தே நேற்று முன்தினம் சிறைச்சாலைகள் ஆணையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (இ-7)

# பாதாள குழுவை ஒழிக்க சீட்டா குறூப் களத்தில்

## மாலை 6 மணிக்குப் பின்னர் அநாவசியமாக நடமாடுவோர் தொடர்பில் கூடிய அவதானம்

(கொழும்பு)

சுட்டுக் கொலை செய்தல், அச்சுறுத்தி கப்பம் பெறுதல், போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பாதாள உலகத்துடன் தொடர்புபட்ட அனைத்து திட்டமிட்ட குற்றச் செயல்களையும் ஒழிக்க விசேட செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில், பாதாள உலகக் குழுவினரைக் கைது செய்ய சீட்டா குறூப் களத்தில் இறக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் மோட்டார் சைக்கிள் சுற்றிவளைப்பு படையான சீட்டா குறூப் சிறுசிறு குழுக்களாக மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணத்தின் பல பகுதிகளிலும் பாதாள உலக கும்பல்களுடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்ய களத்தில் இறக்கப்பட்டுள்ளது.

சீருடையிலும்சிவில் உடையிலும் இந்தப் படையணியினர பாதாள உலகக் குழுவினர் மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களைத் தேடி விசேட சுற்றி வளைப்புக்களை முன்னெடுத்து வருகின்றனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதி சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம். ஆர். லதீபின் நேரடிக் கட்டுப்பாட்டில் திட்டமிட்ட குற்றங்களை ஒழிக்கும் விசேட அதிரடிப்படை பிரிவின் பிரதான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வருண ஜயசுந்தரவின் வழிநடத்தலில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



அதன்படி பொலிஸ் விசேட அதிரடிப் படையின் உளவுப் பிரிவுக்கு கிடைக்கப்பெறும் தகவல்களுக்கு அமைவாக கடந்த இரு நாட்களில் இந்த சீட்டா குறூப் ஏற்கனவே களுத்துறை சிறைச்சாலை பேருந்து மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட பாதாள உலகத் தலைவன் சமயனின் சகாக்களைத் தேடி தலங்கம, அத்துருகிரிய மற்றும் யக்கலை பகுதிகளில் சோதனைகளை முன்னெடுத்துள்ளனர்.

அத்துடன் தற்போது இலங்கையில் இருந்து இந்தியா ஊடாக தப்பிச் சென்று டுபாயில் இருப்பதாக நம்பப்படும் அங்கொட லொக்கா எனும் பாதாள உலக குழுவின் உறுப்பினர்களைத் தேடி வெயாங்கொடை, நிட்டம்புவ பகுதிகளிலும் தேடுதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் இதன் போது தேடப்பட்ட உறுப்பினர்கள் அப்பகுதிகளில் இருந்து தப்பிச் சென்றிருந்ததாக அறிய முடிகின்றது. இந்த சுற்றிவளைப்புக்களின் போது குறிப்பிட்ட பாதாள உலக உறுப்பினர்களின் உறவினர்களுக்கு பொலிஸார் அவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பது தொடர்பில் கடும் எச்சரிக்கை விடுத்ததாகவும் பாதாள உலக ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந் நிலையில் பாதாள உலக நடவடிக்கைகளைக் கட்டுக்குள் கொண்டுவர இவ்வாறான விசேட சுற்றிவளைப்புக்கள் உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடரும் எனவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டினார்.

இந்த வருடத்துக்குள் மட்டும் பாதாள உலக குழுவுடன் தொடர்புபட்ட 21 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில் அதில் 17 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். பிரதானமாக இதில் தற்போது இத்தாலியில் உள்ளதாக நம்பப்படும் மாகந்துரே மதூஷின் குழுவினருக்கும் சமயனின் குழுவினருக்கும் இடையிலான மோதல்கள் அவதானிப்புக்கு உள்ளாகியுள்ளன.

அதன்படி பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் போதைப் பொருள் தடுப்பு மற்றும் பாதாள உலக கட்டுப்பாடு தொடர்பில் முன்னெடுத்த நடவடிக்கைகளின் போது தடல்லகே மஞ்சு எனும் பாதாள உலக தலைவன் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில், மாகந்துரே மதூஷ், ஆமி சம்பத் அங்கொட லொக்கா, சமயன், தடல்லகே மஞ்சு, கெசல்வத்த தினுக ஆகிய பாதாள உலக தலைவர்களின் சகாக்கள் 20 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில் மாகந்துரே மதூஷின் சகாவான சிந்தக, பேலியகொட பெரல் சங்க, கட்டானே தினுக, கிராண்ட்பாஸின் பொடி உன, கௌனி ஹுனா, மோதர சாரங்க, குடு நுவன் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

இதனிடையே மாலை 6 மணிக்கு பிறகு கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகள் பலவற்றிலும் போதைப்பொருள் வர்த்தகம், விபச்சார நடவடிக்கைகள் பரவலாக இடம்பெறுவதாக அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

அவர் அவரது அதிகாரத்துக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுத்த விசேட ஆய்வின் ஊடாகவே இவை தெரிய வந்துள்ளதாகவும் அது தொடர்பில் அரசின் உயர் மட்டத்தை தெளிவுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

குறிப்பாக மாலை 6 மணியின் பின்னர் கொழும்பு மத்திய பேருந்து தரிப்பிடம், மருதானை புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதிகள், முகத்துவாரம், வாழைத்தோட்டம், வெல்லம்பிட்டி, பொறளை, கல்கிஸை மற்றும் பம்பலப்பிட்டி பகுதிகளில் இவ்வாறான போதைப்பொருள் வர்த்தகங்கள் மற்றும் விபச்சார நடவடிக்கைகள் பரவலாக இடம்பெறுவதும் இதனால் பல இளைஞர், யுவதிகள் பாதிக்கப்படுவதும் ஆய்வில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 33வருடங்களுக்கு முன் இடம்பெற்ற கொலை; இரு குற்றவாளிகளுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

வீதியில் செல்லும் போது உடலில் மோதியதற்காக வாசிகசாலையினுள் சென்று இளைஞர் ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்தமை தொடர்பில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் மரண தண்டனையளித்து தீர்ப்பளித்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி விக்கும் களு ஆரச்சி இந்தத் தீர்ப்பையளித்தார்.

இற்றைக்கு 33 வருடங்களுக்கு முன்னர் பாடசாலை செல்லும் இளைஞர் ஒருவரை கொலை செய்தமை தொடர்பிலும், அவரை காப்பாற்ற வந்த அவரது நண்பனைக் கொலை செய்ய முயன்றமை தொடர்பிலும் சட்டமா அதிபரால் தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் தீர்ப்பளித்தே நீதிபதி மரண தண்டனை விதித்தார்.

அங்குலான பகுதியைச் சேர்ந்த 51 வயதான சுதத் பெர்னாண்டோ, 55 வயதான காமினி பீரிஸ் ஆகிய உறவுக்காரர்கள் இருவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு டிசெம்பர் 6 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த தினமொன்றில் இளைஞர் ஒருவரை கத்தியால் குத்தி கொலை செய்தமை மற்றும் மற்றொருவரை கொலைசெய்ய முயற்சித்தமை தொடர்பில் சட்டமா அதிபரால் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டது.

இந் நிலையில் வழக்கு விசாரணைகளின் இடை நடுவே மூன்று பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையில், எஞ்சிய இரு பிரதிவாதிகளுக்கும் மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர் சட்டமா அதிபர் சார்பில் குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகக் கூறி நீதிபதி இந்தத் தீர்ப்பை அளித்தார்.

கல்கிஸை பொலிஸ்நிலைய பொலிஸ் கான்ஸ்டபிள் பண்டார (50724) பொலிஸார் சார்பில் மன்றில் ஆஜரானதுடன் வழக்கை சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி இஷாரா ஜயரத்ன நெறிப்படுத்தினார். (இ-7)

## அமித் ஜீவன் வீரசிங்க உட்பட 9பேருக்கு தொடர்ந்தும் மறியல்



(கொழும்பு)

கண்டியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட பிரதான சந்தேக நபரான அமித் ஜீவன் வீரசிங்க மற்றும் 9 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை ஏப்ரல் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு தெல்தெனிய நீதவான் நேற்றுக் காலை உத்தரவிட்டுள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுடன் தொடர்புபட்ட பிரதான சந்தேக நபரான அமித் வீரசிங்க உட்பட 10 பேர் மார்ச் 8 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கடந்தகாலத் தவறுகளை உன்னிப்பாக அவதானிக்கிறது அரசு

### அமைச்சர் சாகல சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசாங்கம் கடந்த காலத் தவறுகளை உன்னிப்பாக அவதானித்து வருகிறது. அதனடிப்படையில் அரசியல் பேதமின்றி இளைஞர் சமூகத்திற்கு நன்மைகளைப் புரியுமெனா அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நிக்கவரட்டியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற யொவுன்புர இளைஞர் முகாமின் அங்குரார்ப்பண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அமைச்சர் உரையாற்றிய போது மேலும் தெரிவிக்கையில்,



அரசாங்கம் எதுவித பேதமும் இன்றி இளைஞர் சமூகத்தின் அபிவிருத்திக்காக பாடுபடுகிறது எனவும் நாட்டின் எந்தவொரு அரசியல் நிலைமாற்றத்திலும் இளைஞர் சமுதாயத்தின் தாக்கம் வலுவானது எனவும் அமைச்சர் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## கற்றல் வள நிலைய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

புலோலி புற்றளை மகா வித்தியாலய ஆரம்பக் கல்விக்கான கற்றல் வள நிலையத்திறப்பு விழாவும் சரஸ்வதி சிலை திரை நீக்கமும் பாடசாலை உள்ளக தொடர்பாடல் சாதன அங்குரார்ப்பணமும் நாளை சனிக்கிழமை காலை 8 மணியளவில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், த.குருகுலராசா, க.தர்மலிங்கம், எம்.கே.சிவாஜிலிங்கம், வெஜ்லான்ட் எக்ஸ்பிரஸ் மனேஜர் த. ஐங்கரன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், கௌரவ விருந்தினராக கனடா பழைய மாணவர் சங்க உப தலைவர் சட்டத்தரணி திருமதி பாக்கியலட்சுமி வாசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு சாமுண்டீஸ்வரி சமேத வைரவப் பெருமாள் கோயில் மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும். இதனைத் தொடர்ந்து மாலை சுவாமி பூத்தண்டிகையில் வீதி உலா வரும் காட்சியும் இடம்பெறும். (இ

## சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தின நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் புங்குடுதீவு பற்றிக் பயிற்சி நிலையத்தில் மகளிர் அபிவிருத்தி நிலைய நிர்வாகப் பணிப்பாளர் சரோஜா சிவசந்திரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக புங்குடுதீவு வட இலங்கை சர்வோதய அறங்காவலர் யமுனாதேவி பொன்னம்பலம், கௌரவ விருந்தினராக டான் தொலைக்காட்சி அறிவிப்பாளர் மாலினி அஜந்தன், யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட சட்ட விரிவுரையாளர் கோசலை மதன், பருத்தித்துறை நகரசபை உறுப்பினர் மதினி நெல் சன், புங்கு டுதீவு மகாவித்தியாலய அதிபர் எஸ். கனகரட்ணம், கைத் தொழில் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் க.தபேஷன் ஆகியோர் கலந்துகொள்வர். இ

## அலங்கார உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணட்டாய் கண்ணகி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகிறது. தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் இடம்பெறும். (இ

# அம்பகமுவ பிரதேச சபை பொதுஜன பெரமுன வசம்

## தலைவராக ஜயசங்க பெரேரா

அம்பகமுவ பிரதேச சபைக்கான தவிசாளர், உபதவிசாளர் தெரிவு அம்பகமுவ பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

பிரதேச சபையின் தவிசாளராக, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டுத் தெரிவான ஜயசங்க பெரேராவும், உப தவிசாளராக ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டி யிட்டுத் தெரிவான அஜந்த நெலும் குமாரவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தவிசாளர், உப தவிசாளர் தெரிவுக்கான வாக்களிப்பு இரகசிய வாக்கெடுப்பாகவே நடைபெற்றது. இச்சபைக்குத் தவிசாளராக தெரிவு செய்வதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டி யிட்டு தெரிவான ஜயசங்க பெரேரா மற்றும் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற அஜந்த நெலும் குமாரவும் போட்டியிட்டனர்.

இதில் 11 வாக்குகளைப் பெற்று ஜயசங்க பெரேரா தவிசாளர் பதவிக்குத் தெரிவானார். இதற்கு எதிராகப் போட்டியிட்ட அஜந்த நெலும் குமாரவுக்கு 9 வாக்குகளே பெறமுடிந்தது.

இதேவேளை உபதவிசாளர் பதவிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ருக்ஷான் ரணசிங்கவும், ஐக்கிய தேசிய கட்சி சார்பாக அஜந்த நெலும் குமாரவும் போட்டியிட்டனர். இதில் அஜந்த நெலும் குமார 12 வாக்குகளைப் பெற்று உபதவிசாளர் பதவியை தனதாக்கிக் கொண்டார். இதற்கு எதிராகப் போட்டியிட்ட ருக்ஷான் ரணசிங்கவுக்கு 8 வாக்குகளே பெறமுடிந்தது.

இந்தத் தெரிவின் போது, மக்கள் விடுதலை முன்னணியில் போட்டியிட்டு போனஸ் ஆசனத்தில் தெரிவான மஞ்சுள சூரவீர எவருக்கும் வாக்களிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரணிலின் எதிர்காலம் மைத்திரியின் கையில்

## மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கரிசனைக்கு அமையவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் வெற்றி, தோல்வி நிர்ணயமாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ரணில் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறி த்து கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் காண்பிக்கும் முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே அதன் வெற்றி தீர்மானிக்கப்படும்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியை முன்னோக்கி நகர்த்துவது தொடர்பிலும் சர்ச்சை நிலைமைகள் நிலவி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1371

Search for people, places and things | Nagendram Home

### கமலி

தகுதி பார்த்து யாரிடமும் பழகாதே... நீ இறந்த பிறகு உன் இறுதிச் சடங்கில்



தகுதியுள்ளவன் கைகட்டி நிற்பான், தகுதியற்றவன் உன்னைச் சுமந்து செல்வான்...!

### அமுதா


அழும்போது அம்மா என்கின்றோம்... அசதியின்போது அப்பா என்கின்றோம்....



கஷ்டத்தில் கடவுளே என்கின்றோம் வென்றால் மட்டும் நான் என்கின்றோம்

### ஐங்கரன்

தன்மீது விழும் ஒவ்வொரு அடியும் தன்னைச் சிற்பம் ஆக்குகின்றதென்பது கல்லுக்கு தெரிவதில்லை



### குகன்

என்னவெல்லாம் ஆக வேண்டும் என்று ஆசைப்பட்டு கடைசியில்....



குழந்தையாகவே இருந்திருக்கலாம் என்ற ஏக்கத்தில் முடிகிறது வாழ்க்கை...!

### கிஷோர்

எமக்கு வாழ்நாட்கள் அதிகம் தேவையில்லை



நாம் சந்தோஷமாக வாழ்ந்த நாட்கள் அதிகம் இருந்தால் போதும்!

### லீசா

தாயாய்... சகோதரியாய்... தோழியாய்... மனைவியாய்... மகளாய்...



யாரோ ஒரு பெண்ணின் அன்பில்லாமல் ஆணால் மகிழ்ச்சியாக வாழ முடியாது...!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம்- நந்தி



பேராசிரியர் நந்தி இன்று எங்களுடன் இல்லை. இன்று (மார்ச் 30) அவர் உயிருடன் இருந்தால் அவரின் தொன்னூறாவது அகவையை கொண்டாடி இருப்போம்.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் என்ற பெயரை விட "நந்தி" என்ற பெயராலேயே மக்களால் அறியப்பட்டவர்.

பல வருடங்களுக்கு முன் முதல் முறையாக அவர் வீட்டிற்கு சென்றேன். அவர் கொடுத்த குறிப்பின் படி அச்சுவேலியில் அவர் குறிப்பிட்ட ஒரு வீதியில் நின்று பேராசிரியர் சிவஞானசுந்தரத்தின் வீட்டைப் பற்றி விசாரித்தேன். அப்படி ஒருவரை தெரியாது என்றார்கள். வழியில் வந்த ஒருவர் நந்தி ஐயவையா தேடுகிறீர்கள் என வினவினார். வீட்டையும் காட்டினார். அவர் சொன்ன பின் தான் தெரிந்தது பேராசிரியர் வீட்டிற்கு முன்னால் தான் நிற்கிறேன் என்று .

நந்தி என்ற புனைபெயர் இந்திய ஜனாதிபதியாக இருந்த ராஜாஜியினால் அவருக்கு வழங்கப்பட்டது.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் சமுதாய மருத்துவத்தில் தன்தடங்களை பதித்தவர். யாழ்ப்பாண மாநகர சபையில் சுகாதார வைத்திய அதிகாரியாக பல காலம் கடமையாற்றியவர்.

பேராதனை மருத்துவ பீடத்தில் விரிவுரையாளராக இருக்கும் பொழுது 1972 இல் இலங்கையில் முதல் முறையாக சமுதாய மருத்துவத்துறையில் MSc பட்டப் படிப்பை நடத்தியவர்.

யாழ்ப்பாண மருத்துவ பீடம் 1978இல்ஆரம்பிக்கும் போது சமுதாய மருத்துவத் துறையை ஆரம்பித்து பின்னர் மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாகவும், பதில் துணைவேந்தராகவும் கடமையாற்றியவர். மருத்துவ பீட கட்டடத்திற்கு அத்திபாரமிட்டவர்களில் அவரும் ஒருவர். சமுதாய மருத்துவத் துறையை தன்னில் ஒரு அங்கமாக கருதி வாழ்ந்தவர் பேராசிரியர் சிவஞானசுந்தரம். தனது கற்பித்தலை. மருத்துவ பீட மாணவர்களுடன் மாத்திரம் பகிர்ந்து கொள்ளாமல் உதவி வைத்தியர்கள், தாதியர், மருத்துவ மாதர்கள், சுகாதார பரிசோதகர்கள் , சுகாதார தொண்டர்கள், பாடசாலை ஆசிரியர்கள், போன்றோருடன் பகிர்ந்து கொண்டார்.

ஓய்வு பெற்ற பின்பும் இறக்கும் வரை 12 வருடங்கள் மருத்துவ பீடத்தின் மாணவர்களின் பயிற்சியில் ஈடுபட்டு வந்தார்.

தமிழ் மக்கள் கடந்து வந்த கஷ்டமான, துயர்நிறைந்த காலத்திலும் நாட்டை விட்டு வெளியில் செல்லாது இங்கேயே இருந்து சேவையாற்றியவர். அவர் 45 இற்கும் மேற் பட்ட சிறு கதைகள் எழுதியுள்ளார். மேலும், சுகாதார சம்பந்தமான அறிவுறுத்தல்கள் அடங்கிய நான்கு புத்தகங்கள், குழந்தைகளுக்காக இரண்டு புத்தகங்கள், ஆன்மீகம் சம்பந்தமான இரண்டு புத்தகங்கள் என்பன அவற்றுள் அடங்கும். அவரது "ஆய்வு கற்றுக் கொள்ளல்" (Learning Research) எனும் ஆங்கில நூல் இலங்கையில் உள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் பயன்படுத்தப்படுகிறது.

"சாய் மார்க்கம்" எனும் சஞ்சிகையின் ஆசிரியராக 1998இலிருந்து பல வருடங்களாக பணியாற்றியுள்ளார்.

அவருடைய நாவல்களில் மூன்று நாவல்கள் சாஹித்திய விருது பெற்றவை.

சமகால தமிழ் இலக்கியத்திற்காக அவர் ஆற்றிய பங்கிற்காக யாழ்ப்பாண மாவட்ட ஆளுநரின் சான்றிதழை 2002 இல் பெற்றவர்.

நந்தியின் முதலாவது சிறுகதை அவரது பத்தொன்பதாம் வயதில் "வீரகேசரியில்" வெளியானது.

பல வருடங்களாக உலக சுகாதார நிறுவனத்தில் ஆலோசகராக பல நாடுகளில் (ஜோர்தான், கம்போடியா, சிங்கப்பூர், வங்கதேசம், தாய்லாந்து, இங்கிலாந்து உட்பட) கடமையாற்றியவர். அந்த சந்தர்ப்பத்தில் ஜோர்தானில் ஆரம்ப சுகாதார சேவையாளருக்கு ஒரு கையேடு எழுதி ஜோர்தான் அரசினால் அந்நாட்டு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டு இன்றும் அது பாவனையில் உள்ளது. உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகராக இருந்த காலத்தில் பல பயற்சிப்பட்டறைகளை உலகெங்கும் நடத்தியுள்ளார்.

பேராசிரியர் நந்தி ஒரு வைத்தியராகவும் சமுதாய மருத்துவ பேராசிரியராகவும் மட்டும் இருக்கவில்லை. சமூகத்தில் அக்கறை கொண்ட ஒரு இலக்கியவாதியாகவும் எழுத்தாளராகவும் கலைஞராகவும் இருந்துள்ளார்.

வைத்திய தொழில் புரியும் போது சமூக உணர்வோடு சமூக ஆய்வாளராக செயற்பட்டார். நாவலப்பிடியவில் சுகாதார வைத்திய அதிகாரியாக இருக்கும்போது "மலைக்கொழுந்து" என்ற நாவலை எழுதினார்.

மலை நாட்டில் வாழும் மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளை மையமாக கொண்டது இந்த நாவல். ஹிரிபிட்டியவில் கடமை யாற்றும் பொழுது மருத்துவ மாதரை மையமாக வைத்து "சிங்களத்து மருத்துவிச்சி" என்ற நாவலை எழுதினார். கொலரா நோய் தடுப்பு வேலை களில் ஈடுபடுவதால் கிடைத்த அனுபவத்தை மையமாக வைத்து, "தங்கச்சி அம்மா" என்ற நாவலை எழுதினார்.

பேராசிரியர் நந்தி நடிப்புக் கலையிலும் கைதேர்ந்தவர். இலங்கையில் சினிமா ஆரம்பித்த காலத்தில் பொன்மணி என்ற படத்தில் நடித்து புகழ் பெற்றவர். பூதத்தம்பி என்ற நாடகத்திலும் நடித்தவர்.

பேராசிரியராக வேலை செய்யும் பொழுதும் மருத்துவ பீடத்தில் நாடகங்களில் நடித்துள்ளார்.

அவர் பார்வைக்கு கண்டிப்பாக இருப்பினும் உள்ளே இளகிய மனம் கொண்டவர். அவரது மாணவனாக, சகோதரனாக,, நண்பனாக, எனது வழிகாட்டியாக பல வருடங்கள் இணைந்திருக்க வைத்த இறைவனுக்கு நன்றி தெரிவிக் கின்றேன். பன்னிரெண்டு வருடங்களுக்கு முன் பெருமை வாய்ந்த ஒரு மனிதரை இழந்து விட்டோம். அவரின் தன்னலமற்ற சேவையை தொடர்ந்தும் நாம் பின்பற்ற வேண்டிய அவசியம் இன்னும் இருககிறது.

**ந.சிவராஜா**

## பரீட்சைக்கு தோற்றுவோருக்கு இலவச பயிற்சிக் கருத்தரங்கு

(கரணவாய்)

எதிர்வரும் மேமாதம் முற்பகுதியில் நடைபெறவிருக்கும் முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்குத் தோற்றும் வடமராட்சிப்பகுதி பரீட்சார்த்திகளின் நலன்கருதி யா/ புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பிப 2 மணிமுதல்4 மணி வரை இலவச பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறும். இக்கருத்தரங்கில் நுண்ணறிவு பாடத்திற்கான கருத்தரங்கை ஓய்வுநிலை பிரதேச செயலரான கந்தையா கனகரத்தினம் நிகழ்த்துவார். (இ-60)

## அரச புகைப்பட விழாவுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களம் புகைப்படக் கலையைஊக்குவிக்கும்நோக்குடன் மூன்றாவது முறையாக அரச புகைப்பட விழாவை ஏற்பாடு செய்துள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட புகைப்படக்கலைஞர்கள் அரச புகைப்பட விருது விழாவிற்கான சுற்றுநிருபத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்றுக்கொள்ள முடியும்.

போட்டிக்குபங்குபற்றுவோர் புகைப்படத்தினையும் விண்ணப்பப்படிவத்தையும் பூர்த்தியாக்கி 2018.05.25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக கலாசார பிரிவில் ஒப்படைக்க முடியும் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

## அஞ்சலி பிரார்த்தனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் அமரர் கந்தையா நீல கண்டனின் அஞ்சலி பிரார்த்தனை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் துர்க்காதேவி மணி மண்டபத்தில் அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறும். (இ)

## பங்குனி உத்தர விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் திருமூலர் யோகா அறச்சாலை நடத்தும் பங்குனி உத்தரவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் உரும்பிராய் திருமூலர் யோகா அறச்சாலை மண்டபத்தில் சமய ஜோதி க.நிஜலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் சிறப்புச் சொற் பொழி விளை இறைபணிச் செல்வி சைவ சின்மயா திருமதி மா.அனந்த லட்சுமி நிகழ்த்துவார். (இ)

## க.பொ.த.சாதாரணதர பரீட்சைப் பெறுபேறு-2017

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

ஏ.ஜஸ்வினா -9ஏ, எம். கௌசிகா-9ஏ, எஸ். கீர்த்தனா-9ஏ, பி.பிரியங்கா-9ஏ, எஸ் சண்சிகா-9ஏ, ஏ.ஏஞ்ஜலின் அலிஸ்ரா-9ஏ, ரி.நிரோசி-9ஏ,கே. சங்கவிக்கா-9ஏ,வி. பஸ்னா-9ஏ, பி.அபிநயா-8ஏபி, ரி.சுவேதிகா-8ஏபி, பி.தக்ஷா-8ஏபி, ஆர். தர்மினி -8ஏபி, ஏ.சுயானி-8ஏபி, எம். சுசந்திகா- 8ஏபி, என்.தனுசா -8ஏபி, எஸ்.மிரோஜிகா-8ஏபி, எஸ்.தாரபி-8ஏபி, கே. சிவஉமா-8ஏசி, கே. தரணிகா -8ஏசி, கே.நேசல்யா-8ஏசி, எஸ்.நிவேதிகா-7ஏ2பி, எஸ். ரஜிதா-7ஏ2பி, எஸ்.சுரபா-7ஏ2பி, ரி.சுதனிகா-7ஏ2பி, எஸ். வானதி-7ஏ2பி, எஸ். வைஸ்ணவி-7ஏபிசி, ஜே. கயல்விழி- 7ஏபிசி, எம்.தமிழினி-7ஏபிசி, எஸ்.கிருபாலினி- 7ஏபிஎஸ், கே.கஸ்தூரி- 7ஏ2சி, எஸ்.நிரோசனா-7ஏபிஎஸ்.கே. பிரணவி -7ஏபி, ரி.நிலானி- 6ஏ3பி, எஸ்.தீபிகா-6ஏ3பி கே.தேனுகா-6ஏ3பி, ஆர். ஐஸ்வர்யா-6ஏ 3பி, எஸ்.ஹரிஸயந்தி- 6ஏ3பி, எஸ். அபிநயா-6ஏ2பிசி, கே.அம்சனா-6ஏ2பிசி, கே.சித்தாரா-6ஏ2பிசி, எஸ். சங்கவி-6ஏ2பிசி, ஜே.காயத்திரி-6ஏ2பிசி, எஸ்.சங்கவி-6ஏ2பிசி,ரி.சாருகா-6ஏ2பிசி, எம்.பிந்துஜா-6ஏபி2சி, கே. ரேணுகா-6ஏபி2சி, கே. அபிநயா-6ஏபி2சி, ஜே. மனோசா-6ஏபி2சி, எஸ்.வபிதா-6ஏபி2சி, எம்.சரண்யா-6ஏபி2சி கே.அனிஸ்ரா-6ஏபி2சி, ஆர். அஸ்வினியா-6ஏபிசிஎஸ், ரி.தர்சிகா-6ஏபிசிஎஸ், ஜே. பவித்திரா-6ஏ3சி, கே. தேனுகா -6ஏ3சி, ஐ.வைஸ்ணவி-6ஏ2பி.

**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

தமிழ்மொழிமூலம்

பி.அபிஷேக்-9ஏ, எல்.யு. அன்ரன்ராஜ்குமார்-9ஏ, ஆர். ஆரோன்-7ஏ2பி,ஜே.ஜெக்சன் -7ஏ2பி, ஆர்.இன்வெஸ்டன் -7ஏ2பி, எம்.அன்ரன் யூட்-7ஏபிசி, ஜே.ஏ.சஜீனன்-7ஏபிசி, எஸ்.துலக்சன்-6ஏ3பி, யு.ஆரணன்-6ஏ2பிசி, பி.சாருசன்-5ஏ4பி, எஸ்.கி அபிசான்- 5ஏ4பி, ஆர்.கே. ஆர். டனோசிகன்- 5ஏ2பி2சி,ஜே.ஈ.கே. கிஷான்-5ஏ2பி2சி, ஆர். சதுயன்-5ஏ2பிசிஎஸ், சி.குகேந்திரன்- 5ஏபி2சிஎஸ், வி. திசாகன்- 5ஏ2சிஎஸ்.

ஆங்கிலமொழிமூலம்

ஈ.ஜே.திலேஷ்காந்- 9ஏ, ரி. சஜீவன்- 9ஏ, ஏ.ருக்சன்-9ஏ, ஜே.றொபின்சன் கியூபேட்-8ஏபி, ஏ.எல்.பற்றிக்ஸ் நிலக்சன்- 8ஏபி, ஜே.ஜோய் மிதுனன்- 6ஏ3பி, ஏ.எப். அன்ரன் அஜித்குமார்-6ஏ2பிசி, வி.எஸ். விவியன்-6ஏ2பிசி.

**யா/விக்றோரியாக் கல்லூரி**

க.சியாமளன்-9ஏ, ஞா. கௌசல்யா-8ஏபி, வி. மதுசாளினி-8ஏபி,கி.அபர்ணா-8ஏபி, இ.கிருத்திகாயினி-8ஏபி, அ.ராதாகிருஸ்ணன்-8ஏபி, ஆ.திவ்ஜா-7ஏபி, பா. அம்சா-7ஏ2சி, ப.தர்மிகா-6ஏ2பி, சௌ.திவாகர்-6ஏ2பி, சு.யசோதினி-6ஏபி2சி, வி. வைஷ்ணவன்-6ஏபிசி எஸ்,ம.யதுஷன்-6ஏபிசி எஸ், இ. வேணுகா-5ஏ3பிஎஸ், நீ.கஜன்-5ஏ3பி,எ.சாருஜா-4ஏ4பிசி,ச.நிருஷா-4ஏ3பிசி எஸ், வி.முரளிதரன்-4ஏ2பி2சிஎஸ்,கோ.சிவலக்ஸி-4ஏ2பி2சி,ஞா.கிரிஜா-4ஏ2 பி2சி, பா.கேதுஷா-4ஏபி4சி, கு. சுவர்ணா-4ஏபி3சி, கி.சுவேனியா-4ஏபி3சிஎஸ், க.தமிழ்வாணி-4ஏ3சிஎஸ்.

**யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை**

தமிழ்மொழிமூலம்

ரீ.சுஜியேந்திரன்-9ஏ, எஸ். தாமிரவரன்-9ஏ, எஸ். கார்த்திகா-9ஏ, ரீ.கஜன்-8ஏபி, எம். கிருஸன்-8ஏபி, ஏ. நிரோசன்-8ஏபி, எஸ்.பிரியங்கா-8ஏபி, ரீ.சோவெஸ்யா-8ஏபி, யு. சருஜுகா-8ஏபி, என். தனிசிகா-8ஏசி,ஆர்.தீபிகா-8ஏசி, பி. சாருஜன்-8ஏசி, ஆர்.ரிசாந்-7ஏ2பி, வை. ஜசித் -7ஏபிசி,எஸ்.மகிஸினி-7ஏபிசி, எஸ். சுபாங்கி-7ஏபிசி, ஜே.டினுசாந்-7ஏபிசி, பி. திசானா-6ஏ3பி, ஜே.பிரியங்கா-6ஏ2பிசி, வை.ஐங்கரன்-6ஏ2பிசி, எஸ். நிதுசா-6ஏபிசிஎஸ், என். துரன்யன்-6ஏ2சிஎஸ், என். மதுசங்கா-5ஏ3பிசி, எஸ். கோசிகா -5ஏ3 பிசி, ஆர்.பிரியங்கா-5ஏ2பி 2சி, வி.விந்துசா-5ஏ2பி2சி, எஸ்.சயனி-5ஏ2பிசிஎஸ், எஸ்.நிதுலன்-5ஏ2பிசி, வை. யோஜீவன்-5ஏ2பிசி, எஸ்.டிலக்சனா-5ஏபி3சி, என். பிரவீனா-4ஏ 4பிசி, வை. லாவண்யா-4ஏ 4பிசி, கே. அர்ச்சிகா-4ஏ3பி2சி, ரி.சிந்துசன்-4ஏ3பி2சி, என்.விதுர்சிகா-4ஏ3பிசிஎஸ், கே.தீபிகன்-4ஏ2பி3சி,பி.கம்சத்வனி-4ஏ2பி2சிஎஸ், பி. துவாரகன் -4ஏ2பி2சிஎஸ், பி.ரதீநிரா-4ஏ2பிசி 2எஸ், வி.லேகா-4ஏ2பிசி2எஸ், ரி.இசையரசி-4ஏ2பிசி2எஸ், எம்.ஞானவரன்-4ஏபி3சி எஸ்.கேலக்சிதா-4ஏபி3சிஎஸ், பி.பரிபாலினி-4ஏபி3சிஎஸ்.

ஆங்கிலமொழிமூலம்

எஸ்.கபிலா-9ஏ, எஸ். குயின்சிகா-9ஏ, எஸ். லக் ஸன் -8ஏபி,எஸ். ஹரிகரன்-8ஏசி

# தமிழ் மக்கள் மீது பகைமை கொண்டு யுத்தத்தை இராணுவம் முன்னெடுக்கவில்லை

## யாழ்.கட்டளைத்தளபதி தர்ஷன தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தமிழ் உறவுகளுக்கு எதிரான செயற்பாட்டாளர்களாக இராணுவத்தை பார்க்க வேண்டாம் என்று யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

மனிதநேய செயற்பாட்டாளர்களான மோகனசங்கர் - வதனி ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் வறிய, போரால் பாதிக்கப்பட்ட, பெண் தலைமைத்துவ குடும்பங்களை சேர்ந்தவர்களின் சுய தொழில் மேம்பாட்டுக்காக தையல் இயந்திரங்களை கடந்த புதன் கிழமை கையளித்து வைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கலந்து கொண்டு வரவேற்புரை ஆற்றியபோது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஆயுத மோதலை முடிவுக்கு கொண்டு வரவும், அதன் மூலமாக அமைதியை நிலைநாட்டவுமே இராணுவம் யுத்தத்தில் ஈடுபட்டது.

மாறாக தமிழ் மக்கள் மீது கோபம், பகைமை, போட்டி கொண்டு இந்த யுத்தத்தை இராணுவம் முன்னெடுத்து இருக்கவில்லை. நாட்டில் இடம்பெற்ற 30 வருட கால யுத்தத்தின்போது அமைதி, இழந்து, ஒற்றுமை இன்றி நாம் அனைவரும் அல்லற்பட்டு இருந்தோம். யுத்தம் அற்ற இன்றைய அமைதி சூழலில் நல்லிணக்கம், ஐக்கியம், சமாதானம் ஆகியவற்றை யாழ்ப்பாணத்தில் கட்டி எழுப்புகின்ற வேலைத்திட்டங்களை இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகம் மிகுந்த அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருகின்றது.

தமிழ் மக்களுக்கு மாத்திரம் அன்றி முன்னாள் போராளிகளுக்கும் அவர்களுடைய வாழ்வாதாரம், வாழ்க்கைத் தரம், பொருளாதாரம், தொழில் வாய்ப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துகின்ற வேலைத் திட்டங்கள் பலவற்றையும் முன்னெடுத்து வருகின்றோம்.

இத்திட்டங்கள் மூலமாக பயனாளிகள் உச்ச பலனை பெற்று அவர்களின் வாழ்க்கையை சகல விதங்களிலும் உயர்த்த வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்க பிரதிநிதிகளும் விசேட அழைப்பின் பேரில் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

## பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படும் பேருந்துச் சேவை சீராக இடம்பெறுவதில்லை

(வரணி)

கொடிகாமத்திலிருந்து - பருத்தித்துறைக்கு பாடசாலை மாணவர்களுக்காகவும் அரச உத்தியோகத்தருக்காகவும் நடத்தப்படுகின்ற 759 இலக்க இ.போ.ச. பேருந்துச் சேவையானது சீராகவும் உரிய நேரத்திற்கும் இடம்பெறுவதில்லை என மாணவர்கள் மற்றும் பெற்றோர் விசனம் வெளியிட்டுள்ளனர். தினமும் காலை 6.30 மணியளவில் கொடிகாமத்திலிருந்து புறப்பட்டு வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களையும், அரச ஊழியர்களையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டுச் செல்கின்றது. சிலவேளைகளில் பேருந்து சேவை இடம்பெறுவதில்லையெனவும் இதனால் பருவகாலச் சீட்டினைப் பெற்றுக் கொண்டுள்ள மாணவர்கள் பெரிதும் பாதிப்படைவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாடசாலைக்குச் செல்லாது வீடு திரும்ப வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இவ்வாறான நிகழ்வு கடந்த புதன்கிழமையன்று இடம் பெற்றுள்ளது.

பேருந்துச் சேவை இடம்பெறாமையால் முதலாம் தவணைப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்கள் பரீட்சைக்குச் செல்லாது காத்திருந்து வீடு திரும்பியுள்ளனர்.

சில பேர் தாமதமாக பாடசாலை சென்றுள்ளனர். எனவே பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படுகின்ற இந்தப் பேருந்துச் சேவையை சீரான முறையில் நடத்தி பாடசாலை மாணவர்களின் போக்குவரத்திற்கு உதவுமாறு பெற்றோர் மற்றும் மாணவர்கள் போக்குவரத்துச் சேவையுடன் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-103)

## பொருளாதார விளைவுகளும் பங்குச்சந்தையின் போக்கும் யாழில் நாளை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பங்குச் சந்தை முதலீடுகளின் பொருளாதார விளைவுகள் தொடர்பான விளக்கக் கருத்தரங்கு நாளை 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பங்குப்பரிவர்த்தனை யாழ்.கிளையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கூட்டு முதலீட்டுத் திட்டத்தின் ஆலோசகரான பி.அசோகன் கருத்துரை வழங்குவார்.

துறைரீதியான பொருளாதார வளர்ச்சி, நாணய மற்றும் இறைக்கொள்கைகளின் மீளாய்வு, சென்மதி நிலுவை, நாணயமாற்றுவீதம் மற்றும் வட்டி வீதம், வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல், பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளின் துறை ரீதியான பங்களிப்புக்களை உள்ளடக்கிய ஆய்வுச் சுருக்கங்கள் மற்றும் நிதி நிறுவனங்களும் தொகுதிக்கடன் வழங்கல்களும் பங்குகளின் மீள்கொள்வனவு, பங்குப் பகிர்வு மற்றும் கம்பனிகளின் இணைவு தொடர்பான நிகழ்கால விடயங்கள் இக் கருத்தரங்கில் கலந்துரையாடப்படும். முன் பதிவுகளுக்கு 077 782 2014 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (இ)

## மாணவர்களுக்கு டக்ளஸ் எம்.பி. வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்த அனைத்து மாணவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



வெளியாகியுள்ள சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்தி சாதனை படைத்த மாணவர்களுக்கான வாழ்த்துச் செய்தியிலேயே டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இம்முறை நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் தமிழ் மொழி மூலம் தோற்றிய பரீட்சார்த்திகளுள் அகில இலங்கை ரீதியில் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி மிருனி சுரேஷ் குமார் முதலிடம் பெற்றுள்ளார் என்பது அந்த மாணவியின் முயற்சிக்கும் அவரை கற்பித்த ஆசிரியர்கள், அவரது பெற்றோர் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள் என்பதுடன் நடந்து முடிந்த சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த அடைவு மட்டத்தை எட்டி வடக்கு- கிழக்கு மாகாணங்களில் நல்லபெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட அனைத்து மாணவச் செல்வங்களும் பாராட்டுக்குரியவர்களே.

அத்துடன் பரீட்சைக்கு தோற்றி சிறந்த பெறு பேறுகளை அடையாது இருக்கும் மாணவர்களையும் அவர்களது முயற்சிகளையும் நிச்சயம் நாம் பாராட்டியே ஆக வேண்டும் என்பதுடன் அவர்களது எதிர்காலமும் சிறப்பாக கல்வித்துறையில் அமைய அனைத்துத் தரப்பினரும் முன்னின்று உழைக்க வேண்டும்.

எமது மாணவர்கள் கிடைத்த பெறுபேறுகளை ஆதாரமாகக் கொண்டு உயர்தரக் கல்வியை தொடர்ந்து முன்னெடுப்பதுடன் எதிர்காலத்தில் கல்வி உள்ளிட்ட சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்து அந்தந்தத் துறைகளில் மிளிரவேண்டும் என்பதே எனது பெருவிருப்பாகும் என்றும் டக்ளஸ் தேவானந்தா தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பேருந்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

பயணிகளின் வேண்டுகோளுக்கிணங்க நாளை மறுதினம் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7 மணிக்கும் 8 மணிக்கும் புறப்படும். 750 பாதை பேருந்துகள் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் வல்லிபுரக்கோவில் ஊடாக பருத்தித்துறை வந்தடையும்.

அதேபோல் பருத்தித்துறையிலிருந்து பிற்பகல் 1.30 மணி, 2 மணிக்கு 750 பாதையால் புறப்படும் பேருந்துகள் வல்லிபுரக்கோவில் ஊடாக யாழ்ப்பாணம் சென்றடையும்.

மேலும் முதலாம் திகதி முதல் 751,752 பாதையால் செயலாற்றும் பேருந்துகள் பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும்போதும் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வரும் போதும் தினசரி சகல சேவைகளும் தொண்டைமானாறு சந்நிதி கோவில் வாசல் வரை சேவையாற்றும் என இ.போ. ச.பருத்தித்துறை சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ)

## க.பொ.த. சா/த பெறுபேறுகளை மீள் திருத்தம் செய்யும் திகதி அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகியுள்ள நிலையில், இவற்றில் மீள் திருத்தம் செய்ய விரும்புபவர்களுக்கான திகதியை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகள் தங்களுடைய விண்ணப்பங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தங்களுடைய விண்ணப்பங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னரும் விண்ணப்பிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் கோரியுள்ளது. (இ-7)




# முயலும் சிங்கமும்

சிங்கம் ஒரு காட்டு மிருகம். அதை மிருகங்களின் ராசா என்றும் கூறுவர்.

அது தாவர உணவு உண்ணும், மான், மரை, முயல் போன்ற சாதுவான மிருகங்களை வேட்டையாடி அவற்றின் மாமிசத்தை விரும்பி உண்ணும்.

ஒரு காட்டில் வாழ்ந்து வந்த சிங்கம் ஒவ்வொரு நாளும் பல மிருகங்களை வேட்டையாடி தின்று வந்தது.

இதனை கண்ட மற்றைய மிருகங்கள் மிக்க பயத்துடன் வாழ்ந்து வந்தன.

சிங்கம் இப்படி பல மிருகங்களை ஒவ்வொருநாளும் கொல்வதால் தாம் வெகு சீக்கிரமே இறந்துவிடுவோம் என எண்ணி அவை எல்லாம் ஒன்றுகூடி ஆலோசனை செய்தது.

சிங்கத்தை எதிர்த்து அவைகளால் போராட முடியாது என்பது அவைகளுக்கு நன்கு தெரியும்.

அதனால் அவை சிங்கத்திற்கு இரையாக தினம் ஒரு மிருகமாக போவதற்கு தீர்மானித்தன.

எல்லா மிருகங்களும் சிங்கத்தின் குகைக்குச் சென்று தாம் எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்துள்ளதாகவும் அதனால் சிங்கராசா இரை தேடி அலையைத் தேவையில்லை. நாமே தினம் ஒருவராக உங்கள் குகைக்கு இரையாக வருகின்றோம் என தெரிவித்தன.



அத்துடன் நீங்கள் பல மிருகங்களை ஒரு நாளில் கொன்றால் நாங்கள் எல்லோரும் சீக்கிரமே இறந்து விடுவோம். பின்பு உங்களுக்கு உணவு கிடையாமல் நீங்களும் சீக்கிரமே இறந்து விடுவீர்கள் என்றன, இதனை கேட்ட சிங்கராசாவுக்கு மகிழ்ச்சி பொங்கியது.

அன்றிலிருந்து ஒவ்வொரு மிருகம் சிங்கத்திற்கு இரையாகச் சென்றது.

ஒருநாள் ஒரு முயலின் முறை வந்தது. முயல் சிங்கத்தின் குகைக்கு சிறிது தாமதமாகச் சென்றது.

அதனால் சிங்கம் மிகுந்த கோபத்துடன் இருந்தது.

சிங்கம் முயலைப் பார்த்து நீ ஏன் தாமதமாகினாய் என கர்ச்சித்தது.

அதனைக் கேட்ட முயலார் நடுக்கத்துடன் "சுவாமி" நான் வரும் வழியில் வேறொரு பெரிய சிங்கம் என்னை பிடிக்க கலைத்தது. நான் பதுங்கி இருந்துவிட்டு இப்பதான் வாறேன் என்றது.

என்னைவிட பெரிய சிங்கம் இந்தக் காட்டில் இருக்கிறதா? என்று இறுமாப்புடன் கேட்டது.

அதற்கு "ஆம் சுவாமி" வாருங்கள் காட்டுகின்றேன் என்று சிங்கத்தை அழைத்துச் சென்று ஒரு கிணற்றைக் காட்டி இதற்குள்தான் அந்த பெரிய சிங்கம் இருந்தது என்று கூறியது.

அதனை நம்பிய சிங்கம் கிணற்றை எட்டிப் பார்த்தது. அப்போது சிங்கத்தின் நிழல் (விம்பம்) வேறொரு சிங்கம் கிணற்றினுள் இருப்பது போல் தெரிந்தது. சிங்கம் அதைப் பார்த்து கர்ச்சித்தது.

பிம்பமும் கர்ச்சித்தது. சிங்கத்திற்கு ஆத்திரம் பொங்கியது.

இதோ பார் உனக்கு ஒரு முடிவு கட்டுகிறேன் என கூறிக் கொண்டு கிணற்றினுள் பாய்ந்தது.

சிங்கம் கிணற்று நீரில் மூழ்கி மாண்டது.

முயலின் சமயோசித முயற்சியால் மற்றைய மிருகங்களும் காப்பாற்றப்பட்டன.




❖1492-ஸ்பெயினிலிருந்து அனைத்து யூதர்களும் ரோமன் கத்தோலிக்கராக மாற வேண்டும் அல்லது அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

❖ 1814-நெப்போலியனுக்கு எதிரான போரில் கூட் டுப் படைகள் பாரிஸ் நகரை அடைந் த ன.

❖1822-ஐக்கிய அமெரிக்காவில் புளோரிடா உருவாக்கப்பட்டது.

❖1831- யாழ்ப்பாணம், மானிப்பாயில் அமெரிக்க மிஷன் கட்டடங்கள் தீப்பிடித்து அழிந்தன.

❖1842-அறுவைசிகிச்சைகளில் முதன்முதலாக மயக்க மருந்து குரோஃபோர்ட் லோங் என்பவரினால் பயன்படுத்தப்பட்டது.

❖1858-அழிப்பானுடன் கூடிய எழுதுகோலுக்கான காப்புரிமம் ஹைமன் லிப்மன் என்பவரினால் பெறப்பட்டது.

❖1945-இரண்டாம் உலகப் போர்: சோவியத் படைகள் ஆஸ்திரியாவினுள் நுழைந்து வியன்னா நகரைக் கைப்பற்றினர்.

❖1949-ஐஸ்லாந்து நேட்டோ அமைப்பில் இணைந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரெய்க்ஜாவிக் நகரில் கலவரம் இடம்பெற்றது.

❖ 1965-வியட்நாம் போர்: சாய்கோன் நகரில் அமெரிக்கத் தூதராலயத்திற்கு முன்னால் தானுந்துக் குண்டொன்று வெடித்ததில் 22 பேர் கொல்லப்பட்டனர்.

❖ 1981- ஜனாதிபதி றொனால்ட் றேகன் வோஷிங்டனில் வைத்து ஜோன் ஹிங்கிளி என்பவனால் மார்பில் சுடப்பட்டார்.

**பிறப்புகள்**

❖1432-இரண்டாம் முகமது, உதுமானிய சுல்தான் (இ. 1481)

❖ 1566-கார்லோ கேசுவால்தோ, இத்தாலிய இசைக்கலைஞர், இசையமைப்பாளர் (இ. 1613)

❖1709-ஆனந்த ரங்கம் பிள்ளை, தமிழில் நாட்குறிப்பு எழுதியவர் (இ. 1761)

❖ 1746-பிரான்சிஸ்கோ கோயா, ஸ்பானிய-பிரான்சிய ஓவியர் (இ. 1828)

❖1853-வின்சென்ட் வான் கோ, டச்சு-பிரான்சிய ஓவியர் (இ. 1890)

❖1861-சுவாமி யோகானந்தர், சுவாமி இராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர் (இ. 1899)

❖ 1889-க.சொர்ணலிங்கம், ஈழத்து நாடகக் கலைஞர் (இ. 1982)

❖1894-நிக்கொலாய் பரபாசொவ், சோவியத், ரஷ்ய வானியலாளர் (இ. 1971)

❖1908-தேவிகா ராணி, இந்தியத் திரைப்பட நடிகை (இ. 1994)

❖1925-தி.க.சிவசங்கரன், தமிழக மார்க்சியத் திறனாய்வாளர் (இ. 2014)

❖ 1930-கே.ஆர்.சோமசுந்தரம், மலேசிய-இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர்,

❖1945-எரிக் கிளாப்டன், ஆங்கிலேய இசைக் கலைஞர், பாடகர்

**இறப்புகள்**

❖1664-குரு அர் கிருசன், சீக்கிய நம்பிக்கையின் எட்டாம் குரு (பி. 1656)

❖1951-நா.பொன்னையா,ஈழத்துப் பத்திரிகையாளர், பதிப்பாளர், சமூக சேவையாளர் (பி. 1892)

❖2005-பிரெட் கோரெமாட்சு, அமெரிக்க அரசியல் செயற்பாட்டாளர் (பி. 1919)

❖2005-ஒ.வே.விஜயன்,மலையாள எழுத்தாளர், ஓவியர் (பி. 1930)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 35 | 40 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 65 | 80 | 90 | 80 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 50 | 60 | 35 |
| தக்காளி | 30 | 20 | 30 | 40 | 25 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 25 | 40 | 40 | 35 |
| கோவா | 30 | 30 | 50 | 50 | 30 |
| கரட் | 100 | 80 | 100 | 160 | 80 |
| பூசணி | 30 | 25 | 40 | 60 | 40 |
| புடோல் | 50 | 25 | 80 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 130 | 110 | 100 | 150 | 150 |
| பெரிய வெங்காயம் | 80 | 55 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 160 | 40 | 140 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 60 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | – | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 110 | 30 | 50 | 80 | 80 |
| லீக்ஸ் | 160 | 110 | 180 | 200 | 120 |
| பீற்றூட் | 30 | 30 | 30 | 80 | 30 |
| கறிமிளகாய் | 120 | 35 | 50 | 80 | 70 |
| முருங்கைக்காய் | 400 | 380 | 300 | 400 | 450 |
| போஞ்சி | 200 | 65 | 140 | 160 | 120 |
| கத்தரித்தப்புள்ளா | 30 | – | – | 40 | 50 |
| கீரை-1பிடி | 20 | 20 | 40 | 30 | 50 |
| தேசிக்காய் | 160 | 90 | 120 | 120 | 100 |
| தேங்காய்(ஒன்று) | 100 | 30-90 | 75 | 75 | 90 |
| இராசவள்ளி | 160 | 110 | 260 | 160 | 180 |
| வெங்காயப்பூ | 100 | 90 | 140 | 160 | 120 |
| முள்ளங்கி | 100 | 25 | 80 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 40 | 30 | 35 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 40 | – | – | 80 | – |

எத்தனை காலந்தான் ஏமாற்றுவார்
இந்த நாட்டிலே சொந்த நாட்டிலே நம் நாட்டிலே...
~ தஞ்சை ராமையாதாஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கூட்டமைப்பு பிரதமர் ரணிலை ஆதரிக்குமா? இல்லையா?

சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் விடையளிக்குக. சரியான விடையின் கீழ்க் கோடிடுக என்பன வினாவுக்கு விடையளிக்கும் முறைகளுக்குட்பட்டவை.

அந்த வகையில் அரசியல் தொடர்பில் தமிழ் மக்களிடம் இப்போது கேட்கக்கூடிய கேள்வி ஏதேனும் உண்டா? என்று சிந்தித்துப் பார்த்தோம்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ்.மாநகர சபையிலும் இதர நகர, பிரதேச சபைகளிலும் ஆட்சியமைத்துள்ளமை தொடர்பில் உங்கள் கருத்து என்ன என்று மக்களிடம் கேட்டால் காலம் தான் பதில் சொல்லும் என்பதே மக்களின் விடையாக இருக்கும்.

சரி, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜா அவர்கள் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவாரா? என்று கேட்டால் சொல்ல முடியாது என்பது பதிலாகும்.

அப்படியானால் இப்போது எந்தக் கேள்வி பொருத்தமாக இருக்குமென்று பார்த்தால், எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்குமா? இல்லையா? என்று கேட்டால்,

ஆதரிக்கும் என்பர் ஒரு பகுதியினர். இன்னொரு தரப்பினர் ஆதரிக்காது என்று கூறுவர்.

பிரதமர் ரணிலுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கும் என்று கூறுவோர்,

- தமிழ் அரசியல் கைதிகளை இதுவரை விடுதலை செய்யவில்லை.
- காணாமல்போனவர்களுக்கு நடந்தது என்ன என்பது பற்றி இன்னமும் ஒரு முடிவை நல்லாட்சி முன்வைக்கவில்லை.
- அரசியலமைப்புச் சீர்திருத்தம் எனக் கூறி தமிழ் மக்களை ஏமாற்றியமை என்றவலுவான காரணங்களுடன் வடக்கு கிழக்கில் ஆயிரம் விகாரைகளை அமைத்தல் என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரம் என்பன சேர்ந்து பிரதமர் ரணிலை கூட்டமைப்பு எதிர்க்கும் எனத் தமது கருத்தை முன்வைப்பர்.

இத்தகைய கருத்தை எதிர்ப்போர் ஐயா இதெல்லாம் வெறும் வார்த்தைகளேயன்றி அதற்குள் எந்தவிதமான உண்மையும் இல்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிக்கும்.

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினர்.

இந்த ஆதரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியதன் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தே வாக்களிக்கும் என்பது நூறு வீதமான உண்மை என்று தமது கருத்தை முன்வைப்பர்.

எதுஎவ்வாறாக இருந்தாலும் பிரதமர், ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதா? இல்லையா? என்பது பற்றி ஆராய்ந்து வருகிறோம் என்று தமிழரசுக் கட்சியின் தலைமை கூறி வருவதெல்லாம் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற வார்த்தைகளேயன்றி வேறில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் என்பதே உண்மை.

# வைத்தியராகி தமிழ் மக்களுக்கு சேவை செய்வதே என் இலட்சியம்

## தேசிய ரீதியில் தமிழ் மொழி மூலம் முதலிடம் பெற்ற வேம்படி மாணவி



இணைப் பாடவிதான செயற்பாடுகள் எனது கல்விக்கு மேலும் உறுதுணையாக இருந்தது என க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்த யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைமாணவி மிருதி சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பகுதியில் வசித்து வருகின்றேன்.

எனது அம்மா வீட்டுப் பணியில் ஈடுபட்டு வருகிறார். அப்பா வர்த்தக நிலையமொன்றை நடத்தி வருகிறார். எனக்கு இரு தங்கைமார்கள் உள்ளனர். எனது வெற்றிக்கு அவர்களின் விடாமுயற்சிதான் காரணம். எனது அம்மாவும் அப்பாவுமே எனது சாதனைக்கு ஊன்றுகோலாகச் செயற்பட்டவர்கள்.

அத்துடன் என் சாதனைக்குப் பாடசாலைக் கல்வியே முக்கிய பலமாக இருந்துள்ளது. அந்தவகையில் வெற்றிக்கு வழிகாட்டிகளாகச் செயற்பட்ட அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அதிகம் ஈடுபட்டிருந்தேன். அவை எனது கல்விக்கு உதவியாக இருந்தது.

எனது எதிர்கால இலட்சியம் வைத்தியராகித் தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்பதே ஆகும் எனவும் தெரிவித்தார். (ம-9)

# பால்மா, எரிவாயு விலைகளில் மாற்றம் ஏற்படமாட்டாது

(கொழும்பு)

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு பால்மா மற்றும் சமையல் எரிவாயுவின் விலைகள் அதிகரிக்கப்படமாட்டாது என கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு அறிவித்துள்ளது.

பால்மா பக்கற்றுக்களின் விலைகள் மற்றும் சமையல் எரிவாயுவின் விலை ஆகியன அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது என வெளியாகிய செய்திகள் தொடர்பிலேயே அமைச்சு இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில கோவிந்தன்கடை சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி, கறுப்பிக்குளம், உடச்சகண்டி, மாயவனூர், இராமநாதபுரம், சாந்தபுரம், இரணைமடு, திருவையாறு, தேராவில், இருட்டுமடு, மூங்கிலாறு, உடையாகட்டு, கைவேலி, சுதந்திரபுரம், தேவிபுரம், வள்ளிபுனம், 68வது பிரிவு இராணுவ முகாம், 683வது பிரிவு இராணுவமுகாம், 18 VIR இராணுவமுகாம், இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி விவசாய பயிற்சி நிலையம், SFHQ இரணைமடு, Hidramani ஆடைத் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நீராவிபுரம், கற்கடந்தகுளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நினைவாற்றல்

நினைவாற்றல் உங்களைத் துன்பத்திற்கு ஆளாக்குகிறது, அல்லது புத்திசாலியாக்குகிறது.

கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டிருக்கும் உலகில் அனுபவங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் நினைவாற்றல் எவ்வளவு நலலதாயிருநதாலும் கெடடதாயிருநதாலும பரந்த ஆன்மாவைச் சுருக்குகிறது. அவை உங்களைக் கட்டுப்படுத்துகின்றன.

உங்களுடைய இயல்பின் நினைவாற்றல்- மாறாத ஆன்மா- விழிப்புணர்வை விரிவடையச் செய்கிறது. மென்மேலும் உயர்த்துகிறது. இது உங்களைப் பிணைப்பிலிருந்து விடுவிக்கிறது.

நீங்கள் இப்போது இருக்கும் தன்மை உங்கள் நினைவாற்றலைப் பொருத்தது. நீங்கள் அறியாமையிலிருக்கிறீர்கள் என்றால் அது உங்கள் நினைவாற்றலினால்தான். நீங்கள் ஞானம் பெற்றிருக்கிறீர்கள் என்றால் அதுவும் உங்கள் நினைவாற்றலினால்தான்.

எல்லையற்ற இறையை மறப்பது துன்பம் தருகிறது. அற்ப விடயங்களை மறப்பது பேரானநததததை தருகிறது.

கேள்வி: மகிழ்ச்சியற்ற நிகழ்ச்சிகளின் நினைவுகளையும் வரம்புகளையும் எப்படி நினைவிலிருந்து அகற்றுவது?

ஸ்ரீஸ்ரீ: உலகம் மற்றும் நிகழ்ச்சிகள் நிலையற்ற தன்மையுடையவை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

கடந்த நிகழ்ச்சிகள் இப்போது இல்லை என்பதை உணருங்கள்

கடந்த காலத்தை ஏற்று அதைப்பிடித்துக் கொள்ளாது விட்டு விடுங்கள்.

உணர்ச்சி வயப்படாமல் (DISPASSION) ஆன்மாவை உணருங்கள்.

ஞானிகளுடன் கூடி இருப்பதும் அவர்களுக்குச் சேவை செய்வதும் உங்களுடைய ஆனமாவை உங்களுககு நினைவூட்டுகிறது.

ஸோஹம் (So Ham) பிராண சக்தியை அதிகமாக்குகிறது அதனால் என்ன? (So What)

இதில் எதுவும் உங்களுக்குச் சரிப்படவில்லை என்றால் சந்திரனுக்குச் சென்று விடுங்கள்!!!

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

நம வாழககைகக அவசியமான ஆனமக தகவல களை பற்றி தெரிந்து கொள்வோம்

❖ ஆண்கள் தெய்வங்களை வழிபடும்போது தையல் உள்ள உடைகளை அணியக் கூடாது.

❖ ஈரததுணியை உடுததுக கொணடு பூஜைகள, ஜபங்கள் செய்யக்கூடாது.

❖ வாழைப பழததல பததயை சொருகி வைககக கூடாது. தேங்காய் இரண்டுக்கு மேற்பட்ட துண்டுகளாக உடைந்தால் அதை தெய்வத்திற்கு நிவேதனம் செய்யக்கூடாது.

❖ புழுங்கல் அரிசியால் சமைக்கப்பட்ட உணவை தெயவங்களுககு நிவேதனம செயயககூடாது.

❖ மா இலை தோரணங்களுக்கு பதிலாக பிளாஸடிக, பததளை முதலியவறறால மாவிலை போனறு தோரணம் கட்டலாகாது.

❖ தெயவப படம, குதது விளககுளல மின வயரால அலங்காரம் செய்யக்கூடாது.

❖ தினசரி பிராரததனை எனபது வடடு வாசலில ஓடி வரும தெளிநத ஆறு போனறது. யார ஒருவர அதில தனனை சுதது செயது கொளகிறானோ அவர தனனை நிர்மலமாக்கிக் கொள்கிறார்.

❖ வடடில பூஜை செயது முடிததது துளசியை கையில் வைத்துக் கொண்டு என் பக்தன் எங்கு சென்றாலும் நான் அவனைப்பின் தொடர்ந்து செல்வேன் என பக வான்கூறியுள்ளார். அதனால் ஒருவர்கையில் துளசிஇருக்கும வரை விஷணுவின துணை அவருககு உணடு.

❖ தெய்வங்களுக்கு நிவேதனம் செய்யும்போது வெற்றிலை மற்றும் பாக்குகளை இரட்டைப்படை எண்ணிக்கையில் (2, 4, 6. 8, 10) வைக்க வேண்டும்.

❖ பூஜைக்கு உபயோகிக்கும் பாக்கு, வெற்றிலை அனைத்து வகை பழங்கள், பூக்கள், தர்ப்பங்கள், ஸ்மித்துகள் போன்றவற்றை பூமியில் நேரடியாக வைக்கக் கூடாது. தட்டு போன்ற பொருட்களின் மீது வைக்க வேண்டும். (முற்றும்)

# இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### சாந்தம் நன்மை தரும்

✦ பணிவுடன் பழகாதவனும், நாணத்தகும் செயல்களில் இருந்து விலகிக் கொள்ளாதவனும் உண்மையான மனிதனாக மாட்டான்.

✦ மககளிடம அனபாக இருஙகள. கடுமையாக இராதீர்கள். மூத்தவர்களுக்கு மரியாதை செலுத்தாதவனும என அனபிறகுரியவன அலலன.

✦ பேராசை வறுமையைக் குறிக்கின்றது. அவாவின்மை செல்வத்தைக் குறிக்கின்றது.

✦ எவன் சாந்த குணத்தைப் பெற்றிருக்கின்றானோ அவன் நன்மையான பகுதியை உடையவன்.

✦ மறதி என்பது அறிவின் துரதிர்ஷ்டம். அறிவைத் தகுதியற்றவரிடம் உபயோகிப்பது அதனையே இழப்பதற்கு ஒப்பாகும்.

✦ இறநதவரகளைப பறறி இழிவாகப பேச வேணடாம.

✦ எவருடைய சொலலும செயலும பிறரைத துனபுறுதத மாட்டாவோ அவனே மனிதனாவான்.

✦ வியாபாரததில உணமை சொனனால அபிவிருததி ஏற்படும். பொய் சொன்னால் வியாபாரம் குறையும்.

✦ தேவையான பொருளுதவி செய்து விதவைகளையும், ஏழைகளையும் வாழ்விப்பவன் இறைநெறியில் ஒரு பெருங்கொடையாளியாக இருக்கின்றான்.

# கொலின்சின் உதைபந்தாட்டத் தொடர் வெற்றியீட்டிய அணிகளின் விபரங்கள்







கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி Kings of Jaffna 2018 தொடர் தலைவர் ஜெ.ஜெயசுந்திரன் தலைமையில் ஆரம்பமாகியது. இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம். வேதா பரணமும் சிறப்பு விருந்தினராக கருணையம்பதி சனசமூக நிலைய தலைவர் இ.பிரதீப் ஆகியோரும் கலந்து கொண்டு போட்டியினை ஆரம்பித்து வைத்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது போட்டியில் சிவானந்தா அணியினை எதிர்த்து உடுப்பிட்டி யூத் அணி மோதியது விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் இரண்டு அணிகளும் கோல் எதனையும் போடாததால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

தொடர்ந்து வெற்றியைத் தீர்மானிக்கும் சமநிலை தவிர்ப்பு உதையில் உடுப்பிட்டி யூத் அணி 3.2 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது. ஆட்ட நாயகனாக உடுப்பிட்டி யூத் அணியின் குவேந்தன் தெரிவு செய்யப்பட்டார்.

நடைபெற்ற •இரண்டாவது போட்டியில் அண்ணாசிலையடி அணியை எதிர்த்து உதயதாரகை அணி மோதியது. வெற்றி யாருக்கு என்று ரசிகர்களின் எதிர்பார்ப்பிற்கு மத்தியில் அண்ணாசிலையடி அணி 2.1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது.

ஆட்ட நாயகனாக அண்ணாசிலையடி அணியின் நட்சத்திர வீரர் பிருந்தாபன் தெரிவு செய்யப்பட்டார்.

கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் அணி மோதியது. விறுவிறுப்பான இப்போட்டியில் 2:1 என்ற கோல்கணக்கில் சென். பீற்றர்ஸ் அணி வெற்றி பெற்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்.பீற்றர்ஸ் அணி வீரர் தவசீலன் தெரிவு செய்யப்பட்டார்.

28 ஆம் திகதி இரண்டு போட்டிகள் நடைபெற்றன. முதலாவதாக நியூட்டன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் நியூட்டன் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக நியூட்டன் விளையாட்டுக்கழக அணியின் நிதர்சன் தெரிவு செய்யப்பட்டார்.

நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் கரவைச்சுடர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக் கழகம் மோதியது. இப்போட்டியில் 3:0 என்ற கோல் கணக்கில் கரவைச்சுடர் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக கரவைச்சுடர் விளையாட்டுக்கழக வீரர் ஜெயராஜ் தெரிவு செய்யப்பட்டார். (க)

## புதிய விடியல் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ்.மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் ஒழுங்குபடுத்தலில், யாழ். மாவட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் புதிய விடியல் என்னும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை கடந்த 26 ஆம் திகதி முதல் நடத்தி வருகின்றது.

யாழ்ப்பாணம், வலிகாமம், தீவகம், பருத்தித்துறை மற்றும் வடமராட்சி ஆகிய லீக்குகளின் அனுமதியுடன் இந்தச் சுற்றுப் போட்டியானது நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 39 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றன.

போட்டிகள் யாவும் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி மைதானத்தில் நடைபெறுகின்றது. (க-26)

## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

## இளம்பிறையை வீழ்த்தி வெற்றியை ருசித்தது செல்வா

குடத்தனை செல்வா விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

குடத்தனை செல்வா C அணியினை எதிர்த்து நாகர்கோவில் இளம்பிறை அணி மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் முதலாவது கோலினை செல்வா விளையாட்டுக்கழக அணியின் வீரர் ஜெயசிறி பதிவு செய்தார். அதனைத் தொடர்ந்து உத்வேகம் கொண்ட செல்வா அணியினர் ஜெதுசன் இரண்டாவது கோலினையும் செல்வா மூன்றாவது கோலினையும் போட 3:00 என்ற கோல்கணக்கில் செல்வா C அணி வெற்றி பெற்று அசத்தியது. (க)

## ரசிகர்கள் என்னை மன்னிக்கவும் டேவிட் வோர்னர் பகிரங்க வேண்டுகோள்



பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் தன்னுடைய செயலுக்கு டேவிட் வோர்னர் மன்னிப்பு கோரியுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட்டில் பந்தை சேதப்படுத்திய புகாரில் சிக்கிய அவுஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்டீவ் ஸ்மித், டேவிட் வோர்னர் ஆகியோருக்கு ஓராண்டு கிரிக்கெட் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு வீரரான பான் கிராப்டுக்கு 9 மாதங்கள் விளையாட தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து டேவிட் வோர்னர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில், உலகளவிலான மற்றும் அவுஸ்திரேலிய ரசிகர்களுக்கு தற்போது நான் சிட்னிக்கு திரும்பி கொண்டிருக்கிறேன். என்னை ரசிகர்கள் மன்னித்து விடுங்கள் என வோர்னர் தெரிவித்துள்ளார். (க)

## வோனருக்குத் தடை வருகிறார் பெரேரா



பந்தை சேதப்படுத்திய விவகாரம் தொடர்பாக, சன்ரைசர்ஸ் அணித்தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட வோர்னருக்கு பதிலாக, இலங்கை அணியின் இளம் வீரர் குசல் பெரேராவை நியமிக்க அந்த அணி முடிவு செய்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில், அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் மற்றும் துணைத் தலைவர் டேவிட் வோர்னர் ஆகியோருக்கு, இந்த ஆண்டு நடைபெற உள்ள ஐ.பி.எல் தொடரில் விளையாட பி.சி.சி.ஐ தடை விதித்துள்ளது.

மேலும், டேவிட் வோர்னரின் சன்ரைசர்ஸ் அணியின் தலைவர் பதவியும் பறிக்கப்பட்டது.

இந்நிலையில்,

வோர்னருக்குப் பதிலாக இலங்கை அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரர் குசல் பெரேராவை அணியில் சேர்க்க சன்ரைசர்ஸ் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இது குறித்து சன்ரைசர்ஸ் அணி நிர்வாகத்தின் அதிகாரி ஒருவர் கூறுகையில், வோர்னருக்கு பதிலாக குசல் பெரேராவை நியமிக்க அவரை அணுகினோம்.

வோர்னரைப் போல அவரும் அபாயகரமான வீரர் ஆவார். எங்களது அணியின் ஆய்வாளர், குசல் பெரேரா கடந்த சில மாதங்களாக சிறப்பாக விளையாடி வருவதாக தெரிவித்தார்.

எனினும், இதுவரை எதுவும் இறுதி செய்யப்படவில்லை. ஆனால், பெரேரா எங்கள் அணியில் இணைந்து கொள்வார் என்று நம்புகிறோம் என தெரிவித்துள்ளார்.

27 வயதான பெரேரா, 34 இருபது- 20 போட்டிகளில் விளையாடி 10 அரைச் சதங்கள் அடித்துள்ளார்.

இந்நிலையில் அணித் தலைவராக கேன் வில்லியம்சன் நியமிக்கப்பட்டுள்ளார். (க)





வடமாகாண கல்வித் திணைக்களமும் Organ நிறுவனமும் இணைந்து நடத்திய விசேட ஒலிம்பிக் போட்டி- 2018 வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி கல்வி வலய மாணவர்கள் ஐந்து மெய்வல்லுநர் விளையாட்டுக்களில் முதலிடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் வலைப்பந்தாட்ட அணியும் உதைபந்தாட்ட ஆண்கள் அணியும் வடக்கு மாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தேசியப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. (க)

# க.பொ.த சா/த பரீட்சையில்...

தொடர முடியும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்றுக்கு நேற்று வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாடசாலை மாணவர்களுக்கு 13 ஆண்டுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள கல்வித் திட்டத்தில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களும் உயர்தரத்தில் கல்வியைத் தொடர முடியும்.

அவர்கள் தொழில்முறைக் கல்வியின் ஊடாக உயர் தரத்தைத் தொடர முடியும்.

இதனால் வெளி யாகியுள்ள 2017 க.பொ.த சாதா ரண தரப் பரீட்சையில் சித்தியடை யாதோரில் சுமார் 14 ஆயிரம் மாணவர்கள் உயர் தரத்தைத் தொடர முடியும்.

இந்தத் திட்டத்தின் ஊடாக 2019ஆம் ஆண்டிலிருந்து சாதாரண தரத்தில் சித்தியடையாத அனைத்து மாணவர்களும் உயர் தரத்தில் பயில்வதற்கு வாய்ப்பு வழங்கப்படும் என்றார். (ம)

# ஈழப் போரை நன்கறிந்த டிகார்லோ...

உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து ஐநா வெளியிட்ட நியமன அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

2012 ஆம் ஆண்டு முதல் ஐ.நாவின் அரசியல் விவகாரத்துறை உதவிச் செயலாளராக இருந்து வரும் ஜெப்ரி பெல்ட்மெனுக்கு அடுத்து, ரோஸ்மெர்ரி இந்த பதவியில் பொறுப்பேற்கவுள்ளார்.

ஐ.நாவுக்கான முன்னாள் அமெரிக்க தூதரான ரோஸ்மெர்ரி டிகார்லோ, 35 ஆண்டுகளுக்கும் மேலாக, பொதுப்பணி மற்றும் கல்வித் துறையில் பணியாற்றியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் பாலின வேறுபாடுகள் இன்றி, அனைவரும் சமமானவர்கள் என்ற கருத்தை முன்னிறுத்தி இந்த நியமனம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், ஐ.நா. வரலாற்றில், இந்த மிக உயர்வான பதவியில் பொறுப்பேற்கவுள்ள முதல் பெண் ரோஸ்மெர்ரி டிகார்லோ என்பது குறிப்பிடத்தக்கது என்றுள்ளது.

இதேவேளை தற்போது அரசியல் விவகாரத்துறை உதவிச் செயலாளராக இருந்துவரும் ஜெப்ரி பெல்ட்மெனும் இலங்கை போர்க்குற்ற விவகாரத்தில் அதிக கரிசனை கொண்டுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# 2017ஆம் ஆண்டு க.பொ.த...

சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் இரவு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டன.

வெளியிடப்பட்ட பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் கடந்த சில வருடங்களை விட இம்முறை சித்திவீதம் அதிகரித்துள்ளது.

அந்த வகையில் யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் யாழ் இந்துக்கல்லூரி ஆகியன முன்னிலையை பெற்றுள்ளன.

அதில் யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி மிருதி சுரேஷ்குமார் அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலம் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி 9ஏ தர சித்தியை தமிழ் மொழி மூலம் 38 பேரும், ஆங்கில மொழி மூலம் 13 பேரும் பெற்றுள்ளனர்.

யாழ் இந்துக்கல்லூரியில் 9ஏ தர சித்தியை தமிழ் மொழிமூலம் 25 பேரும், ஆங்கில மொழி மூலம் 11 பேரும் பெற்றுள்ளனர்.

இதே வேளை 2017 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் 73.05 வீத மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர உயர்தரத்துக்கு தகுதி பெற்றுள்ளதுடன் கணித பாடத்தில் 67.24 வீதமானோர் சித்தி பெற்றுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-9.60)

# பிரதமர் ரணிலுக்கு எதிரான...

சிறிகோத்தாவில் உள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகத்தில், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் நடைபெற்றிருந்தது. இதன்போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம)

# வேலணை பிரதேச சபை...

நமசிவாயம் கருணாகரமூர்த்தியும் பிரதித் தவிசாளராக மகிந்தவின் கட்சியான பொதுஜன பெரமுனகட்சியின் உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூராட்சி சபைகளில் தனிப் பெரும்பான்மை பெறாத சபைகளுக்கான தவிசாளர் தெரிவுகள் உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் தற்போது நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய நேற்றைய தினம் வேலணைப் பிரதேசசபைக்கான தவிசாளர் தெரிவின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் பெயர்களைப் பிரேரித்திருந்தது.

இதில் இரண்டு கட்சியினருக்கும் தலா ஒன்பதுவாக்குகள்கிடைத்து சமநிலைத் தன்மை ஏற்பட்டிருந்ததால் உள்ளூராட்சி சட்டத்தின் பிரகாரம் குலுக்கல் முறை நடத்தப்பட்டது.

இதன் போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிவெற்றிவெற்று சபையின் ஆட்சிஅதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

இதேவேளை 20 உறுப்பினர்களைக் கொண்ட இச் சபையில் கூட்டமைப்பு 8 உறுப்பினர்களையும், ஈபிடிபி 6 உறுப்பினர்களையும், மகிந்தவின் பொதுஜனபெரமுன 2 உறுப்பினர்களையும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியன தலா ஒரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளது.

இவ்வாறானநிலையில் தவிசாளர் தெரிவிற்கான வாக்கெடுப்பின் போது கூட்டமைப்பிற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாகவும் அதே நேரம் ஈபிடிபிக்கு மகிந்தவின் பொதுஜன பெரமுன கட்சியும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஆதரவாகவும் வாக்களித்திருந்தன. ஆயினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன நடுநிலைவகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# எதிர்பார்த்த பெறுபேறு...

மாணவி ஒருவர் கிணற்றில் விழுந்து உயிர் மாய்ப்பு செய்து கொண்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின்போது தனது தாய், தந்தையை இழந்த நிலையில் புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் அம்மம்மாவுடன் வசித்து வந்த சாந்தலிங்கம் அனுசியா (வயது 17) என்ற மாணவி எதிர்பார்ப்புடன் கல்விகற்று பரீட்சை எழுதிய போதும் வெளியாகியுள்ள பரீட்சை பெறுபேறுகளில் தான் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை என மனமுடைந்த நிலையில் கிணற்றில் விழுந்து உயிரை மாய்த்துள்ளார்.

இவர் முல்லைத்தீவு கல்வி வலயத்தின் கீழ் உள்ள மு/வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் கல்வி கற்று பரீட்சை எழுதியவராவார். (ம-15.281)

# அதிகாரத்தில்...

ஜனாதிபதியின் அதிகாரத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பைசர் முஸ்தப்பா இதனை தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கை இல்லா பிரேரணை மூலம், ஜனாதிபதியின் அதிகாரத் திற்கு எந்தவித பாதிப்பும் இடையூறும் ஏற்படாது.

ஆனால் அமைச்சரவை கலைக்கப்படும் எனவும் அமைச்சர் பைசர் முஸ்தப்பா குறிப்பிட்டுள்ளார். (ம)

# ஆளுநர் கூரே தமிழ் மக்களுக்கு...

ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாம்.

அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டதில் இருந்து கடந்த கால அரசுகள் பொருத்தமான ஆளுநரை வட கிழக்குக்கு நியமிக்கவில்லை.

அவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் அரசின் பிரதிநிதிகளாக இருந்தார்களே தவிர தமிழ் மக்களின் மனங்களை வெல்லவில்லை. இது சிங்கள இனவாதிகளுக்கும் தமிழ் அரசியல் வாதிகளுக்கும் கிடைத்த வெற்றி.

ஆனால் இன மத மொழி பேத மற்ற முற்போக்கு வாதியான வடக்கு ஆளுநர் தங்களது ஆட்சிக்காலத்தில் நியமிக்கப்பட்டார். தமிழ் மக்களுக்காக சிறந்த சேவையாற்றிய நிர்வாகி அவர். அவரை இடமாற்றம் செய்தால் தமிழ் மக்கள் மத்தியில் விரக்தி ஏற்படும். பிற்போக்கு வாத அரசில் இருந்து தமிழ் மக்களை காப்பாற்ற ஆளுநருடைய இடமாற்றத்தில் நேரடியாக தலையிடுமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்குறித்த கடிதத்தை யாழ் மாவட்ட அரச அதிபர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளதுடன் இன்று யாழ் வரும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்காரவுடன் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர். (ம-9)

# பங்காளியான புளொட்டிடம்...

களில் ஒன்றான புளொட் அமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. இதனால் தனது சொந்த பங்காளியிடம் தமிழரசு கட்சி மண் கௌவியுள்ளது.

தமிழரசுக் கட்சிக்கும் புளொட் அமைப்பிற்கும் இடையில் கடும் போட்டி நிலவியிருந்த நிலையில் இறுதியாக குலுக்கல் முறையில் புளொட் அமைப்பு வெற்றி வெற்று தவிசாளராக புளொட் அமைப்பைச் சேர்ந்த எஸ். தர்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வலி.தெற்கு பிரதேச சபையின் முதல் அமர்வு உள்ளூராட்சிஆணையாளர் பற்றிக் டிரஞ்சன் தலைமையில் நேற்று மாலை நடைபெற்றது.

இதன் போது தவிசாளர் தெரிவுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சேர்ந்தவர்கள் இரு அணிகளாகப் பிரிந்து தமிழரசுக் கட்சி சார்பில் பிரகாஸையும் புளொட் அமைப்பின் சார்பில் தர்சனையும் பிரேரித்தனர்.

அதே போன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி லகிந்தனையும் ஐக்கிய தேசிய கட்சி சுரேஷ் குமாரையும் பிரேரித்தது.

அதனை அடுத்து முதல் கட்ட வாக்கெடுப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்ட போது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என 20 உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என 10 உறுப்பினர்களும் கோரி இருந்தனர்.

ஆயினும் பெரும்பான்மை இரகசிய வாக்கெடுப்பை கோரியிருப்பதால் ஆணையாளரால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதற்கமைய நடைபெற்ற முதல் கட்ட வாக்கெடுப்பில் புளொட் அமைப்பின் தர்சன் 11 வாக்குகளையும், தமிழரசுக் கட்சியின் பிரகாஸ் 9 வாக்குகளையும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் லகிந்தன் 6 வாக்குகளையும், ஐக்கிய தேசிய கட்சியின் சுரேஷ்குமார் 4 வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர்.

இதன் போது 4ஆம் இடத்தை பெற்ற சுரேஷ்குமார் நீக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து ஏனைய மூவருக்கும் இடையில் இரண்டாம் கட்ட வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இந்த இரண்டாம் கட்ட வாக்கெடுப்பில் பிரகாஸ் 12 வாக்குகளையும், தர்சன் 12 வாக்குகளையும், லகிந்தன் 6 வாக்குகளையும் பெற்றிருந்தனர்.

இதில் 3ஆம் இடத்தைப் பிடித்த லகிந்தன் நீக்கப்பட்டு மூன்றாம் கட்ட வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தாம் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என அறிவித்தனர்.

அதை தொடர்ந்து நடைபெற்ற 3ஆம் கட்ட வாக்கெடுப்பில் பிரகாஸ் மற்றும் தர்சன் ஆகியோர் தலா 12 வாக்குகளை பெற்று சமநிலையை பெற்றனர். அதனால் உள்ளூராட்சி சட்ட விதிகளின் பிரகாரம் குலுக்கல் முறை சீட்டெடுப்பு மூலம் தவிசாளர் தெரிவு செய்யப்படுவார் என ஆணையாளர் அறிவித்தார். அச் சீட்டிலுப்பின் மூலம் சீட்டிலுப்பில் தர்சன் தவிசாளராக தெரிவாகியிருந்தார்.

இதனை யடுத்து புளொட் அமைப்பின் தர்சன் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# ஜனாதிபதி, பிர...

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் சாதகமாக பரிசீலிப்போம்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துரைத்துள்ளது என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ம)

# உங்கள் தந்தை...

கொழும்பிற்கு வந்துள்ள ஆனந்த சுதாகரனின் பிள்ளைகள் நேற்று வியாழக்கிழமை ஜனாதிபதியை நேரில் சந்தித்தனர். இதன்போதே இந்த வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த சனிக்கிழமை கொழும்பில் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயை சந்தித்து, தாயை இழந்து தவிக்கும் தமக்கு தந்தையுடனேனும் இணைந்து வாழ நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

குழந்தைகளின் கோரிக்கையை ஏற்ற ஆளுநர், இது குறித்து ஜனாதிபதியிடம் கலந்துரையாடுவதாகவும், ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடு செய்வதாகவும் வாக்குறுதி அளித்திருந்தார்.

அதற்கமைய ஜனாதிபதியுடனான சந்திப்பு நேற்று இடம்பெற்றிருந்ததுடன், நம்பிக்கையான வாக்குறுதியும் ஜனாதிபதியிடமிருந்து கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-15)

# யாழ் இளைஞன்...

இந்தச் சம்பவம் நேற்று வியாழக் கிழமை பி.ப. 1.35 மணியளவில் இடம்பெற்றது.

சம்பவத்தில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கணேஸ் சிவாதிஸ் என்பவரே பரிதாபமாக உயிரிழந்தார்.

வெள்ளவத்தை குளோபல் ரவர் ஹோட்டலில் தங்கியிருந்த இளைஞர் வெளியில் சென்ற போதே இந்த சம்பவம் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# வடக்கில் இராணு...

தாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த இராணுவத் தளபதி நேற்று மாலை கைதடியிலுள்ள முதலமைச்சரின் அலுவலகத்தில் முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இச் சந்திப்பு குறித்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தில் பல இடங்களிலும் பொது மக்களுக்குச் சொந்தமான பல ஆயிரம் ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருக்கின்றதை இராணுவத் தளபதிக்குச் சுட்டிக் காட்டியிருந்தேன்.

அத்தோடு அக் காணிகளை மீளவும் பொது மக்களிடம் கையளிக்க வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

இதற்கு படையினர் வசமுள்ள பொது மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு வருவதாகவும் தற்போது நான் முன்வைத்த கோரிக்கைகளை சாதகமாகப் பரிசீலனை செய்து அவற்றை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் இராணுவத் தளபதி தன்னிடம் கூறியுள்ளதாகவும் முதலமைச்சர் கூறினார். (ம-4)

## SATHAPONS

### சதாபொன்ஸ் கல்வி நிலையம்

மாலுசந்தி - அல்வாய்

**O/L மீட்டல் வகுப்புக்கள்**

*04.04.2018*
*காலை 7.30 மணிக்கு ஆரம்பம்*

**A/L புதிய வகுப்புக்கள்**
**கலை, வர்த்தகம்**

ஆரம்பம்
04.04.2018
மாலை 3.30 மணிக்கு
பதிவுகள் இன்று முதல்

(C-2044)

---

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

---

## A/L 2K20

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

ஆரம்பம்
07.04.2018
காலை - 8.00

**DMI Jaffna**

(C-2026)

---

# பொருளியல்

A/L 2020

## DMI Jaffna

### S.S.சிறி

**07.04.2018 ஆரம்பம்**

புதிய பாடத்திட்டத்திற்கான 2000 பல்தேர்வு வினாவிடை நூல் வெளிவருகின்றது. (2019/ 2020 மாணவர்களுக்காக)

(C-2025)

---

## NEC

1. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
2. மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

# A/L 2020

**கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல், தொழில்நுட்பம்.**

ஆரம்பம் 31.03.2018 சனி 9.00 மணி

**Note:** ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.

(C-2050)

---

## வேலைக்கு ஆள் தேவை

முல்லைத்தீவு பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. கால்நடைவளர்ப்பில் ஆர்வமும் அனுபவமும் இருப்பதுடன் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். ஆரம்ப சம்பளம் மாதம் வழங்குவதுடன் பிற சலுகைகளும் உண்டு. (C-2022)

தொ.பே: 0771681697, 0766205322

---

## கல்யாண மாலை

[சர்வதேச திருமண சேவை]

**T.P: 021 720 1005**



இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

Email:Kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

---

## ஆட்கள் தேவை

பிரபல இரும்புப் பொருள் விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்பு: சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ், இல. 55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-2013)

---

## சுன்னாகத்தில்....

# Techno World

(சிவன்கோவில் முன்பாக)

## A/L தொழில்நுட்பப் பிரிவு

**எமது நிறுவனத்தின் கடந்த கால சாதனைகள்**

- A/L 2017 இல் தேசிய அளவில் 60இற்கும் மேற்பட்ட மாணவர்களை தொழில்நுட்ப பீடத்துக்கு அனுப்பிய ஒரே ஒரு கல்வி நிறுவனம்.
- A/L 2018 மாணவர்களுக்கான மாதாந்த பரீட்சை, மீட்டல் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.
- A/L 2019 முதல்நிலைப் பாடசாலைகளில் அதியுயர் புள்ளியை பெற்ற மாணவர்களை உருவாக்கியமை.
- A/L 2020 மாணவர்களுக்கான முதலாவது பரீட்சைகளை முடித்த பெருமையுடன்.

பொறியியல், உயிர்முறைமைகள் தொழில்நுட்ப செய்முறை வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் மூன்று மணித்தியாலங்கள் நடைபெறுகின்றது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்களால் மாத்திரமே கற்பிக்கப்படுகின்றது.

**மாணவர்களுக்கு தனிப்பாட அனுமதி உண்டு**

**A/L 2020 புதிய பிரிவு ஆரம்பம் - 01.04.2018**
**காலை 8.00 மணிக்கு**

உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் – நிறோயன்
பொறியியல் தொழில்நுட்பம் – அருண்குமார்

(C-2051)

**தொடர்பு: 077 017 5346**

---

## காணி 5 வருட வருடாந்த குத்தகைக்கு

461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் *(ஆரியகுளச் சந்திக்கு அருகாமையில், புகையிரத நிலையத்துக்கு நேர் எதிராக, ஆயுள்வேத கல்லூரி முன்பு இயங்கிய)*

8 பரப்பு 1.7 குளி காணியும், கட்டடமும் வருடாந்த குத்தகை அடிப்படையில் 5 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்படும். தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சிறந்த அமைவிடமும் இடவசதியும் கொண்டது.

**தொடர்பு: 0750412552** (3392)

---

## தேவை

கோன் பிஸ்கட் பொதிக்கள் செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை. (3427)

**தொடர்புகளுக்கு : 077 873 6561**

---

## உடனடி வேலை வாய்ப்பு

### V2 TRAVELS



**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்திலேயே இலவசமாக கற்பித்து வேலையும் கொடுக்கின்றோம்

5,000/= (பயிற்சியின் போது) / 15,000/= (பயிற்சியின் பின்னர்)

தகுதி :-40 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் சுதன உழைப்பாளிகளை எதிர்பார்க்கின்றோம்.

நேர்முகத்தேர்வு - 31-03-2018 சனிக்கிழமை காலை 10 மணி

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்)

**0768226241**

(C-1987)

---

## விரைவு பொதிகள் சேவை

**விசேட விலை குறைப்பு**



DELIVERY IN 3 - 5 DAYS

**UK - 550*/=Kg**
**கனடா-1050*/=Kg**

தொடர்புகளுக்கு
**0768226240**

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS

(C-1982)

---

## வின்னா கல்வி நிறுவனம்

**52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்**

**T.P. 077 662 9137**

அன்றும் இன்றும் என்றுமே **O/L Day Class** தனித்துவம் வாய்ந்தது

# O/L Day Class

**8 மணி To 2 மணி ஆரம்பம் 04.04.2018 கா.நே. 8 மணி**

- கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தும் ஒரே நிறுவனம்
- யாழ். நகரில் Day Class இங்கு மட்டுமே
- பிரிவு I 60 மாணவர்களுக்கு மட்டும்
- 40 வருட தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
- 03.04.2018 முன் அனுமதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்
- பாடசாலை மாணவர்களுக்கு சனி, ஞாயிறு
- பிரிவு II மிக விரைவில்

ஆண்டு 06 தொடக்கம் O/L வரை 8.00 மணி தொடக்கம் 2 மணி. அனுமதிகள் வழங்கப்படுகிறது.

(C-2043)

---

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
*(இரு இடங்களிலும்)*

# A/L 2020

*கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் பிரிவு 02*

**ஆரம்பம் 01.04.2018 (ஞாயிறு)**

| | யாழ்நகரில் | சுன்னாகத்தில் |
|---|---|---|
| வர்த்தகப்பிரிவு | 8.00 am | 2.00 pm |
| கலைப்பிரிவு | 8.00 am | 8.00 am |
| தொழில்நுட்பம் | 9.00 am | 2.00 pm |

Note : எமது மற்ற நிறுவனமான **BARATHY** சித்தன் கேணியிலும் இதே திகதியில் கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பமாகின்றன. விரும்பிய இடங்களில் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். (C-2046)

---

யாழ் நகர் (வேம்படிச்சந்தி)
காலை :- 8.00

# DCM

ஸ்ரேசன் வீதி → சுன்னாகம்
மாலை :- 3.00



A/L 2020

## கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

புதிய பிரிவுகள் (ஆரம்பம் - நாளை)

**இரு இடங்களிலும் ஆரம்பமாகின்றது.**
**(யாழ். முன்னணி ஆசிரியர் குழாமுடன்)**

(C-2049)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.